www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு

மேல்நிலை முதலாம் ஆண்டு

தொழிற்கல்வி

அடிப்படை இயந்திரவியல்

கருத்தியல் & செய்முறை

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

0_XI_TM_BME_Tamil_FM_2022.indd 1 25-01-2023 10:31:37

www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2018

திருத்திய பதிப்பு – 2019, 2022, 2023

மறுபதிப்பு – 2020, 2021, 2024

(புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

0_XI_TM_BME_Tamil_FM_2022.indd 2 26/12/2023 14:56:05

www.tnschoolbooks.in

முகப்புரை

மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு "**அடிப்படை இயந்திரவியல்**" என்ற புதிய பாடப்புத்தகத்தை வழங்குவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினரின் ஆதரவு மற்றும் உதவிக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மாணவர்கள், அடிப்படைக் கருத்துகளை தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில், மிகுந்த கவனத்துடன் இந்தப் பாடப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட தகவல்களை அளிப்பதோடு மட்டுமல்லாமல், நவீன தொழில் நுட்பங்களும் கூடுதலாக உள்ளடக்கியுள்ளது.

பாடம் சம்மந்தப்பட்ட தகவகல்களை மாணவர்கள் விரும்பும் வகையில் தகவல்கள், உங்களுக்குத் தெரியுமா, செயல்பாடுகள், மேற்கொள்கள், இணைய தேடுதளம், மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய வரைபடத்துடன் கூடிய முப்பரிமாண படங்கள் ஆகியவை சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளன. பாடபுத்தகத்தின் இறுதியில் மாதிரி வினாத்தாள் தரப்பட்டுள்ளது. இயந்திரத்தின் பல்வேறு பாகங்களை நன்றாகப் புரிந்து கொள்வதற்கும் செய்முறை மூலமாகக் கற்றுக் கொள்வதற்கும் அதற்கான பயிற்சிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள "மாணவர்களுக்கான பயிற்சி", கற்றலில் கூடுதல் தகவல்களை தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். மேலும் மாணவர்கள் பகுப்பாய்வுத் திறன்களைப் பெறுவதற்கும் அவர்களின் புரிதலை மேம்படுத்துவதற்கும், தேர்வினை எதிர்கொள்ளவும் மிகவும் உதவியாக இருக்கும்.

பழைய தலைப்புகள் தொடர்பான புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும், தொழில்சார் கல்விக்குத் தேவையான புதுமையான எண்ணங்களைப் பெறவும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாக அடிப்படை இயந்திரவியல் பாடப்புத்தகம் அமைந்துள்ளது.

மேலும் கற்றலுக்கு உதவுவதற்காக, ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் மேற்கோள் புத்தகங்கள் மற்றும் வலைத்தளங்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

தங்கள் மேலான விமர்சனங்களையும் பாடப்புத்தகத்தை மேம்படுத்த ஆலோசனைகளையும் அளித்து தவறுகள் இருப்பின் திருத்த வழிமுறைகளையும் வரவேற்கிறோம்.

அடிப்படை இயந்திரவியல் பயிலும் தொழிற்கல்வி மாணவர்கள் எதிர்காலத்தில் தொழிற்துறையில் உடனடி வேலை வாய்ப்பினைப் பெற்றிட மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து அடிப்படை இயந்திரவியல் பாடப் புத்தகத்தினை திருத்தி வடிவமைத்துள்ளது. தேசிய மற்றும் மாநில திறன் மேம்பாட்டுத் துறை ஒவ்வொரு மாணவரையும் செய்முறைத் திறனாய்வு செய்து சான்றிதழ் வழங்குகிறது.

0_XI_TM_BME_Tamil_FM_2022.indd 3 25-01-2023 10:31:38

பொருளடக்கம்

அலகு எண்	பாடத் தலைப்பு	பக்க எண்	மாதம்
பாடம் 1	பணிமனைப் பொறியியல் பாதுகாப்பு குறிப்புகள்	01	ஜூன்
பாடம் 2	பொறியியல் வரைபடம்	14	ஜூன்
பாடம் 3	ஆட்டோகேட் (AUTOCAD)	42	ஜூலை
பாடம் 4	தர நிர்ணயம்	53	ஆகஸ்டு
பாடம் 5	வார்ப்பகம்	61	ஆகஸ்டு
பாடம் 6	பொறியியல் பொருட்கள் மற்றும் வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்தல்	72	செப்டம்பர்
பாடம் 7	கைக்கருவிகள் மற்றும் அளக்கும் கருவிகள்	86	அக்டோபர்
பாடம் 8	இணைப்புப் பொருட்கள்	111	நவம்பர்
பாடம் 9	சுழலும் சக்தியைக் கடத்துதல்	121	டிசம்பர்
பாடம் 10	மின்னியல்	133	டிசம்பர்
	செய்முறை	145	

RKBAX

மின்னூல்

P8D3X

மதிப்பீடு

0_XI_TM_BME_Tamil_FM_2022.indd 4 25-01-2023 10:31:38

www.tnschoolbooks.in

பாடம்
1

பணிமனைப் பொறியியல்– பாதுகாப்பு குறிப்புகள்

கற்றலின் நோக்கம்

இயந்திரப்பணியாளர் மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றிற்கான பாதுகாப்பு குறிப்புகள், விபத்துகள், 5S– இன் கருத்துகள் முதல் உதவி, முதல் உதவிப் பெட்டியில் உள்ள பொருட்கள், கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்புமுறை ஆகியன பற்றி தெரிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

1.1 அறிமுகம்
1.2. தொழிற்சாலை
1.3. இயந்திரப் பணியாளர் மற்றும் கடமைகள்
1.4. விபத்து மற்றும் அதன் காரணங்கள்
1.5. பாதுகாப்பு
1.6. 5S– இன் கருத்துகள்
1.7. முதலுதவி மற்றும் முதலுதவி பெட்டியில் உள்ள பொருட்கள்
1.8. கழிவு மேலாண்மை
1.9. சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்புமுறை

T06YX

1.1 அறிமுகம்

- பொறியியல் துறையில், உலகம் முழுவதும் வியப்பூட்டும் வகையில் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப முறைகளுக்கேற்ப பெரும்புரட்சி ஏற்பட்டுள்ளது.
- நம் இல்லத்தில் ஆரம்பித்து பணிபுரியும் இடம், அலுவலகங்கள், வணிகவளாகங்கள், தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள் என எல்லா இடங்களிலும் ஏதேனும் ஒரு வகை இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இயந்திரங்கள் இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்ற நிலையில் நம் வாழ்வோடு இயந்திரங்கள் ஒன்றி விட்டன.
- வீடுகளில் பயன்படுத்தப்படும் மிக்சி, கிரைண்டர், குளிர்சாதன பெட்டி, முதற்கொண்டு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் பெரிய இராட்சத இயந்திரங்கள் வரை பல நாடுகளில் பல இடங்களில் தயாரிக்கப்படுகிறது.
- மனிதனின் தேவைக்கேற்ப பல்வேறு இயந்திரங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தியில் தட்டுப்பாடு வராமல் தவிர்க்கும் பொருட்டு இயந்திரங்களை இயக்கி, உற்பத்தியைப் பெருக்க அதிக அளவில் இயந்திரப்பணியாளர்கள் (Machinist) தேவைப்படுகிறார்கள்.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 1 25-01-2023 10:34:21

- இதற்காக பெரும்பாலான நாடுகள் சிறப்பான, சரியான மற்றும் போதுமான பயிற்சிகளைத் கொடுத்து திறமைமிக்க இயந்திரப் பணியாளர்களை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது.

1.2 தொழிற்சாலை

கடைசல் இயந்திரம், துளையிடும் இயந்திரம், மில்லிங் இயந்திரம் போன்ற பல வகையான இயந்திரங்கள் மற்றும் கைக்கருவிகள், வெட்டுக்கருவிகள் போன்ற கருவிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் இடத்தை தொழிற்சாலை என்கிறோம்

தொழிற்சாலைகளின் வகைகள்

தேவை மற்றும் பயன்பாட்டிற்கேற்ப பல தொழிற்சாலைகள் உள்ளன அவை

1. சிறு முதலீட்டுத் தொழிற்சாலைகள் (Small Scale Industries)
2. நடுத்தர முதலீட்டுத் தொழிற்சாலைகள் (Medium Scale Industries)
3. அதிக முதலீட்டுத் தொழிற்சாலைகள் (Large Scale Industries)

1.3 இயந்திரப் பணியாளர்

பணிமனையில் உள்ள அனைத்து விதமான இயந்திரங்களையும், கைக்கருவிகளையும் பயன்படுத்தி உலோகப் பணிப்பொருளில், தேவையான பொருட்களை உருவாக்குபவரே இயந்திரப் பணியாளர் ஆவார்.

இயந்திரப் பணியாளர்

இயந்திரப் பணியாளரின் கடமைகள்

- பணிமனையில் உள்ள அனைத்து விதமான கைக்கருவிகளையும், இயந்திரங்களையும் இயக்கத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
- முக்கியமாக வரைபடத்தைப் பார்த்து பொருளின் உண்மையான வடிவம் என்ன, எவ்வகை உலோகத்தால் ஆனது, கொடுக்கப்பட்டுள்ள அளவுகள் ஆகியவற்றை தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்கு 100% வரைபடம் பற்றிய குறிப்புகள் அனைத்தையும் முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.
- இயந்திரங்களை பராமரித்து, பக்குவமாக பயன்படுத்துதல் வேண்டும்.
- இயந்திரத்தின் உறுதி, செய்யப்படும் உலோகப் பணிப்பொருளின் தன்மை மற்றும் பயன்படுத்தும் வெட்டுளி ஆகியவற்றை பொறுத்து, வெட்டும் வேகம், ஊட்டம், வெட்டும் ஆழம் ஆகியவற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
- பணிபுரியும் தொழிற்சாலையின் முழு முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

1.4 விபத்து மற்றும் அதன் காரணங்கள்

எதிர்பாராமல் நடக்கும் அசம்பாவிதங்களையும், அதனால் ஏற்படும் பொருட்சேதம் மற்றும் உயிர் சேதங்களையும் நாம் விபத்து என்கிறோம். விபத்து என்பது தொழிற்சாலைகளில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும், ஏதேனும் ஒரு வகையில் ஏதோ ஒரு காரணத்தால் நடைபெறுகிறது. இவற்றிற்கெல்லாம் முக்கியக் காரணம் கவனக்குறைவும் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு குறைபாடுகளைச் சரி செய்யாமையே ஆகும்.

விபத்திற்கான காரணங்கள்

இயந்திரங்களில் பணியாற்றும் போது முழு கவனம் செலுத்தினால் பெரும்பாலான விபத்துக்களைத் தவிர்க்கலாம். பொறியியல் துறையில் கீழ்க்கண்ட காரணங்களால் பெரும்பாலும் விபத்து ஏற்படுகிறது.

- வேலையின் போது கவனக் குறைவு, தேவையின்றி பேசுதல்.
- பணியில் விருப்பமின்மை, கவலை, சோம்பல்.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 2 25-01-2023 10:34:22

- ஓய்வின்மை, தூக்கமின்மை.
- செய்ய வேண்டிய வேலையை பற்றிய அனுபவ மின்மை.
- செய்ய வேண்டிய வேலையில் அவசரம் காட்டுதல்.
- குறைந்த காலத்தில் அதிக பணம் சம்பாதிக்க நினைத்தல்.
- உடல் ஒத்துழைப்பின்றி வேலை செய்தல்.
- சரியான கைக்கருவிகளைப் பயன்படுத்தாமை.
- பணிபுரியும் இடத்தில் போதிய வசதியின்மை.
- சுற்றுப்புறச் சூழல் குறைபாடு.
- பொருத்தமற்ற, தொள தொளவென ஆடைகள் அணிதல்.

1.5 பாதுகாப்பு

பாதுகாப்பு என்பது விபத்து மற்றும் அசம்பாவிதம் எதுவும் நடந்து விடாமல் இருக்க மிகவும் எச்சரிக்கையுடனும், கவனத்துடனும், நடந்து கொள்ளுதல் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றி நடத்தல் போன்றவையே பாதுகாப்பு ஆகும்.

பாதுகாப்பு பொருட்கள்

நம் அன்றாடத் தேவைகளுக்கேற்ப புதுப்புது இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வெளிவந்த வண்ணம் உள்ளது. இயந்திரங்களின் வரவு நமக்கு மிகுந்த நன்மை பயப்பவை என்றாலும் அவை ஆபத்தையும் விளைவிக்கக் கூடியவை. பெரும்பாலான தொழிற்சாலைகளில் அன்றாடம் ஏதேனும் ஒரு விபத்து நடைபெறுகிறது அவை சிறிய அல்லது பெரிய விபத்தாகவும் இருக்கலாம். மனித உயிர் விலை மதிப்பற்றது. அதை பாதுகாத்துக்கொள்ள எல்லா விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுத்தல் அவசியம்.

பணிமனையில் பாதுகாப்பு என்பது ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்

1. பணிமனைக்கான பாதுகாப்பு குறிப்புகள்.
2. கைக்கருவிகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள்.
3. இயந்திரங்களுக்கான பாதுகாப்பு குறிப்புகள்.
4. இயந்திரப் பணியாளருக்கான பாதுகாப்பு குறிப்புகள்.
5. தீ பாதுகாப்பு

1.5.1 பணிமனைக்கான பாதுகாப்பு குறிப்புகள்

- உருளை வடிவப் பொருட்கள், கூர்மையான கருவிகள், தேவையற்ற பொருட்கள் போன்றவற்றை நடைபாதையில் வைத்தல் கூடாது.
- போதுமான அளவு வெளிச்சம் மற்றும் காற்றோட்ட வசதி உள்ள இடத்தில் இயந்திரங்களை அமைத்தல் வேண்டும்.
- எண்ணெய் மற்றும் கிரீஸ் போன்றவை தரையில் சிந்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்களை (பெட்ரோல்,டீசல், பஞ்சு) பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.
- சூடான பொருட்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் "சுடும் தொடாதே" என்ற எச்சரிக்கை பலகை வைத்தல் அவசியம்.
- உரிய மருந்துகளுடன் முதலுதவிப் பெட்டி எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

15.2 கைக்கருவிகளுக்கான பாதுகாப்பு குறிப்புகள்

- தளர்ச்சியற்ற கைப்பிடி கொண்ட அரம், சுத்தியல், மற்றும் திருப்புளி ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- சுத்தியல், வெட்டிரும்பு, உளி போன்றவற்றின் தலைப்பாகத்தில் பிசிறு, எண்ணெய், கிரீஸ் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- அளவுக் கருவிகளை பயன்படுத்திய பின் அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டும்.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 3 25-01-2023 10:34:22

- அளக்கும் கருவிகளை மென்மையாக கையாண்டால் அதன் ஆயுள் நீடிக்கும்.
- சரியான வேலைக்கு சரியான கைக்கருவிகளை பயன்படுத்த வேண்டும். சரியான கருவிகள் கிடைக்காதபோது அதற்கு பதில் வேறு கருவிகளை பயன்படுத்தக் கூடாது.
- சுழலும் மற்றும் நகரும் பொருள்களின் மீது அளவுகள் எடுப்பதோ , குறிப்பதோ கூடாது.
- அரம், உளி, சுரண்டி போன்ற கீறல் ஏற்படுத்தும் கைக்கருவிகளை மற்ற கைக்கருவிகளுடன் சேர்த்து வைக்கக் கூடாது.

1.5.3 இயந்திரங்களுக்கான பாதுகாப்பு குறிப்புகள்.

- இயந்திரங்களை பொருத்தும் போதும், இடம் மாற்றும் போதும், சரியான பேக்கிங் துண்டு வைக்க வேண்டும்.
- பணியாளர் தனக்கு நன்கு இயக்கத் தெரிந்த இயந்திரங்களை மட்டுமே இயக்க வேண்டும்.
- இயந்திரத்தின் உறுதிக்கேற்ப ஊட்டம், வெட்டும் வேகம், வெட்டும் ஆழம் ஆகியவற்றை தர வேண்டும்.
- இயந்திரங்களில் உள்ள குறைபாடுகளை, பணியாளர் எக்காரணத்தைக் கொண்டும் சரி செய்யக் கூடாது. அதற்கென உள்ள சிறப்பு வேலையாட்களை வைத்து சரி செய்ய வேண்டும்.
- இயந்திரங்களில் ஏதேனும் வித்தியாசமான சப்தம் ஏற்பட்டால் உடனே இயந்திரத்தை நிறுத்தி விட வேண்டும்.
- பழுதடைந்துள்ள இயந்திரங்களின் மேல் "பழுதடைந்துள்ளது" என்று எழுதி வைக்க வேண்டும்.
- இயந்திரம் இயங்கிக் கொண்டிருக்கும் போது, வேகத்தை அதிகப்படுத்துதல், உயவிடுதல், பெல்ட் மாற்றுதல் போன்ற பணிகளைச் செய்யக்கூடாது.
- இயந்திரக் கருவியை முறையாகப் பராமரிக்க வேண்டும், திட்டமிடப்பட்ட பராமரிப்பை தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

1.5.4 இயந்திரப் பணியாளருக்கான பாதுகாப்பு குறிப்புகள்

- கழுத்துப் பட்டை அணியக் கூடாது.
- துடைப்பதற்கான சிறு துண்டு துணிகளை கையில் வைத்திருக்கக் கூடாது.
- இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரத்தைத் தொடவோ,அதன்மீது சாய்ந்து நிற்கவோ கூடாது.
- பணியாளர் தளர்ந்த ஆடைகளை அணியக் கூடாது.
- அரைப்புச் செய்தல், பற்ற வைத்தல் ஆகிய செயல்களைச் செய்யும் போது பாதுகாப்பு கண்ணாடிகளை அணிய வேண்டும்.
- சூடான பொருட்கள், கூர்மையான பொருட்கள், மின் சாதனங்கள் ஆகியவற்றைக் கையாளும் போது கையுறைகளை அணிய வேண்டும்.
- தோலினாலான காலணிகளை மட்டுமே அணிய வேண்டும்.
- தொங்கும் அல்லது பாதுகாப்பற்ற மின் இணைப்புகளை தொடக் கூடாது.
- எடை அதிகமுள்ள பொருட்களையும், உடையும் தன்மையுள்ள பொருட்களையும் கையாளும் போது உதவிக்கு பிறரை நாடுதல் அவசியம்.
- எக்காரணத்தைக் கொண்டும் பாதுகாப்பு சாதனங்களைப் பொருத்தாமல் இயந்திரங்களை இயக்கக் கூடாது.
- பணிமனையில் ஓடுதல், விளையாடுதல், தேவையில்லாமல் பேசுதல், போன்ற செயல்களில் ஈடுபடுதல் கூடாது.
- இயந்திரத்தை இயக்கும்போது கட்டாயமாக இயந்திரப் பணியாளர் தலைக்கவசம், முகக்கவசம், செவிக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.
- ஒரு இயந்திரப் பணியாளர் 'முதல் உதவியை' பற்றி அவசியம் அறிந்திருக்க வேண்டும்.

1.5.5 தீ பாதுகாப்பு

தீ பாதுகாப்பு என்பது தீயினால் ஏற்படும் அழிவைக் குறைப்பதற்கான நடைமுறைகளின் தொகுப்பாகும். தீ பாதுகாப்பில் கட்டுப்பாடற்ற தீ

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 4 25-01-2023 10:34:22

பரவலை தடுக்கும் நோக்கமும், தீ ஏற்பட்ட பிறகு அதன் வளர்ச்சி மற்றும் விளைவுகளை குறைக்கப் பயன்படும் செயல்களும் அடங்கும்.

தீ அணைப்பான் என்பது ஒரு எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய சாதனம் ஆகும், இது ஒரு ஜெட் அமைப்பு ஆகும். இது நீர், நுரை, வாயு அல்லது பிற பொருளை வெளியேற்றி தீயை அணைக்கும்.

வகுப்பு A – தீ அணைப்பான் (Class A fire extinguishers): வகுப்பு A தீ அணைப்பான் காகிதம், மரம், துணி மற்றும் சில வகையான பிளாஸ்டிக் போன்றவற்றில் ஏற்படும் சாதாரண தீயை அணைக்க பயன்படுத்தப்படுகிறது. இந்த தீ அணைப்பான்களில் பொதுவாக நீர் அல்லது சில வகையான உலர்ந்த இரசாயனங்கள் பயன்படுத்துகின்றன.

வகுப்பு B – தீ அணைப்பான் (Class B fire extinguishers): வகுப்பு B தீ அணைப்பான் எரியக்கூடிய திரவங்கள் மற்றும் வாயுவிலிருந்து தோன்றும் தீயை அணைக்க பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் அல்லது எரிபொருளால் ஏற்படும் தீயை அணைக்க வகுப்பு B தீ அணைப்பானை பயன்படுத்த வேண்டும்.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 5 25-01-2023 10:34:22

www.tnschoolbooks.in

Fire Extinguisher

வகுப்பு C – தீ அணைப்பான் (Class C fire extinguisher): வகுப்பு C தீ அணைப்பான் மின் கம்பிகள், பேனல்கள் மற்றும் சர்க்யூட் பிரேக்கர்களில் இருந்து வரும் தீயை அணைக்க பயன்படுத்தப்படுகிறது. இந்த தீ அணைப்பான்கள் மின்சாரம் கடத்துவதை நிறுத்தும் பொருட்களை, வெளியிடுவதன் மூலம் தீயை அணைக்கிறது.

வகுப்பு D – தீ அணைப்பான் (Class D fire extinguisher): வகுப்பு D தீ அணைப்பான் எரியக்கூடிய உலோகங்களில் ஏற்படும் தீயை அணைக்கப் பயன்படுத்தப்படுகிறது. மெக்னீசியம், சோடியம், அலுமினியம் மற்றும் டைட்டானியம் போன்றவை எரியக்கூடிய உலோகங்களில் அடங்கும்.

HOW TO USE A FIRE EXTINGUISHER



How to use a Fire Extinguisher

1.6 5S–ன் கருத்துக்கள்

5S அமைப்புமுறை என்பது பணியிடத்தை ஒழுங்கமைப்பதற்கான லீன் உற்பத்தி முறைகளில் (Lean Manufacturing tool) ஒன்றாகும். இது சுத்தமான, ஒழுங்கான மற்றும் பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குகிறது, இது கழிவுகள், விபத்துகள் ஆகியவற்றை குறைக்கவும், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. 5Sஆனது டொயோட்டா உற்பத்தி அமைப்பின் (Toyota Production System) ஒரு பகுதியாக உருவானது. Toyota Production System, TPS என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

5S–ன் நோக்கம் :

5S அமைப்பு முறையானது ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு இடத்தை வரையறுத்துக் கொடுப்பதிலும் மற்றும் அப்படி வரையறுத்துக் கொடுக்கப்பட்ட இடத்தில் அப்பொருளை தொடர்ந்து வைத்துப் பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது. சுலபமாக புரிந்து கொள்ள பின்வருமாறு சொல்லலாம்.

> "அனைத்திற்கும் ஓர் இடம்
> அனைத்தும் அதற்குரிய இடத்தில்"

5S இன் தேவை :

5S அமைப்பு முறையை நாம் கடைபிடிப்பதால் நம் வேலை நேரத்தை வீணாக்காமல், சரியான நேர அளவில், விபத்தின்றி சுலபமாக செய்து முடிக்க முடியும். பணியிடம் சுத்தமாகவும், ஒழுங்காகவும் இல்லாவிட்டால் தொடர்ந்து நல்ல உற்பத்தியை நீண்ட காலத்திற்கு செய்வது கடினமாகிவிடும்.

5S இன் படிகள் :

படி எண்.	ஆங்கில மொழியில் படியின் பெயர்
1S	Sort – வகைப்படுத்துதல்
2S	Set in order – வரிசைப்படுத்துதல்
3S	Shine – சுத்தமாக வைத்திருத்தல்
4S	Standardize – தரநிர்ணயம்
5S	Sustain – தக்கவைத்தல்

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 6 25-01-2023 10:34:24



படி 1S : வகைப்படுத்துதல் (Sort)

நம்மிடம் உள்ள அனைத்துப் பொருட்களையும் நன்கு கவனித்து பார்த்து, தேவையானவற்றையும், தேவையில்லாதவற்றையும் பிரித்து வைக்க வேண்டும். அடுத்த படிக்கு தேவையான பொருட்களை மட்டும் வைத்துவிட்டு, தேவையில்லாத பொருட்களை அதன் தன்மைக்கேற்ப அப்புறப்படுத்த வேண்டும். நம்மிடம் உள்ளவை கருவிகள், உபகரணங்கள், கையேடுகள் போன்றவையாக இருக்கலாம்.

வகைப்படுத்துதல் படியை செய்து முடிக்க, பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம் :

அ) இந்தப் பொருளின் உபயோகம் என்ன?
ஆ) இந்தப் பொருளை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோமா?
இ) இந்தப் பொருளை யார் பயன்படுத்துகிறார்கள்?
ஈ) இந்தப் பொருளை நாம் எப்போது கடைசியாகப் பயன்படுத்தினோம்?
உ) இந்தப் பொருள் இங்கே வைக்கப்பட வேண்டிய அவசியம் என்ன?

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் ஒவ்வொரு பொருளின் உபயோகத்தையும் நமக்கு தெளிவாக அறிய உதவும், இங்கு எந்தெந்த பொருட்கள் தேவைப்படுகின்றன என்பதை நாம் சரியாக அறிந்து கொள்வோம். தேவையில்லாத பொருட்களை அதன் தன்மைக் கேற்ப அப்புறப்படுத்த வேண்டும்.

படி 2S : வரிசைப்படுத்துதல் (set in order)

வகைப்படுத்துதல் படியை நாம் மிகச் சரியாக செய்து முடித்துவிட்டதால், இப்போது நமக்குத் தேவையான பொருட்கள் மட்டுமே பணியிடத்தில் இருக்கும்.

இப்போது தேவையான பொருட்களை செயல்முறை, பயன்படுத்தும் நபர்கள், அடிக்கடி பயன்படுத்துகிறோமா இல்லையா, பொருளின் எடை, பொருளின் அளவு மற்றும் வடிவம் போன்றவற்றை கருத்தில் கொண்டு சரியான தொடர்புடைய வரிசையில் ஒழுங்கமைக்கவும். வரிசைப்படுத்துதல் படியை எளிதாகச் செய்து முடிக்க, பின்வரும் கேள்விகளைக் கேட்லாம்.

அ) எந்தெந்த பொருட்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன?
ஆ) இந்தப் பொருட்களை யார் யார் பயன்படுத்துகிறார்கள்?
இ) பொருட்கள் எப்போது பயன்படுத்தப்படுகின்றன?
ஈ) பொருட்களுக்கு ஏதேனும் குழுவாக்கம் தேவையா?
உ) ஏதேனும் செயல்முறை வரிசையைப் பின்பற்ற வேண்டுமா?
ஊ) சேமிப்பு கொள்கலன்கள் ஏதேனும் தேவையா? ஆம் எனில் எத்தனை கொள்கலன்கள் தேவைப்படும்?
எ) தேவைப்படும் சேமிப்பு கொள்கலன்களின் அளவுகள் என்னென்ன?

மேற்கண்ட கேள்விகளின் பதில்களானது செய்யவேண்டிய பணிகள், குறிப்பிட்ட பணியானது அடிக்கடி செய்யப்படுகிறதா இல்லையா, நபர்கள் நடமாடும் பாதை, சேமிப்பகத்தின் உயரம், பொருளின் எடை போன்றவற்றை உள்ளடக்கிய சரியான ஏற்பாட்டு வரிசையை நமக்கு அறிய உதவும்.

இரண்டாவது படியின் முடிவில், தேவையான பொருட்கள் மட்டும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சேமிக்கப்படுகின்றன. இது பொருட்களை சுலபமாக அடையாளம் காணவும், எளிதாகப் பயன்படுத்தவும் உதவுகிறது.

படி 3S : சுத்தமாக வைத்திருத்தல் (Shine)

5Sஇன் படி வேலையைத் தொடங்குவதற்கு முன், பணி இடத்தை வழக்கமான அடிப்படையில் (தினமும்) சுத்தம் செய்வதில் கவனம் செலுத்துகிறது. கருவிகள், உபகரணங்கள், இயந்திரங்கள், பணி மேசைகள், கணினிகள், பிரிண்டர்கள், தரைசுத்தப்படுத்துதல் போன்றவை இதில் அடங்கும்.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 7 25-01-2023 10:34:24

தொடர்ச்சியாக இதை நாம் செய்யும் போது பொருட்கள் உட்பட அனைத்தும் எப்போதும் சுத்தமாக இருக்கும். அதுமட்டுமின்றி தளர்வான நட்டு, சேதமடைந்த மின்சார கம்பி, விரிசல் போன்றவற்றை முன் கூட்டியே கண்டறிந்து சரி செய்வதற்கும் இது உதவும். இதனால் விபத்துகள் நிச்சயம் குறையும்.

படி 4S : தரநிர்ணயம் (Standardize)

இதில் வகைப்படுத்துதல், வரிசைப்படுத்துதல் மற்றும் சுத்தமாக வைத்திருத்தல் ஆகிய படிகளில் செய்துமுடித்தஅனைத்துமாற்றங்களும்நிலையாக செயல்பாட்டு செயல்முறையில் (Standard Operating Procedure,SOP) சேர்க்கப்படும். அவ்வாறு செய்வதின் மூலம், வரையறுக்கப்பட்ட படிகளை வழக்கமான அடிப்படையில் பின்பற்றுவது கட்டாயமாக்கப்படுகிறது.

படி 5S : தக்கவைத்தல்(Sustain)

5S பயன்பாட்டை நிறுவனத்தின் கலாச்சாரத்தில் ஐக்கியப்படுத்தி தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்றுவதே தக்கவைத்தலின் நோக்கமாகும். வகைப்படுத்துதல், வரிசைப்படுத்துதல், சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் நிலைப்படுத்துதல் ஆகியவற்றை தினமும் தொடர்ந்து பின்பற்றும் நிலையை இது உருவாக்குகிறது.

ஒவ்வொரு நிறுவனத்திலும் உள்ள உயர் நிர்வாகம் முதல் தொடக்க நிலை நிர்வாகம் வரை அனைவரும் 5S படிகளைப் பின்பற்றுவதை தக்கவைத்தல் உறுதி செய்கிறது. இதனால் நிறுவனம் தொடர்ந்து நேர்மறையான முடிவுகளைத் தரத் தொடங்கும். இது ஒவ்வொரு நபருக்கும் சில கடமைகளை வரையறுத்து வழங்குகிறது. பின்பு அவற்றை தொடர்ச்சியாக கண்காணிக்கிறது.

5S இன் நன்மைகள் :

அ) பாதுகாப்பான பணிச்சூழல்
ஆ) செயல்களை சுலபமாக சிரமமின்றி செய்தல்
இ) உற்பத்தி அளவுகள் அதிகரிக்கும்
ஈ) தரநிலை மாறுபாடுகள் குறையும்
உ) செலவுகள் குறையும்
ஊ) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் நல்ல நிலையில் தொடர்ந்து இயங்கும்
எ) பணியாளர் மன உறுதி மேம்படுத்தப்படும்
ஏ) அதிகரிக்கும் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சி அல்லது திருப்தியான வாடிக்கையாளர்கள்

குறிப்பு : உண்மையில் 5S ஆனது ஆட்டோமொபைல் உற்பத்தித் துறையில் (டொயோட்டா) உருவானதாகும். 5S பயன்பாட்டின் பெரும் நன்மைகளை உணர்ந்து பிற உற்பத்தி நிறுவனங்கள், சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனங்கள், அலுவலகங்கள், சமையலறைகள் போன்றவை 5Sஐ பின்பற்றத் தொடங்கின.

1.7 முதலுதவி மற்றும் முதலுதவி பெட்டியில் உள்ள பொருட்கள்

நாம் பணிபுரியும் தொழிற்சாலை மற்றும் பணிமனையில் ஏற்படும் விபத்தை தவிர்ப்பதற்கான பாதுகாப்புகளை பற்றி பார்த்தோம். இவற்றில் ஏதேனும் ஒன்றில் சிறிய அளவு கவனம் குறைந்தால் கூட விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. இதில் பணிபுரியும் பணியாளருக்கும், தொழிற்சாலைக்கும் இழப்பு ஏற்படும்.

பணிமனையில் பணியாற்றும் போது பணியாளருக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு முன்பு, உடனடியாக அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைக்கு முதலுதவி (First Aid) என்று பெயர்.

First Aid

எல்லா தொழிற்சாலைகளிலும் மருத்துவர் அல்லது முதலுதவி படித்த உதவியாளர் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். ஆனால் எல்லா தொழிற்சாலைகளிலும் மருத்துவரோ அல்லது உதவியாளரோ இருப்பதில்லை.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 8 25-01-2023 10:34:24

www.tnschoolbooks.in

மிகப்பெரிய தொழிற்சாலைகளில் மட்டுமே இவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எனவே, தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் "முதலுதவி " பயிற்சியினை அந்தந்த நிறுவனங்கள் அளித்தல்வேண்டும்.

இவ்வாறு பயிற்சி அளிப்பதன் மூலம் விபத்தினால் ஏற்படும் உயிர்சேதம் மற்றும் பொருட்சேதங்களை தடுக்க முடியும். ஒவ்வொரு தொழிற்சாலை மற்றும் பணிமனையிலும் முதலுதவிப் பெட்டி தயார் நிலையில் எப்போதும் வைத்திருக்க வேண்டும்.

1.7.1 முதலுதவி பெட்டியில் உள்ள பொருட்கள்

1. அயோடின் – Iodine
2. டிஞ்சர் பென்சின் – Tincture Benzene
3. டெட்டால் – Dettol
4. பர்னால் – Burnol
5. போரிக் பவுடர் – Boric Powder
6. கட்டுத்துணி – Moshed Cloth
7. பஞ்சு – Cotton
8. சிறிய கத்திரி – Small Scissor
9. கத்தி – Knife
10. பிளாஸ்திரி – Plaster
11. சிறிய கலக்கி – Small Stirrer
12. கண்களைக் கழுவுவதற்கான கண்ணாடி பாத்திரம் – Glass Bowl for Washing Eyes
13. மருந்துகளை கலக்குவதற்கான கண்ணாடி பாத்திரம் – Glass bowl for mixing medicine

Materials in First Aid Box

1.8 கழிவு மேலாண்மை

கழிவு என்பது ஒவ்வொரு செயல்முறையின் இறுதியிலும் தேவையில்லாமல் எஞ்சியிருக்கும் ஒன்றாகும். உதாரணத்திற்கு,

அ). தேநீர் தயாரித்த பிறகு தேயிலை தூள் தேவையில்லாமல் எஞ்சியிருக்கும்

ஆ). இயந்திர பணி செய்து முடித்த பிறகு உலோகத் துகள்கள் தேவையில்லாமல் எஞ்சியிருக்கும்

இ). வாகனத்தை தண்ணீரில் கழுவிய பிறகு அசுத்தமான நீர் எஞ்சியிருக்கும்.

ஈ). நெகிழிப் பைக்குள் இருக்கும் பொருட்களை உபயோகப்படுத்திய பின்பு நெகிழிப்பைகள் எஞ்சியிருக்கும்.

மேலாண்மை :

வளங்களை நிர்வகிக்கும், கலை மற்றும் அறிவியலே மேலாண்மை எனப்படும். எளிமையாக சொல்ல வேண்டுமென்றால், இது எதையும் திறம்பட கையாளும் செயல்முறையாகும். உதாரணத்திற்கு, மனித ஆற்றல் மேலாண்மை, பொருள் மேலாண்மை போன்றவைகளைக் கூறலாம்.

கழிவு மேலாண்மை :

கழிவு மேலாண்மை என்பது கழிவுகளை திறம்படக் கையாளும் கலை மற்றும் அறிவியல் ஆகும். சுற்றுச் சூழலை மாசுபடுத்தாமல் கழிவுகளை அதன் தொடக்கப் புள்ளியிலிருந்து இறுதி வரை கவனமாக கையாளும் செயல்முறையே கழிவு மேலாண்மை எனப்படும்.

அசுத்தநிலை (Contamination)

எந்த ஒன்றிலும் இயற்கையாக அதிலிருக்கும் கூறுகள் மற்றும் பொருட்கள் தவிர வேறொன்று கலந்து இருந்தால் அது அசுத்தநிலை எனப்படும்.

மாசுபாடு (Pollution)

அசுத்தத்தின் அளவு அதிகமாகி மனிதர்கள், பிற உயிரினங்கள், பொருட்கள், கட்டமைப்புகள் போன்றவைகளுக்கு தீங்கு விளைவித்தால் அது மாசுபாடு எனப்படும். சுலபமாக புரிந்து கொள்ள வேண்டுமென்றால்,

> "அனைத்து அசுத்தநிலையும் மாசுபாடு அல்ல; ஆனால் அனைத்து மாசுபாடுகளும் அதிக அளவு / செறிவுகளில் அசுத்தநிலைகளைக் கொண்டுள்ளன ".

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 9 25-01-2023 10:34:24

www.tnschoolbooks.in

"All contaminations are not pollutions; but all pollutions have contaminations at higher levels / Concentrations".

கழிவுகளின் படிநிலை:

கழிவுகளின் படிநிலைகளை சுருக்கமாக 3 R என்று அழைப்போம். அவை பின்வருமாறு ,

Reduce – குறைத்தல்
Reuse – மறுபயன்பாடு
Recycle – மறுசுழற்சி

குறைத்தல் (Reduce): பொருள், செயல்முறை மற்றும் எந்த ஒன்றையும் கழிவு உற்பத்தி மிகக் குறைவாக வருமாறு வடிவமைப்பு நிலையிலேயே செய்தல் குறைத்தல் எனப்படும். ஏற்கனவே உள்ளவற்றின் பயன்பாட்டை குறைப்பதும் இதில் அடங்கும்.

மறுபயன்பாடு (Reuse): எதையும் அதன் அசல் நோக்கத்திற்காகவோ (மீண்டும் நிரப்புதல் போன்றவை) அல்லது வேறு புதிய நோக்கத்திற்காகவோ மீண்டும் பயன்படுத்துதல் மறுபயன்பாடு எனப்படும்.

மறுசுழற்சி (Recycle): கழிவுகளை அதன் தன்மைக்கேற்ப பல்வேறு செயலாக்கங்களின் மூலம் பயனுள்ள பொருளாக மாற்றுவதே மறுசுழற்சி எனப்படும்.

மக்கும் கழிவுகள் (Biodegradable Waste)

இயற்கையான முறையில் தானாகவே மக்கும் பொருட்கள் மக்கும் கழிவுகள் எனப்படும். இவற்றால் சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படாது.

உதாரணம் : எஞ்சியிருக்கும் காய்கறிகள், பழங்கள், காகிதங்கள் போன்றவை.



XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 10 25-01-2023 10:34:24

www.tnschoolbooks.in

மக்காத கழிவுகள்
(Non – biodegradable Waste)

இயற்கையான முறையில் தானாகவே மக்காதக் கழிவுகள் மக்காத கழிவுகள் எனப்படும்.

உதாரணம் : பிளாஸ்டிக் பொருட்கள், நெகிழிப்பைகள் போன்றவை.

அபாயகரமான கழிவுகள் (Hazardous Waste)

இது ஆபத்தான மூலக்கூறுகள் மற்றும் இரசாயன பண்புகளைக் கொண்ட ஒரு கழிவு ஆகும். இது உயிரினங்களுக்கு (மனிதர்கள், விலங்குகள் போன்றவை) தீங்கு விளைவிப்பதாக இருக்கும்.

உதாரணம்: அணுக்கழிவுகள், வர்ணங்கள், தின்னர்கள், உயவு எண்ணெய், டயாப்பர்கள் மற்றும் தோல் தொழிற்சாலை கழிவுகள் போன்றவை.

அபாயமற்ற கழிவுகள்
(Non – Hazardous Waste)

கழிவுகளானது உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இருந்தால். அவை அபாயமற்ற கழிவுகள் என்று அழைக்கப்படுகிறது.

உதாரணம் : கண்ணாடி, அட்டை போன்றவை.

> குறிப்பு : மேற்கூறியவற்றைத் தவிர கழிவுகளை மேலும் திடக்கழிவு, திரவக்கழிவு, வாயுக்கழிவு, உலர்க்கழிவு மற்றும் ஈரக்கழிவு என வகைப்படுத்தலாம்.

வண்ண குறியீடு :

பல்வேறு வகையான கழிவுகளை சேகரித்து செயலாக்க வண்ண குறியீட்டு முறை பின்பற்றப்படுகிறது.

வண்ண குறியீடு	சேமிப்பு கொள்கலன்கள்	சேகரிக்க வேண்டிய கழிவுகள்
சிவப்பு		மக்காத கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள்
பச்சை		மக்கும் கழிவுகள்
மஞ்சள்		கண்ணாடி போன்றவைகள்
கருப்பு		மின் மற்றும் மின்னணு கழிவுகள்
நீலம்		உலோகம் போன்றவைகள்

1.9 சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்புமுறை (ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM)

அனைத்து தொழில்களும் தங்கள் செயல்பாடுகளின் விளைவாக ஏற்படும் மாசுபாட்டைக் குறைப்பதற்காக சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்புமுறையை (EMS) பின்பற்றத் தொடங்கியுள்ளன.

ISO 14001 என்பது சுற்றுச்சூழல் சம்பந்தமான தர மேலாண்மையை குறிப்பதாகும். இதன் தற்போதைய பதிப்பு 2015 ஆகும். எனவே, நாம் சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்புமுறை(EMS) அல்லது ISO 14001 : 2015 தரநிலைகள் எனவும்அழைக்கலாம். ISO என்பதன் விரிவாக்கம் International Organisation for standardisation என்பதாகும். இதை தமிழ் மொழியில் சர்வதேச தரநிர்ணய அமைப்பு என்று கூறுவோம்.

இந்த ISO 14001:2015 தரநிலையின் நோக்கம், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக்கூடிய மற்றும் மாறிவரும் சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப மேம்படுத்திக்கொள்ளக்கூடிய கட்டமைப்பை நிறுவனங்களுக்கு வழங்குவதாகும். இது PDCA மாதிரியைப் பின்பற்றுகிறது. P என்பது Plan, D என்பது Do, C என்பது Check மற்றும் A என்பது Act ஆகும்.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 11 25-01-2023 10:34:25

பிடிசிஏ மாதிரி (PDCA Model)

இந்த மாதிரியை EMS மற்றும் அதன் ஒவ்வொரு தனி உறுப்புகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திட்டமிடல் (Plan): சுற்றுச்சூழல் கொள்கையை உருவாக்கவும். பிறகு சுற்றுச்சூழலை பாதிக்கும் அம்சங்களைக் கண்டறிந்து அதற்கேற்றார்போல அதன் நோக்கங்கள், செயலாக்க இலக்குகள் மற்றும் செயல்முறைகளை வகுப்பதுவுமே திட்டமிடல் எனப்படும்.

செய்தல் (Do): திட்டமிடப்பட்ட செயல்முறைகளை அப்படியே உறுதியாக செய்தல் வேண்டும்.

சரிபார்த்தல் (Check): செயல்முறைகளையும் அதன் முடிவுகளையும் தொடர்ந்து கண்காணித்து, அளவிட்டு பின் சரிபார்க்க வேண்டும். தேவையெனில் மறுபரிசீலனை செய்ய வேண்டும். முடிவுகள் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் இருக்கிறதா என்று சரிபார்ப்பதே இதன் நோக்கமாகும்.

தொடர்ந்து செயல்படுத்துதல் (Act): சுற்றுச்சூழல் மாசுபாடுகளை மென்மேலும் குறைக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து செயல்படுத்துதல் இதன் நோக்கமாகும்.

> குறிப்பு : ஒரு அரசு அல்லது அரசு சாரா அமைப்பின் சூற்றுச்சூழல் கொள்கை என்பது சுற்றுச்சூழல் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை எந்தவித விதிமீறலும் இல்லாமல் கண்டிப்பாக பின்பற்றுவதற்கான உறுதிமொழி ஆகும். இது ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொன்றுக்கு அவர்களின் செயல்முறைகளின் அடிப்படையில் மாறுபடும்.

செயல்பாடுகள்

- முதலுதவி பெட்டி தயார்செய்தல்.
- தீவிபத்து மற்றும் தீக்காயங்களுக்கு எந்த விதமான முதல் உதவி செய்ய வேண்டும் என்பதை விளக்கி அறிக்கை தயார் செய்தல்.
- புத்தக பையில் 5s படிநிலையை தினசரி பயன்படுத்த, தினசரி செய்முறை, கருத்தியல் சம்மந்தமான படி நிலைகளை தயார் செய்தல், தினமும் புத்தகம் எழுதுபொருட்கள் போன்றவற்றை 5s பயன்படுத்தி செயல்படுத்துதல்.

சொற்களஞ்சியம்

Revolution	புரட்சி
Technique	நுட்பம்
Modern	நவீன
Accident	விபத்து
Safety	பாதுகாப்பு
First Aid	முதலுதவி
Workshop	பணிமனை
Gross Domestic Product (GDP)	உள்நாட்டு மொத்த உற்பத்தி
Environment	சுற்றுச்சூழல்
Precautions	முன்னெச்சரிக்கை

www.tnschoolbooks.in

வினாக்கள்

பகுதி அ

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக (1 மதிப்பெண்)

1. தொழிற்சாலையில் பொருட்களை உற்பத்தி செய்பவர்
   அ) மேற்பார்வையாளர்
   ஆ) இயந்திர பணியாளர்
   இ) மேலாளர்
   ஈ) முதலாளி

2. இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரத்தை தொடவோ, அதன் மீது சாய்ந்து நிற்கவோ கூடாது என்ற பாதுகாப்பு
   அ) பணிமனை பாதுகாப்பு
   ஆ) கைக்கருவி பாதுகாப்பு
   இ) இயந்திர பாதுகாப்பு
   ஈ) இயந்திர பணியாளர் பாதுகாப்பு

3. முதல் உதவி என்பது
   அ) தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் முறை
   ஆ) பணியாளர் பாதுகாப்பு முறை
   இ) தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டால் கொடுக்கப்படும் உடனடி சிகிச்சை முறை
   ஈ) இயந்திர பாதுகாப்பு

4. பேக்கிங் துண்டை -------------- பயன்படுத்த வேண்டும்
   அ) இயந்திரங்கள் இயங்கும் போது
   ஆ) இயந்திரங்கள் நிறுத்தப்படும் போது
   இ) இயந்திரங்கள் இடம் மாற்றும் போது
   ஈ) இயந்திர பாகங்களை பொருத்தப்படும் போது

பகுதி ஆ

ஓரிரு வரிகளில் விடையளிக்க

(3 மதிப்பெண்கள்)

5. தொழிற்சாலைகளின் வகைகள் யாவை?
6. இயந்திர பணியாளர் என்பவர் யார்?
7. பாதுகாப்பு என்றால் என்ன?
8. பாதுகாப்பு குறிப்புகளின் வகைகள் யாவை?
9. முதல் உதவி என்றால் என்ன?
10. முதல் உதவிப் பெட்டியில் உள்ள மருந்து பொருட்கள் யாவை?
11. 5s மற்றும் அதன் முக்கியத்துவம் வரையறை செய்க
12. அசுத்தம் மற்றும் மாசுபாடு வரையறை செய்க
13. கழிவுகளின் படிநிலையை பட்டியலிட்டு விளக்குக
14. கழிவு மற்றும் கழிவு மேலாண்மை பற்றி வரையறை செய்க
15. EMSன் விரிவாக்கம் என்ன?

பகுதி இ

ஒரு பக்க அளவில் விடையளிக்க

(5 மதிப்பெண்கள்)

16. விபத்து ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
17. கைக்கருவிகளுக்கான பாதுகாப்பு குறிப்புகளை பட்டியலிடுக
18. இயந்திரங்களுக்கான பாதுகாப்பு குறிப்புகள் யாவை?
19. இயந்திர பணியாளருக்கான பாதுகாப்பு குறிப்புகள் யாவை?
20. 5s ஐ வரிசைப்படுத்தி ஆங்கில எழுத்துடன் எழுதுக.
21. சேமிப்பு கொள்கலன்களின் வெவ்வேறு வண்ணங்களை குறிப்பிட்டு அதன் உபயோகத்தை கூறுக
22. மாதிரி PDCA–வை வரையறு

பகுதி ஈ

பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடையளி (10 மதிப்பெண்கள்)

23. இயந்திர பணியாளரின் கடமைகள் மற்றும் நாட்டு வளர்ச்சியில் அவர்களின் முக்கிய கடமைகள் பற்றி விளக்குக
24. ஆங்கில மொழியில் 5s வரிசையை வரிசைப்படுத்தி, ஒவ்வொரு வரிசையும் விரிவாக விவரி.
25. கழிவு ஆதாரங்களை செயல்வழி வரைபடம் மூலம் விளக்குக.

XI_TM_BME_Tamil_Chapter01_2022.indd 13 25-01-2023 10:34:26

www.tnschoolbooks.in

பாடம்
2

பொறியியல் வரைபடம்

DJ5KG

கற்றலின் நோக்கம்

- பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும் வரைபடம், அதன் வகைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- வரைபடம் வரையத் தேவையான கருவிகள் மற்றும் வரையும் முறைகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- வரைபடத்தில் எண்ணும், எழுத்தும் எழுதும் முறைகள் மற்றும் பரிமாணமிடல் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- வரைபடத்தின் அளவுவிகிதம், புரொஜெக்சன் அதன் வகைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- பொறியியல் வரைபடம் வரைதல் பற்றி அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

2.1. அறிமுகம்

2.2. வரைபடக் கருவிகள்

2.3. இந்திய தர நிர்ணய அமைப்பு

2.4. எண்ணும், எழுத்தும் எழுதும் முறைகள் மற்றும் பரிமாணமிடல்

2.5. வரைபடத்தின் அளவு விகிதம்

2.6. புரொஜெக்சன்

2.7. வரைபடம் படித்தல்

2.1. அறிமுகம்

பொறியியல் துறையில் வரைபடங்கள் வரைய தரமான துல்லியமான கருவிகள் தேவைப்படுகிறது. வரைபடக் கருவிகளை நுணுக்கமாகவும், துல்லியமாகவும் கையாள வேண்டியது அவசியம். பொறியியல் வரைபடத்தில் எண்ணும், எழுத்தும் எழுதும் முறை மிக முக்கிய அம்சமாகும். வரைபடத்தில் தலைப்பு, பாகங்களின் அளவு மற்றும் இதர குறிப்புகளை பரிமாணமிடல் என்கிறோம். எனவே எவ்விதக் கருவியும் இல்லாமல் கையினாலேயே அழகாகவும் வேகமாகவும் எழுதுதல் என்பது மிக முக்கியம்.

பொறியியல் துறையில் வரைபடம் என்பது பொறியாளர்களின் மொழியாகும். இந்த மொழியின் மூலமாக பொறியாளர்கள் தங்களின் தனித்தன்மைகளை பேச்சு, எழுத்து மற்றும் படிப்பு மூலமாக வெளிப்படுத்துகின்றனர்.

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 14 25-01-2023 11:25:46

2.1.1. பொறியியல் வரைபடத்தின் முக்கியத்துவம்

- பொறியாளர் மற்றும் அதைச் சார்ந்த துறையினர் தயாரிக்க வேண்டிய பொருட்கள் பற்றி விவாதிக்க பொறியியல் வரைபடம் அவசியம்.
- பொருட்களை தயாரிப்பதற்கு முன்பு அதைப்பற்றிய வரை படத்தை தயாரித்துக் கொள்வதால் குறைபாடுகளை எளிதில் சரி செய்து கொள்ளலாம்.
- சிறிய பொருளை இயந்திரப் பணி செய்யும் போதும், பெரிய இயங்திரத்தைப் பொருத்தும் போதும் ஒருவருக்கொருவர் சொல்லி விளக்கி புரியவைத்தல் கடினமாகும். குறிப்புகள் மறந்து போகலாம். கேட்பவர் தவறாக புரிந்து கொள்ள நேரலாம். மொழி வேறுபாட்டால் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம். எனவே சரியாக புரிந்து கொள்ள "வரைபடம்" அவசியம்.
- தொழிலாளர்கள் இயந்திரப் பணியாளர்கள் வரைபடத்தை பார்த்து செய்யும் பொருளை தெளிவாக தெரிந்து கொண்டு பணி புரியவும், மேற்பார்வையாளர்களை புரிந்து கொண்டு பணியாற்றவும், புதிய வடிவமைப்புகளை உருவாக்கவும் "வரைபடம்" அவசியம்
- வரைபடம் இருந்தால் யாரிடமும் விளக்கம்கேட்கத் தேவையில்லை. ஒரே மாதிரியான பொருட்களை, ஒரே நேரத்தில், பல பணியாளர்கள் பல இயந்திரங்கள் மூலம் தனித்தனியாக வரைப்படத்தை பார்த்து பணிபுரிய முடியும்.

2.2. வரைபடக் கருவிகள் (DRAWING INSTRUMENTS)

பொறியியல் துறையில் வரைபடங்கள் வரைய தரமான துல்லியமான கருவிகள் தேவைப்படுகிறது. வரைபடக் கருவிகளை நுணுக்கமாகவும் துல்லியமாகவும் கையாள வேண்டியது அவசியம். வரைபடங்கள் வரைய தேவையான கருவிகள் பின்வருமாறு.

1. வரைபடப்பலகை
2. T – வடிவ மட்டப் பலகை
3. டிராஃப்டர்
4. பென்சில் மற்றும் பென்சில் முனைகள்
5. அளவு கோல்கள்
6. செட்ஸ்கொயர்
7. பாகைமானி
8. பிரெஞ்ச் வளைவுகள்
9. கருவிப் பெட்டி
   அ) கவராயம்
   ஆ) பங்கிடும் கருவி
   இ) இங்க்பென்
   ஈ) நீள செருகு கம்பி
10. வரைபடத்தாள்

2.2.1. வரைபடப் பலகை (Drawing Board)

வரைபடப் பலகை (Drawing Board) என்பது நான்கு அல்லது ஐந்து துண்டுகளாலான, மென்மையான மரப்பலகை ஆகும். இதன் தடிமன்சுமார் 20 மி.மீ. இருக்கும். இப்பலகையின் இடது பக்க விளிம்பில் ஒரு நேரான மெல்லிய மரச்சட்டம் (Ebony Strip) பொருத்தப்பட்டிருக்கும். இது T– வடிவ சட்டத்தை (T– Square) துல்லியமாக மேலும் கீழும் நகற்றுவதற்கு உதவுகிறது.



வரைபடப் பலகை

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 15 25-01-2023 11:25:46

வரைபடப் பலகைகள் சமமாகவும், மென்மையாகவும் இருக்கும். தடிமன் ஒரே சீராக இருக்கும். வரைபடத் தாளை இதன் மீது பொருத்தி வரைபடம் வரைய வேண்டும். இப்பலகைகளின் அளவுகளை BIS (Bureau of India Standards) வரையறை செய்துள்ளது. இவை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

வ. எண்	வரைபடப் பலகையின் பெயர்	அளவு (மில்லி மீட்டரில்) (நீளம், அகலம், தடிமன்)	வரைபடத் தாளின் அளவு
1	D_0	1500 X 1000 X 25	A_0
2	D_1	1000 X 700 X 25	A_1
3	D_2	700 X 500 X 15	A_2
4	D_3	500 X 350 X 15	A_3

2.2.2. T–வடிவ மட்டப் பலகை (T–square)

T–வடிவ மட்டப்பலகை கிடைமட்ட கோடுகள் வரையவும், ஒன்றுக்கொன்று இணையான கோடுகள்வரையவும் பயன்படுகிறது. செட்ஸ்கொயரைப் பயன்படுத்தி வெவ்வேறு கோணங்கள் வரையும் போது செட்ஸ்கொயரின் அடிப்பகுதி படிந்து நகர்வதற்கு T– வடிவ மட்டப்பலகை பயன்படுகிறது.

இதில் இரண்டு பாகங்கள் உள்ளன. ஒன்று ஸ்டாக் (Stock) மற்றொன்று பிளேடு (Blade) ஆகும். இந்த இரண்டு பாகங்களும் ஒன்றுக்கொன்று செங்குத்தாக (90°) இருக்கும்படி மரையாணி அல்லது பின் மூலம் இணைக்கப்பட்டிருக்கும்.

T–வடிவ மட்டப் பலகையின் நீளம் தோராயமாக, வரைபட பலகையின் அளவிற்கு இருக்கவேண்டும். பிளேடு (Blade) பயன்படுத்தும் முனையில் ஒரு நேரான மெல்லிய மரச்சட்டம் (Ebony Piece) பொருத்தப் பட்டிருக்கும். ஸ்டாக் எனப்படும் பகுதி வரைபட பலகையில் உள்ள மெல்லிய மரச்சட்டத்தின் வழியாக மேலும், கீழும் நகரும்.



T–வடிவ மட்டப் பலகை (T–square)

BIS – னால் வரையறை செய்யப்பட்ட T–வடிவ மட்டப்பலகையின் அளவுகள்

வ. எண்	T – வடிவ மட்டப் பலகையின் பெயர்	வேலைப் பகுதியின் நீளம் (மில்லி மீட்டரில்)
1	T0	1500 X 10
2	T1	1000 X 10
3	T2	700 X 5
4	T3	500 X 5

2.2.3. டிராஃப்டர் (Drafter)

இதில் ஒரு ஜோடி மெல்லிய எஃகு சட்டங்கள் (Steel Stips) அசையும்படி மையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருக்கும். இதன் ஒரு முனையில் பிடிப்பான் (Clamp) பொருத்தப்பட்டிருக்கும். வரைபட பலகையின் மேல்பகுதியில் இடப்பக்கமுள்ள இந்த பிடிப்பான் மூலம் டிராபடரை பிடிக்கலாம். இதற்கு பிடிப்பு பகுதி என்று பெயர். இதன் மற்றொரு முனையில் சுழலும் அடிபாகத்துடன் கூடிய ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ள அளவுகோல் பொருத்தப்பட்டிருக்கும். இதற்கு வேலை செய்யும் பகுதி என்று பெயர். ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ள அளவுகோலில் மில்லி மீட்டர் அளவுகளும், சுழலும் பாகத்தில் 360° வரை கோண அளவுகளும் குறிக்கப்பட்டிருக்கும்.

சுழலும் பகுதியில் உள்ள மரைத்தண்டு மூலம் சுழலும் பகுதியை தேவையான கோணத்திற்கு மாற்றி அமைத்து கோடுகள் வரையலாம். பிடிப்புப்பகுதியை வரைபட பலகையில் பொருத்தியபிறகு, வேலை பகுதியை தேவையானபடி நகர்த்தலாம். அதே போல் செங்குத்து அளவுகோலை தேவையான கோணத்திற்கு அமைத்த பிறகு, இணைகோடுகள் அல்லது ஒன்றுக்கொன்று செங்குத்தான கோடுகள் (Perpendicular Lines) வரையலாம்.



மினி டிராஃப்டர் (Mini Drafter)

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 16 25-01-2023 11:25:46



பென்சிலின் தரம் அதிலுள்ள கிராபைட் லெட் (Graphite Lead)

2.2.4. பென்சில்கள் மற்றும் பென்சில் முனைகள் (Pencils and Pencil Leads)

வரைபடத்தாளில் படங்கள் வரைய பென்சில்கள் பயன்படுகிறது. வரைபடத்தின் நுணுக்கம் மற்றும் தோற்றத்தை பென்சிலின் தரமே நிர்ணயிக்கிறது. பென்சிலின் தரம் அதிலுள்ள கிராபைட் லெட் (Graphite Lead) கடினத்தன்மையைப் பொருத்தது. பென்சிலின் தரங்கள் 9H முதல் 9B வரை 16 தரங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது.

HB பென்சில்–ஃப்ரீஹேண்ட் (Free Hand) படங்கள் வரைவதற்கும் H பென்சில் வரைபடம் வரைவதற்கும், எழுத்துகள் எழுவதற்கும், 2H பென்சில் அளவு குறிக்கும் கோடுகள், நீட்டப்பட்ட கோடுகள் போன்ற மெல்லிய கோடுகள் வரைவதற்கும், 3H மற்றும் 4H பென்சில்களை துல்லியமாக எழுதுவதற்கும் பயன்படுத்தலாம்.

பென்சில்களின் தரம் கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

- மென்மையானது (Soft) – 9B முதல் 2B வரை
- நடுத்தரமானது (Medium) – B முதல் 3H வரை
- கடினமானது (Hard) – 4H முதல் 9H வரை

2.2.5. செட்ஸ்கொயர் (Set Square)

கிடைமட்டக் கோட்டிற்கு 30°, 45°, 60° மற்றும் 90° இருக்குமாறு கோடுகள் வரையவும், ஒரு கோட்டிற்கு மற்றொரு கோடு செங்குத்தாக இருக்கும்படியும், இணையாக இருக்கும்படியும், கோடுகள் வரைய செட்ஸ்கொயர் பயன்படுகிறது.

செட்ஸ்கொயரை ஒன்றோடு ஒன்று இணைத்துவைத்து 15°, 75° மற்றும் 105° கோடுகளும் வரையலாம். செட்ஸ்கொயரில் இரண்டு வகைகள் உள்ளன.

1. 30°, மற்றும் 60° கோணங்களைக் கொண்ட செட்ஸ்கொயர்
2. 45° கோணங்களைக் கொண்ட செட்ஸ்கொயர்

2.2.6. பாகைமானி (Protractor)

செட்ஸ்கொயரினால் அளக்க முடியாத, வரைய முடியாத கோணங்களை அளக்கவும், வரையவும் இது பயன்படுகிறது. இதன் வடிவம் அரைவட்டம் அல்லது முழுவட்டமாக இருக்கும். இதில் கோண அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். இது செல்லுலாய்டு, மரம் போன்றவற்றில் தயாரிக்கப்பட்டிருக்கும்.



செட்ஸ்கொயர்



பாகைமானி (Protractor)



பிரெஞ்ச் வளைவுகள் (French Curves)

2.2.7. பிரெஞ்ச் வளைவுகள் (French Curves)

பிரெஞ்ச் வளைவுகள் டெம்பிளேட்டை போன்றது. இது பிளாஸ்டிக், செல்லுலாய்டு ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டது. இதன் எல்லா முனைகளிலும் வெவ்வேறு வடிவங்களில் மற்றும் அளவுகளில் ரூப எல்லைக்கோடு (Profiles) மற்றும் அமைப்புக்கோடு (Contours) வெட்டப்பட்டிருக்கும். கவராயத்தினால் (Compass) வரைய முடியாத வளைவு கோடுகள் மற்றும் வட்டங்களை இதில் விரைவாக வரையமுடியும்.

2.2.8. கருவிப்பெட்டி (Instrument Box)

இக் கருவிபெட்டியினுள் வரைபடம் வரைவதற்குத் தேவையான வெவ்வேறு வரைபடக்கருவிகள் உள்ளது. இதில் உள்ள கருவிகள்.

1. பெரிய அளவு கவராயம் (Large Size Compass)
2. சிறிய வளைந்த கவராயம் (Small Bow Compass)
3. சிறிய வளைந்த மை கவராயம் (Small Bow Ink Compass)
4. பெரிய அளவு பங்கிடும் கருவி (Large Size Divider)
5. சிறிய வளைந்த பங்கிடும் கருவி (Small Bow Divider)



கருவிப்பெட்டி (Instrument Box)

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 18 25-01-2023 11:25:47

6. நீள செருகு கம்பி (Lengthening Bar)
7. காரீய பென்சில் பெட்டி (Lead Case)

2.2.9. கவராயம் (Compass)

தேவையான அளவிற்கு வட்டம் மற்றும் வட்டவில் வரைய கவராயம் பயன்படுகிறது. இது உலோகத்தாலான இரண்டு கால் பாகங்களைக் கொண்டது. இதன் தலைபாகம் சுழல் அச்சு மூலம் இணைக்கப்பட்டிருக்கும். இரண்டு கால் பகுதிகளில் ஒன்றில், மாற்றி அமைக்கக்கூடிய ஊசி முனை கம்பி (Pin Point) பொருத்தப்பட்டிருக்கும். மற்றொரு கால் பகுதியில் பென்சில் லெட் அல்லது இங்கிங் பேனா முனைகளை பிடிக்கும் உபகரணம் உள்ளது.

2.2.10. பங்கிடும் கருவி (Divider)

நேரான கோடுகள், வளைவான கோடுகள் இவற்றை சமபாகங்களாகப்பிரிக்கப்பயன்படுகிறது.



பங்கிடும் கருவி (Divider)

கவராயம் (Compass)

www.tnschoolbooks.in

2.2.11. வரைபடத்தாள் (Drawing Sheet)

வரைபடம் வரைய வெவ்வேறு தரங்கள் கொண்ட வரைபடத்தாள் பயன்படுத்தப்படுகிறது. வரைபடத்தின் தன்மையைப் பொறுத்து வரைபடத்தாளின் தரம் மாறுபடும். இந்த வரைபடத்தாள் உறுதி, திடம் மற்றும் ஒரே சீரான தடிமன் கொண்டதாக இருக்கவேண்டும். இரப்பர் மூலம் அழிக்கும் பொழுது, எந்த பாதிப்பும் ஏற்படக்கூடாது. வரைபடத்தாள் இங்க் பரவாத தன்மைகொண்டதாக இருக்கவேண்டும். இந்த தாளின் மென்மையான பரப்பு கொண்ட பக்கத்தில்தான் படம் வரைய வேண்டும். வரையறுக்கப்பட்ட அளவு கொண்ட, ஒழுங்கு படுத்தப்பட்ட (Trimmed Sheet) வரைபடத்தாள் ISO நிறுவனத்தால் பரிந்துரை செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இது BIS அமைப்பால் பின்பற்றப்படுகிறது. வரைபடத்தாளின் அளவுகள் மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

2.3. இந்தியதர நிர்ணய அமைப்பு (BIS – BUREAU OF INDIAN STANDARDS)

இந்திய தர நிர்ணய கழகம் (Indian Standards Institute – ISI) 1947 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது வரைபடத்தை எவ்வாறு வரைய வேண்டும் என்றும், வரைபடத்தை குறிப்பிட்ட விதிமுறைகளின்படிதான் பயன்படுத்த வேண்டும் என்றும், 1955–இல் வரையறை செய்தது. இந்திய பாராளுமன்றம் 1987–இல் இந்திய தர நிர்ணய கழகம் என்பதை "பீரோ ஆப் இந்தியன் ஸ்டேண்டர்ட்ஸ்" என்று பெயர் மாற்றம் செய்து சட்டம் இயற்றியது.

2.3.1. லேஅவுட் வரைபடத்தாள் (Layout of the Drawing Sheet)

வரைபடத்தில் வரையப்படும் அனைத்து முக்கிய குறிப்புகளையும், மறுபடியும் பார்ப்பதற்கும், வரைபடங்களில் உள்ள லேஅவுட் சுலபமாக வழிவகுக்கிறது. இதற்கு வரையறுக்கப்பட்ட குறிப்புகளைப் பின்பற்ற வேண்டும். இந்த லே அவுட்டில் கீழே கொடுக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் காணப்படும்.



வரைபடத்தாள் (Drawing Sheet)

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 20 25-01-2023 11:25:47



லேஅவுட் வரைபடத்தாள்

1. கழிவுப்பகுதி (Margin)
2. தலைப்புக்கட்டம் (Title Block)
3. பாகங்களின்பட்டியல் (Parts List)
4. பணிஆய்வுகுறிப்பு (Revision Pannel)
5. குறிப்புப் பகுதி (Zone System)
6. மடிப்பு (Folding)

விளிம்பு (Margin)

வரைபடத்தாள் ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் இருப்பதற்கு வரைப்படத்தாளின் நான்கு பக்கங்களின் விளிம்பில் இருந்து குறிப்பிட்ட அளவு விடப்படும் பகுதிக்கு கழிவுப்பகுதி என்று பெயர். கழிவு பகுதி நீங்கலாக வரைப்படத் தாளில் படங்கள் வரைய எல்லைக் கோடு ஒன்றுவரைய வேண்டும். வரையப்படும் எல்லைக்கோடு வரைபடத்தை கோப்பில் அல்லது தைத்து பாதுகாக்க ஏற்றதாக இருக்க வேண்டும்

தலைப்பு கட்டம் (Title Block)

வரைப்படத் தாளின் கீழ்ப்புறம் வலது கோடியில் உள்ள கட்டத்திற்கு" தலைப்பு கட்டம்" (Title Block) என்று பெயர் இந்ததலைப்பு கட்டத்தின் அளவு 185 மி.மீ. X 65மி.மீ. இருக்க வேண்டுமென BIS வரையறை செய்துள்ளது. இந்த அளவானது AO முதல் A5 வரை உள்ள அனைத்து வரைப்படத் தாள்களுக்கும் பொதுவான அளவாகும். இதில் கீழே கோடுக்கப்பட்டுள்ள விவரங்கள் தரப்படும்.

வரைபடத்தின் தலைப்பு

1. வரைபடத்தின் எண் (Drawing Number)
2. படத்தின் பெயர் (தலைப்பு) (Title of the Drawing)
3. புரொஜெக்சன் வகை (Projection)
4. பொருள் (Material Details)
5. அளவு விகிதம் (Scale of Drawing)
6. மேற்பரப்பின் தன்மை (Surface Finish)
7. டாலரன்ஸ் (Tolerance) மற்றும் பிற குறிப்புகள்



வரைபடத்தின் தலைப்பு கட்டம்

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 21 25-01-2023 11:25:47

2.4. வரைபடத்தில் எண்ணும் எழுத்தும் எழுதும் முறைகள் மற்றும் பரிமாணமிடல் (LETTERING AND DIMENSIONING)

2.4.1 எண், எழுத்து எழுதும் முறைகள்

பொறியியல் வரைபடத்தில் எண்ணும், எழுத்தும் எழுதும் முறை மிக முக்கிய அம்சமாகும். வரைபடத்தில் தலைப்பு, துணை தலைப்பு, பாகங்களின் அளவு மற்றும் இதர குறிப்புகளையே பரிமாண மிடல் என்கிறோம். எண்ணும் எழுத்தும் எழுத கருவிகளைப் பயன்படுத்தினால் அதிக நேரம் செலவாகும். எனவே, கருவிகள் இல்லாமல் கையினாலேயே அழகாகவும், வேகமாகவும் எழுதிப் பழகுதல் என்பது மிக முக்கியம்.

எண், எழுத்து எழுதும் முறையின் அவசியம்

1. எவ்வளவு முக்கியத்துவம் தந்து வரைபடத்தை தெளிவாக வரைகிறோமோ அதேபோல் வரைபடத்தில் எண்ணும், எழுத்தும் தெளிவாக எழுதினால்தான் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.
2. தெளிவற்ற எண், எழுத்துகள் அவ்வரைபடத்தின் தோற்றத்தை கெடுத்து விடுவது மட்டுமின்றி, தவறான விளக்கத்தையும் கொடுக்கும்.
3. தெளிவாக எழுதுவதின் மூலமே அந்த வரைபடம் முழுமை அடைகிறது. எனவே, எண் எழுத்துகள் எழுதும்போது, மிக தெளிவாக எழுதுதல் வேண்டும்.

எண், எழுத்துகளின் அளவு விகிதம் (Proportions of Lettering)

தெளிவாக, அழகாக எழுத்துகள் இருக்க வேண்டுமானால் எண் மற்றும் எழுத்துகளின் உயரம், அகலம் இரண்டும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் இருப்பது நல்லது. பொதுவாக, 7:4 அல்லது 7: 5 என்ற விகிதத்தில் எண்ணும் எழுத்தும் எழுதப்படுகிறது. எண், எழுத்து, அளவு மூன்று வகைகளில் எழுதப்படுகிறது.

1. சாதாரண எழுத்துகள் (Normal Letters)
2. சுருக்கப்பட்ட எழுத்துகள் (Condensed Lettering)
3. நீட்டப்பட்ட எழுத்துகள் (Extended Lettering)

சாதாரண எழுத்துகள்(Normal Letter) இதில் உயரம் மற்றும் அகலம், வழக்கமாக எழுதும் அளவு இருக்கும்.

சுருக்கப்பட்ட எழுத்துகள் (Condensed Lettering) இதில் எழுத்துகளின் அகலம் குறைக்கப்பட்டு, அதற்கேற்ற உயரத்தில் எழுதப்படுகிறது. எழுதுவதற்கான இடம் குறைவாக இருக்கும் வரைபடங்களில் இவ்வகை எழுத்துகள் பயன்படுத்தப்படுகிறது.

நீட்டப்பட்ட எழுத்துகள் (Extended Lettering) இதில் எழுத்துகளின் அகலம் சற்று அதிகமாக இருக்கும். ஆனால் உயரம் வழக்கமான அளவிற்கு இருக்க வேண்டும்.

எழுத்துகளுக்கு இடையேயான இடைவெளி (Spacing of Letters)

எழுதும் பொழுது ஒரு எழுத்திற்கும் மற்றொரு எழுத்திற்கும்,இடையே விடப்படும் இடைவெளியை இது குறிக்கும். அவ்வாறு விடப்படும் இடைவெளி சமமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தோற்றம் தெளிவாக இருக்கும். ஓர் எழுத்தின் உயரத்தில் ஐந்தில் மூன்று பங்கு (3/5) இடைவெளி இருப்பது நல்லது. இரண்டு வரிகளுக்கு இடையே உள்ள இடைவெளி ஓர் எழுத்தின் உயரத்தை விட ஒன்றரை (1.5) மடங்கு இருக்க வேண்டும்.

எழுத்துகளின் அளவு (Size of Letters)

பொறியியல் வரைபடத்தில் எழுத்துகளின் அளவானது எழுத்துகளின் உயரத்தைப் பொருத்தது. BIS நிறுவனம் கீழ்க்கண்டவாறு எழுத்துகளின் அளவை பரிந்துரை செய்துள்ளது.

வ. எண்	சிறப்புகள்	அளவு (உயரம் மி.மீ.– ல்)
1.	தளவெட்டுத் தோற்றத்தைக் காட்டும் வரைபடத்தின் எண், எழுத்து	10,12
2.	வரைபடத்தின் தலைப்பு	6,8
3.	துணைத்தலைப்பு	3,4,5 & 6
4.	பொருட்களின் விவரம், பரிமாணங்கள், குறிப்புகள்	3,4 & 5
5.	டாலரன்ஸ்	2,3

www.tnschoolbooks.in

எழுத்துகளின் வகைகள் (Types of Letters)

எழுத்துகளை ஒரே சீரான தடிமனில் எழுதும் முறையை கோத்திக் எழுத்துகள் (Gothick Letters) என்கிறோம். கோத்திக் எழுத்துகளை சிங்கிள் மற்றும் டபுள் ஸ்ட்ரோக்குகளில் (Single & Double Storke) எழுதலாம்.

ITALIC PRINTING IS

free hand gothic

OR ROMAN LETTERING

சிங்கிள் ஸ்ட்ரோக் எழுத்துகளை விட டபுள்ஸ்ட்ரோக் எழுத்துகளின் தடிமன் அதிகம். இது இரண்டு வகைப்படும்

1. செங்குத்து எழுத்துகள் (Vertical Letters)
   அ) பெரிய எழுத்துகள்
   (Upper Case Letters)
   ஆ) சிறிய எழுத்துகள்
   (Lower Case Letters)
2. சாய்வான எழுத்துகள்
   அ) பெரிய எழுத்துகள்
   (Upper Case Letters)
   ஆ) சிறிய எழுத்துகள்
   (Lower Case Letters)

செங்குத்து எழுத்துகள் (Vertical Letters) இதில் ஆங்கில எழுத்துகள் A………..Z மற்றும் எண்கள் 1,2,3,………0 இரண்டும் கிடைமட்ட கோட்டிற்கு செங்குத்தாக (90O) இருக்கும்படி எழுதும் முறையை செங்குத்து எழுத்துகள் என்கிறோம். இதில் பெரிய மற்றும் சிறியவகை எழுத்துகள் இரண்டும் இதே முறையில் தான் எழுதப்படுகிறது.

A B C D E F G H I J K L M N
O P Q R S T U V W X Y Z
I II III IV V VIVII VIII XI X

a b c d e f g h i j k l m n
o p q r s t u v w x y z
1 2 3 4 5 6 7 8 9 0

சாய்வான எழுத்துகள் (Inclined Letters) கிடைமட்ட கோட்டிற்கு செங்குத்தாக இல்லாமல், சற்று சாய்த்து எழுதும் முறையை சாய்வான எழுத்துகள் என்கிறோம். இதன் கோணம் 75° ஆகும்.

A B C D E F G H I J K L M N
O P Q R S T U V W X Y Z
I II III IV V VIVII VIII XI X

a b c d e f g h i j k l m n
o p q r s t u v w x y z
1 2 3 4 5 6 7 8 9 0

2.4.2. பரிமாணமிடல் (Dimensioning)

பரிமாணமிடல் (Dimensioning) என்பது அளவுகளைக் குறிப்பிடுவதாகும். பரிமாணம் இல்லாத வரைபடம் முழுமை அடையாத வரைபடம் ஆகும். பரிமாணம் மற்றும் குறிப்புகள் என்பது அளவு, உற்பத்தி செய்யும்முறை, பொருளின் வகைகள் போன்றவற்றை பற்றிய தகவல்களை தருகிறது. பரிமாணம் சரியாக தராதபோது, பொருள், கூலி மற்றும் நேரம் போன்றவற்றில் நட்டம் ஏற்படும்.

பரிமாணமிடல் என்பது பல்வேறு அளவுகளில் எழுத்துகளை எழுதுவதும் அல்லது பொருட்களை பற்றிய அளவுகள், தகவல்கள், ஏற்கப்படும் அளவு வேறுபாடு போன்றவைகளைப் பயன்படுத்தி வரைபடம் வரைதலைக் குறிக்கும். ஒரு பொருளினை பற்றிய தகவல்கள் மிகுந்த கவனத்துடன் வரைப்படம் மூலம் விவரிக்க பரிமாணம் அவசியமாகிறது.

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 23 25-01-2023 11:25:48

www.tnschoolbooks.in

பரிமாணமிடும் முறைகள் (System of Dimensioning)

BIS (Bureau of Indian Standards) வரையறையின்படி பரிமாணமிடும் முறைகள் இரண்டு வகைப்படும்.

1. அலைண்டுசிஸ்டம் (Aligned System)
2. யூனிடைரக்சனல் சிஸ்டம் (Uni Directional System)



பரிமாணத்தின் வகைகள் (Types of Dimensioning)

அலைண்டு சிஸ்டம் (Aligned System)

பொதுவாக அம்புகுறி கொண்ட கோடு வரைந்து அதில் அளவுகள் குறிக்கப்படுகிறது. அவ்வாறு வரையப்படும் அம்பு குறி கொண்ட கோட்டில் இடைவெளி இல்லாமல் வரைந்து அக்கோட்டிற்கு இணையாக மேல் பக்கம் எண் எழுதும் முறையை அலைண்டு சிஸ்டம் என்கிறோம். வரைப்படத்தாளின் அடிப்பாகம் அல்லது வலது பக்ககழிவுக்கோடிற்கு இணையாக எண்கள் எழுதப்படுகிறது.

யூனிடைரக்சனல் சிஸ்டம் (Uni Directional System)

அம்புகுறி கொண்ட கோட்டின் மையத்தில் இடைவெளி விடப்பட்டு, அந்த இடைவெளியில் எண் எழுதும் முறையை யூனிடைரக்சனல் சிஸ்டம் என்கிறோம். வரைபடத்தாளின் அடிப்பாகத்திற்கு இணையாக மட்டுமே எல்லா அளவுகளும் எழுதப்படுகிறது.

பரிமாணமிடுதலுக்கான பொதுவான குறிப்புகள் (Notation of dimensioning)

பரிமாணமிடும் கோடுகள், நீட்டப்பட்ட கோடுகள், லீடர்லைன், அம்புக்குறி கொண்ட கோடு மற்றும், அடையாளங்கள் போன்றவற்றை விதிமுறைகளின் படிதான் குறிப்பிட வேண்டும்.

அளவுக் கோடு (Dimension line)

இரண்டு முனைகளுக்கு இடையே அல்லது இரண்டு கோடுகளுக்கு இடையே உள்ள தூரத்தை அளந்து குறிக்கும் கோட்டிற்கு அளவுக் கோடு (Dimension line) என்று பெயர். இந்த அளவுகோட்டின் மையத்தில் அளவு குறிப்பிட வேண்டும். இந்த அளவு கோடு நீண்ட மெல்லிய கோடாக வரையப்பட்டிருக்கும்.

நீட்டப்பட்டகோடுகள் (Extension Line)

வரைபடத்தில் வரையப்பட்டுள்ள பொருளின் அளவுகளைக் குறிப்பதற்காக பொருளின் விளிம்புகளில் இருந்து, நீட்டப்பட்டிருக்கும் இரண்டு எல்லை கோடுகளை நீட்டப்பட்டகோடுகள் என்கிறோம். இது இடைவெளி இல்லா மெல்லியகோடாகும். இது அளவுகோட்டைத் தாண்டி 2 மி.மீ. அதிகமாக இருக்க வேண்டும்.

லீடர்லைன் (Leader Line)

வரைபடத்திலுள்ள பொருளைப்பற்றி சிறப்பு குறிப்புகள் ஏதேனும் தர வேண்டிய போது லீடர்லைன் பயன்படுகிறது. வரைபடத்தில் எந்த இடத்தில் விளக்கம் தர வேண்டுமோ அந்த இடத்தில் இருந்து ஒருகோடு வெளியே நீட்டப்பட்டு, அதில் ஒரு படுக்கை கோடுவரைந்து அந்த கோட்டின் மேல், குறிப்புகள் எழுதப்படும். இது எந்த இடத்தை குறிப்பிட்டு காட்டுகிறதோ, அந்த முனையில் ஓர் அம்பு குறி இருக்கும். இந்த கோட்டின்கோணம் 30^{0} முதல் 60^{0} வரை சாய்வாக வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.

அம்புக்குறியின் தலை (Arrow Head)

அளவு குறிக்கும் கோட்டின் இரு முனைகளிலும் அம்பு குறி வரையப்படுகிறது. அந்த அம்புக்குறி நீட்டப்பட்ட கோடுகளைத் தொடுகிறது. 3:1 என்ற விகிதத்தில் அம்புக்குறியின் நீளம் மற்றும் அகலம் இருக்க வேண்டும்.

பரிமாண அடையாளம் (Dimension Figure)

ஆரம், விட்டம் போன்றவற்றை வரைபடத்தில் குறிப்பிடுவதற்கு, பரிமாண அடையாளம் பயன்படுத்தப்படுகிறது. ஆரம் என்பதை 'R' என்ற எழுத்தாலும், விட்டம் என்பதை $\varnothing$ என்ற அடையாளக் குறியீட்டாலும் காட்டப்படுகிறது. இக்குறியீடுகளைத் தொடர்ந்து எண்கள் எழுதப்படுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 24 25-01-2023 11:25:48

www.tnschoolbooks.in



அம்புக்குறியின் தலை (Arrow Head)

கோடுகளின் வகைகள் (Types of line)

பல்வேறு கோடுகளால் பொறியியல் வரைபடங்கள் வரையப்படுகிறது. ஒவ்வொரு கோடுகளும், படத்தில் உள்ள பல்வேறு சிறப்பு அம்சங்களைத் தெளிவுப்படுத்துகிறது. எனவே, வரைபடத்தை சரியாக புரிந்து கொள்ள கோடுகளின் வகைகளையும், அதன் அர்த்தங்களையும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.



கோடுகளின் வகைகள்

தொடர் தடிம கோடு (continuous thick line): பொருள்களின் தோற்றத்தைக்காட்ட கண்ணுக்குத் தெரிகின்ற தடித்த முகப்பு கோடுகள் " (Visible Outlines) பயன்படுகிறது. இதனை வரைய H அல்லது HB தரமுடைய பென்சிலைப் பயன்படுத்த வேண்டும்.

தொடர் மெல்லிய கோடு (continuous thin line): அளவு குறிக்கும் கோடு, லீடர் கோடுகள், நீட்டப்பட்டக் கோடுகள், வெட்டப்பட்டக் கோடுகள் (Leader Lines, Leader Extension Lines, Hatching Line) போன்ற கோடுகள் வரைய தொடர்ச்சியான மெல்லியக் கோடுகள் பயன்படுத்தப்படுகிறது. இதனை வரைய 2H தரமுடைய பென்சிலைப் பயன்படுத்தவேண்டும்.

சிறிய கோடுகள் (Short Dashes): இது மறைந்துள்ள முகப்புக் கோடுகள் (Hidden Lines) ஆகும். மறைந்துள்ள பாகங்கள், துளைகள் போன்றவற்றை வரைய பயன்படுத்தும் தடித்த சீரான அளவில், சம இடைவெளியில் விட்டுவிட்டு வரையப்படும் சிறியகோடுகள் (Short Dashes) ஆகும். இதனை வரைய H தரமுடைய பென்சிலைப் பயன்படுத்த வேண்டும்.

நீண்ட மெல்லிய சங்கிலிக்கோடு (Long chain–thin): மெல்லிய கோடுகளில் ஒன்று அளவில் சிறியதாகவும், ஒன்று அளவில் நீண்டதாகவும் குறிப்பிட்ட இடைவெளியில் வரையப்பட்ட கோடாகும். இதனை வரைய 2H தரமுடைய பென்சிலைப் பயன்படுத்த வேண்டும். துளை, உருளை மற்றும் உருளை பொருட்களின் மைய அச்சு கோடு, நகரும் பாகங்களின் முடிவு எல்லை போன்றவற்றை வரைய பயன்படும் மெல்லிய கோடு ஆகும்.

முனைகள் மட்டும் தடித்த சங்கிலிக்கோடு (Long chain–thick at ends): இது நீண்ட தடித்த சங்கிலிக்கோடு போன்ற அமைப்பை கொண்டது. முனையில் மட்டும் தடித்து இருக்கும், பொருளை வெட்டும்போது கிடைக்கும் வெட்டுத்தோற்றத்தை குறிக்கும் கோடு ஆகும். நீண்ட கோட்டின் முடிவில் தடிமனான முனை இருக்கும். இதனை வரைய H தர முடைய பென்சிலைப் பயன்படுத்த வேண்டும். மற்றவைக்கு 2H பென்சிலை பயன்படுத்த வேண்டும்.

நீண்ட தடித்த சங்கிலிக்கோடு (Long chain–thick): நீண்ட தடித்த முனைகொண்ட தடித்த கோடுகளில் ஒன்று அளவில் சிறியதாகவும், ஒன்று அளவில் நீண்டதாகவும் குறிப்பிட்ட இடைவெளியில் வரையப்பட்ட கோடாகும். இதனை வரைய HB தரமுடைய பென்சிலைப் பயன்படுத்த வேண்டும்.

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 25 25-01-2023 11:25:48

www.tnschoolbooks.in

தொடர் மெல்லிய அலைகோடுகள் (continuous thin **wavy): ஒழுங்கற்ற வளைவு நெளிவான அலை போன்ற எல்லை கோடுகளை மிக மெல்லிய கோடுகளாக வரைய வேண்டும் இதனை வரைய 2H தரமுடைய பென்சிலைப் பயன்படுத்த வேண்டும்.

கோணல்மாணலான மெல்லிய கோடு (Ruled line and short zigzag thin): கோணல்மாணலான கோடுகளையும் துண்டுதுண்டாக வெட்டப்பட்ட கோடுகளையும் இது குறிக்கும். இதனை வரைய 2H தர முடைய பென்சிலைப் பயன்படுத்த வேண்டும்.

Continuous thick line

Continuous thin line

Short dashes

Long chain (thin)

Long chain (thick)



Continuous thin (wavy)



Ruled line

கோடுகளின் வகைகள்

பரிமாணமிடுதலுக்கான பொது விதிமுறைகள் (General Dimensioning Rules)

1. அளவுகளை முடிந்த மட்டும் படத்தில் வெளியில் குறிப்பிட வேண்டும்.
2. அளவுக்கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளக்கூடாது.
3. நீட்டப்பட்ட கோடுகளை அளவிடும் கோடுகளின் மேல் வரையக்கூடாது.
4. அளவுகோடுகள் படத்தின் மீது காண்பிக்கும்போது சரியான இடத்தில் துல்லியமாக குறிக்க வேண்டும்.
5. அளவிடும்கோடுகள் நெருக்கமாக வரைவதை தவிர்க்கவேண்டும். போதுமான இடம் இல்லாத இடத்தில் அம்புக்குறிக்கு பதில் புள்ளியோ அல்லது சிறிய சாய்வுக்கோட்டையோ பயன்படுத்தவேண்டும்.
6. வரையப்பட்ட படத்தின் முகப்புக் கோட்டிலிருந்து முதல் அளவு கோடு குறைந்தபட்சம் 10 மி.மீ. தூரம் இருக்க வேண்டும்.
7. அடுத்தடுத்துள்ள அளவுகளுக்கு இடையே உள்ளதூரம் குறைந்தபட்சம் 8 மி.மீ. இருக்க வேண்டும்.
8. நீட்டப்பட்டக் கோடுகள் அளவுகாட்டும் கோட்டிற்கு மேல் 2 மி.மீ. அளவைதாண்டக் கூடாது.
9. லீடர்லைன்கள் கிடைமட்டத்திலிருந்து 30°, 45°, 60° கோணத்தில் வரைய வேண்டும்.
10. மையக்கோடுகள் அளவுக்கோடுகளாக குறிப்பிடக்கூடாது.
11. சிறிய அளவுகளை முதலில் குறித்தபிறகு, அதைதொடர்ந்து பெரிய அளவுகளைக் குறிக்க வேண்டும்.
12. குறித்த அளவுகளையே மறுபடியும் வேறொரு தோற்றத்தில் குறிக்கக்கூடாது.
13. கோணங்களையும், அதன் அளவுகளையும் தோற்றத்திற்கு வெளியே குறிப்பிடவேண்டும்.
14. அடையாளம் மற்றும் குறிப்புகளை கிடைநிலை கோட்டின் மேல் எழுத வேண்டும்.
15. வரைபடம் முழுவதும் தோராயமாக வரையப்பட்டிருப்பின் வரைபடத்தின்கீழ் 'NOT TO SCALE' என எழுத வேண்டும்.
16. எல்லா அளவுகளும் ஒரே அளவாக இருப்பின் அதனை வரைபடத்தின் கீழ் 'ALL DIMENSIONS ARE IN MM' என்று குறிப்பிட வேண்டும்.
17. மையக் கோடுகளையும், அச்சுக் கோடுகளையும் அளவுகள் குறிக்கும் கோடுகளாகப் பயன்படுத்தக் கூடாது.

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 26 25-01-2023 11:25:48

18. வெளிமரைகளைக் குறிப்பிடும் போது வகை, அளவு, நீளம் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.

19. வட்டத்தின் அளவுகளை, விட்டத்தில் மட்டுமே குறிப்பிட வேண்டும்.

20. இம்முறை பின் வரும் படங்களில் காட்டப்பட்டுள்ளது.



21. வட்டவில்களை (Arcs) ஆரத்தில் மட்டுமே குறிப்பிட வேண்டும். இம்முறை பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ளது.



22. 4 – Holesø 8 என்பது நான்கு துளைகளும், 8 மி.மீ. விட்டமுடையது என்று பொருள். மையத்திலுள்ள துளை 20 DEEP 20 என்பது 20 மி.மீ. விட்டமுடைய துளை என்றும், 20 மி.மீ. ஆழம் என்றும் பொருள்படும்.



23 பணிப்பொருளில் 12 DEEP 50 என்று 12 மி.மீ. விட்டம் கொண்ட துறையின் ஆழம் 50மிமீ எனவும், 20 என்பது 20 மி.மீ. விட்டமுடைய நீளதுளையை (Through hole)குறிக்கிறது.



24 உருளை வடிவமான பணிப்பொருளின் வெளி மற்றும் உள் வட்டப்பரிதியில் சிறிதளவு சரிவை ஏற்படுத்துவதற்கு சேம்ஃபரிங் (Chamfering) என்றுபெயர். இதைகுறிப்பிடும் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது.



வரைபடங்களை சரியான மற்றும் தவறான முறையில் பரிமாணமிடல்:

வரைபடத்தில் அளவுகள் குறிக்கும் முறையில் சில தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. அதனால், அப்பாகத்தின் விளக்கத்தை சரியாக புரிந்துகொள்ள முடியாது. வரைபடமும் தெளிவற்றதாக இருக்கும். வரைபடத்தைப் பார்ப்பவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும். இத்தவறுகள் ஏற்படாமல் இருக்க அளவுகளை முறைப்படி வரைய தெரிந்து கொள்ள வேண்டும். வரைபடம் வரையும் போது ஏற்படுகின்ற தவறுகள், அதை சரிசெய்து விதிகளின்படி வரையும் முறைகள், பின்வரும் படங்களின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 27 25-01-2023 11:25:49

www.tnschoolbooks.in

Incorrect



Correct



Incorrect



Correct



2.5. வரைபடத்தின் அளவு விகிதம் (SCALE OF DRAWING)

பொருளின் உண்மையாண அளவிற்கும், அதை வரைபடத்தாளில் வரைவதற்க்கும் உள்ள விகிதமே அளவு விகிதம் (SCALE) எனப்படும். வரைபடம் பொருளின் அளவுக்கேற்பவோ, அதைவிட குறிப்பிட்ட விகிதத்தில் பெரியதாகவோ, சிறியதாகவோ தேவைக்கேற்ப வரையலாம்.

2.5.1. அளவு விகிதத்தின் பயன்கள் (Uses of Scales)

1. அளவு குறைக்கப்பட்ட படம் மற்றும், பெரிதாக்கப்பட்ட படம் வரைய பயன்படுகிறது.
2. வெவ்வேறு பாகங்களின் பரிமாணத்தை நேரடியாக அளக்கவும் அளவு விகிதம் பயன்படுகிறது.

2.5.2. அளவுவிகிதத்தின் வகைகள்

1. சம அளவு விகிதம் (Full Scale)
2. குறைக்கப்பட்ட அளவு விகிதம் (Reducing Scale)
3. பெரிதாக்கப்பட்ட அளவு விகிதம் (Enlarging Scale)

சமஅளவு விகிதம் (Full Scale)

பொருளின் உண்மையான அளவை வரைபடத்தாளில் வரையும் முறைக்கு "சம அளவு விகிதம்" என்று பெயர். இதனை 1:1 என்று குறிப்பிடவேண்டும். இதில் படத்தின் அளவும், பொருளின் அளவும் உண்மையான அளவில் ஒரேமாதிரியாக இருக்கும்.

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 28 25-01-2023 11:25:49

குறைக்கப் பட்ட அளவு விகிதம் (Reducing Scale)

பொருளின் உண்மையான அளவைவிட, வரைபடத்தாளில் குறிப்பிட்ட விகிதத்தில் குறைத்து வரையும் முறைக்கு "குறைக்கப் பட்ட அளவு விகிதம்" என்று பெயர். இதனை 1:2,1:5, 1:10,….. என்று இரண்டு மடங்கு பெரியது என பொருள்படும்.

பெரிதாக்கப்பட்ட அளவு விகிதம் (Enlarging Scale)

பொருளின் உண்மையான அளவைவிட, வரைபடத்தாளில் குறிப்பிட்ட விகிதத்தில் பெரிதாக்கி வரையும் முறைக்கு "பெரிதாக்கப்பட்ட அளவு விகிதம்" என்று பெயர். இதனை 2:1, 5:1, 10:1,….. என்று குறிப்பிட வேண்டும். இதில் 2:1 என்பது, வரையப் பட்ட அளவை விட பொருளின் அளவு இரண்டு மடங்கு சிறியது என பொருள்படும்.

பொருளைப் போன்ற சமமான அளவு படம் (Full scale)	பொருளைவிட சிறிதாக்கப் பட்ட படத்தின் அளவு விகிதம் (Reduced scale)	பொருளைவிட பெரிதாகக்கப் பட்ட படத்தின் அளவு விகிதம் (Enlarged scale)
1:1	1:2	10:1
	1:5	5:1
	1:10	2:1
	1:20	
	1:50	
	1:100	
	1:200	

2.6. புரொஜெக்சன் (PROJECTION)

ஒரு பொருளின் மீது ஒளியை செலுத்தும்போது அதன் பின்பக்கத்தில் உள்ள திசை (அ) தளத்தில் விழும் அப்பொருளின் நிழல் (அ) பிம்பமே புரொஜெக்சன் எனப்படும். பொறியாளர்கள் அவர்களுக்கான எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள தொழில்நுட்ப வரைபடம் பயன்படுகிறது. பொருளை எடுத்துக் கொண்டாலும் அதற்கு மூன்று பரிமாணங்கள் உண்டு. அதாவது நீளம், அகலம், உயரம் என்று முப்பரிமாண புரொஜெக்சனைக் கொண்டது.



புரொஜெக்சன்

2.6.1. ஐசோமெட்ரிக்படம் (Isometric View)

ஒரு பொருளின் நீளம், அகலம், உயரம் ஆகிய மூன்று அளவுகளும் ஒன்றாக, ஒரேபடத்தில் தெரியும்படி, வரையப் பட்ட படத்திற்கு ஐசோமெட்ரிக் படம் என்று பெயர்.

ஐசோமெட்ரிக் படம் வரையும் முறை

ஒரு பொருளின் நீளம், அகலம், உயரம் ஆகியவற்றை 120° சமகோணத்தில் தோற்ற முகப்பு (Plane of Projection) தெரியும் படி வரையும் முறையாகும். 120° கோணத்தில் அமைக்கப்பட்ட அச்சுகள் வழியே (X, Y, Z) நீளம், அகலம், உயரம் ஆகிய அளவுகளைக் குறிக்க வேண்டும். அளவுகள் எதுவும் மாறாது. படத்தில் ஓர் அச்சு செங்குத்தாகவும், மற்ற இரு அச்சுகள் 120° சமகோணத்திலும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அளவுகள் அச்சுகளுக்கு இணையாக இரண்டு முனைகளுக்கு இடையே குறிக்கப்பட வேண்டும்.



2.6.2. ஆர்த்தோகிராப்பிக் படம் (Ortho Graphic Projection)

ஒரு பொருளைப் பல திசைகளிலிருந்து பார்க்கும்போது தெரியும் தோற்றங்களைவரைந்து

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 29 25-01-2023 11:25:49

காட்டுவதற்கு ஆர்த்தோகிராப்பிக் படம் என்று பெயர். இதில்கோடுகள் மட்டுமே வரையப்பட்டு, நிழலிடப்படமால் இருக்கும்.

1. ஒரு பொருளை தொலைவில் இருந்து பார்க்கும் தோற்றம்
2. ஒரு பொருளை பார்க்கும் பொழுது அதன் அனைத்துப் பக்கங்களும் இணையாக தெரியும்.
3. ஒரு பொருளின் புறத்தோற்றக்கோடுகள் செங்குத்து கோட்டில் ஒன்றிணையும்.
4. இப்படம் தளத்தில் மிக தெளிவாக தெரியும்.

ஆர்த்தோகிராப்பிக் படத்தின் வகைகள் (Types of orthographic projection)

ஆர்த்தோகிராப்பிக் படம் இரண்டு வகைப்படும்.

1. முதல் கோணவகை (First angle Projection)
2. மூன்றாம் கோணவகை (Third Angle Projection)

முதல் கோணவகை (First angle Projection)

சரிவு உருளையின் முன்பக்க தோற்றம் வரையப்பட்டுள்ளது. அதன் வலது பக்கத்தில் இருந்து பார்க்கும்போது தெரியும் பெரிய விட்டத்தின் முகப்பும் இடது பக்கத்தில் இருந்து பார்க்கும்போது தெரியும் சிறிய விட்டத்தின் முகப்பும் அதன் வலது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.



தலைப்பு கட்டத்தில் முதல் கோண வகைப்படி வரைபடம் வரையப்பட்டுள்ளது என்பதை மேலே உள்ள படம் காட்டுகிறது.

மூன்றாவது கோண வகை (Third Angle Projection)

இயந்திரத்தின் மிக குழப்பமான, நுணுக்கமான பாகங்களைக் குறிப்பிட மூன்றாவது கோண வகை படம் தான் மிகவும் எளிய முறை ஆகும்.

மூன்றாவது கோணவகை படம் புரிந்து கொள்வதற்கு மிக எளிதானது. எனவே இவ்வகைபடம் பொறியியல் துறையில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.



மூன்றாவது கோண வகை படம் அருகில் காட்டப்பட்டுள்ளது. ஒரு சரிவு உருளையின் முன்பக்க தோற்றம் வரையப்பட்டுள்ளது. அதன் இடதுபுறம் இருந்து பார்க்கும்போது தெரியும் சிறிய விட்டத்தின் முகப்பு மற்றும் அதே திசையிலிருந்து பார்க்கும்போது தெரியும் பெரிய விட்டத்தின் பரிதியும் இடது பக்கமே வரையப்பட்டுள்ளது.

தலைப்பு கட்டத்தில் மூன்றாவது கோண வகைபடி வரைபடம் வரையப்பட்டுள்ளது என்பதை அருகில் உள்ள படம் காட்டுகிறது.

ஒரு பொருளின் பல்வேறு தோற்றங்கள்

ஒரு பொருளுக்கு எட்டு விதமான தோற்றங்கள் வரையலாம்.

1. முன்பக்க தோற்றம் (Front View of Elevation)
2. மேல்பக்கத் தோற்றம் (Top View or Plan)
3. வலப்பக்கத் தோற்றம் (Right Side View)
4. இடப்பக்கத் தோற்றம் (Left Side View)
5. கீழிருந்து பார்க்கும்போது தெரியும் தோற்றம் (View from below)
6. பின்பக்கத் தோற்றம் (View from the rear)
7. தேவையான இடத்தில் தேவையான கோணத்தில்வெட்டப்பட்ட வெட்டுத்தோற்றம் (Cut Section View)
8. மேற்கூறிய வகைகள் இல்லாத குறிப்பிட்ட திசையில், குறிப்பிட்ட இடத்தில் தெரியும் ஆக்சிலரி தோற்றம் (Auxiliary View)

முன்பக்கத் தோற்றம் (Front View or Elevation) ஒரு பொருளின் முன் நின்று பார்க்கும்போது செங்குத்து தளத்தில் (Vertical Plane) தெரியும் தோற்றம் ஆகும். நீளம் மற்றும் உயரம் பற்றிய விவரங்கள் இந்த தோற்றத்தில் தெரியும்

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 30 25-01-2023 11:25:49

மேல்பக்கத் தோற்றம் (Top View or Plan) ஒரு பொருளை அதன் மேல் பக்கம் இருந்து பார்க்கும் போது கிடைமட்டத்தளத்தில் (Horizontal Plane) தெரியும் தோற்றம் ஆகும். இது மேல்பக்கத் தோற்றம் எனப்படும். நீளம் மற்றும் அகலம் பற்றிய விவரங்கள் இந்த தோற்றத்தில் தெரியும்

பக்கத் தோற்றம் (Side View) ஒரு பொருளை அதன் இடப்பக்கமாகவோ அல்லது வலப்பக்கமாகவோ இருந்து பார்க்கும் போது பக்கவாட்டில் (Profile Plane) தெரியும் தோற்றம், பக்கத் தோற்றம் எனப்படும்.

ஆக்சிலரி தோற்றம் (Auxiliary View) வெட்டு எதுவும் இல்லாமல் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திசையில் உள்ள தோற்றத்தைக் காட்டுவதால் எளிதில் படம் விளங்கும். இதிலுள்ள அம்புக் குறி நாம் கற்பனை செய்து பார்க்கவேண்டிய திசையை அந்த படம் குறிக்கும். ஆக்சிலரி தோற்றத்திற்கு துணைத் தோற்றம் என்று பெயர்.





ஐசோமெட்ரிக் படம் பார்த்து ஆர்த்தோகிராப்பிக் படம் வரையும் முறை

ஆர்த்தோகிராப்பிக் படம் என்பது ஒரு பொருளின் தோற்றத்தை ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட திசையிலிருந்து பார்க்கும் போது தெரிகின்ற தோற்றத்தை தனித்தனியாக அப்படியே வரை வதைக் குறிக்கும்.

அம்புக்குறியிடப்பட்ட பக்கத்தை முன்பக்கமாக கொண்டு முன்பக்க தோற்றத்தை (Front View) வரைய வேண்டும். அம்புக்குறியிடப்படவில்லை எனில் எந்த தோற்றம் முக்கியதுவம் வாய்ந்ததோ அத்தோற்றத்தை முன்பக்க தோற்றமாக வரைய வேண்டும்.

ஐசோமெட்ரிக் படம்



ஆர்த்தோகிராப்பிக் படம்



ஐசோமெட்ரிக் படத்தைப் பார்த்து மூன்றாம் கோண வகையில் கிராப்பிக் படம் வரைதல்:

1. ஐசோமெட்ரிக் படம்



2 ஆர்த்தோகிராபிக் படம்



2.6.3. வெட்டுத் தோற்றம் (Sectional View)

ஒரு பொருளை தளத்திற்கு இணையாக வெட்டிய பிறகு, வெட்டப்பட்ட பகுதியை நீக்கிவிட்டு மீதமுள்ள பாகத்தை பார்க்கும் தோற்றம் வெட்டுத் தோற்றம் எனப்படும். ஒரு பொருளின் வெட்டுத் தோற்றம் (Cross Sectional) வரைய கற்பனையாக வெட்டப்படும் தளம் வெட்டு தளம் (Cutting Plane) என்று அழைக்கப்படுகிறது.





வெட்டுத் தோற்றத்தின் வகைகள் (Types of Sectional Views)

வெட்டுத் தோற்றத்தை ஆறு வகைகளாகப் பிரிக்கலாம்.

அவையாவன,

1. முழு வெட்டுத்தோற்றம் (Full Secional View)
2. அரை வெட்டுத்தோற்றம் (Half Sectional View)
3. ஆப்செட் வெட்டுத்தோற்றம் (Offset Sectional View).
4. லோக்கல் வெட்டுத்தோற்றம் (Local Sectional View)
5. ரிவால்வுடு வெட்டுத்தோற்றம் (Revolved Sectional View)
6. ரிமூவ்டு வெட்டுத்தோற்றம் (Removed Sectional View)

2.7. வரைபடம் படித்தல் (BLUE PRINT READING)

வ. எண்	விளக்கம்	குறியீடு	குறிப்பிட்ட பரிமாணம்
01	உருளைவடிவம் Round section		d
02	குழாய் Tube		d x t
03	சதுரவடிவம் Square section		s
04	முக்கோணவடிவம் Triangular section		a

www.tnschoolbooks.in

05	அறுங்கோணவடிவம் Hexagonal section		s
06	அரைவட்டவடிவம் Half round section		2 x r
07	செவ்வகவடிவம் Rectangular section		W x L
08	கோணவடிவம் Angle section		A x B
09	T– வடிவம் T– Section		h x b
10	I– பீம்வடிவம் I– beam section		h
11	சேனல்வடிவம் Channel section		h
12	Z–வடிவம் Z– section		—
13	ரெயில்வடிவம் Rail section		—
14	குமிழ் கோணவடிவம் Bulb Angle section		H
15	குமிழ் தட்டுவடிவம் Bulb Plate Section		H

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 33 25-01-2023 11:25:51

www.tnschoolbooks.in

தலைப்பு	Actual Projection/Section	Convention
வெளிப்பக்க மறை External Threads		
உட்பக்க மறை Internal Threads		
நீள்வாட்ட துளை Slotted Head		
சதுரவடிவ மற்றும் தட்டையான முனை Square End and Flat		
ஆர விளிம்பு Redial Ribs		
தாங்கி Bearing		

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 34 25-01-2023 11:25:51

www.tnschoolbooks.in

தலைப்பு	Actual Projection/Section	Convention
சொரசொரப்பு தன்மை Knurling		
லீனியர் பிட்ச் துளைகள் Holes on Linear Pitch		
சர்குலர்பிட்ச் துளைகள் Holes on Circular Pitct		

விளக்க வரைபடம்:



1. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் மேல்பக்கத் தோற்றம் மற்றும் முன்பக்கத் தோற்றம் ஆகிய இரண்டு தோற்றங்கள் உள்ளன.

2. வரைபடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கோடுகள் பின்வருமாறு

D – Center Line
E – Visible Outline
F – Dimension line
G – Extension Line
H – Dotted Line
I – Leader Line

3. Bன் மதிப்பு 122

இங்கே,

i) மேல்பக்கத் தோற்றத்தில் உள்ள இரு விளிம்புகளின் ஆரம் 16மிமீ இதை R16 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ii) வட்டவடிவ மையங்களுக்கு இடைப்பட்ட தூரம் 45 மிமீ, 45மிமீ

iii) எனில் A= 16+62+20=88 மிமீ, B = 16+16+45+45 = 122 மிமீ, C = 45 + 45 = 90மிமீ

4. இந்த பாகத்தில் மூன்று துளைகள் உள்ளன

இங்கே,

மூன்று துளைகளின் விட்டம்12 மிமீ ஆக குறிப்பிடப்பட்டுள்ளது.

போடப்பட்ட (ø12–3 HOLES DRILLED) துளைகளின் எண்ணிக்கை மூன்று

5. வரைபடத்தில், மேல்பக்கத் தோற்றத்தில் தகட்டின் தடிமன் 4 மிமீ ஆக குறிப்பிடப்பட்டடுள்ளது.

செயல்பாடுகள்

1. மாணவர்களை பல்வேறு தரமுடைய பென்சில்களை சேகரித்து வரச்செய்தல்.
2. மாணவர்களை பல்வேறு வடிவமுடைய தாளினை சேகரித்து வரச்செய்தல்.

வினாக்கள்

பகுதி அ

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

(1 மதிப்பெண்)

1. ஒரு பொருளின் நீள, அகல, உயர அளவுகள் தெரியுமாறு 120° கோண இடைவெளியில் பொருளின் முழுத்தோற்றம் தெரியுமாறு வரையும் முறை இவ்வாறு அழைக்கப்படுகிறது.

அ) ஆர்த்தோகிராபிக் புரொஜெக்சன்

ஆ) ஐசோமெட்ரிக் புரொஜெக்சன்

இ) முதல்கோண புரொஜெக்சன்

ஈ) மூன்றாம் கோண புரொஜெக்சன்

2. கவராயத்தினால் வரைய முடியாத வளைவு கோடுகள் மற்றும் வட்டங்களை இதில் விரைவாக வரைய முடியும்.

அ. பிரெஞ்சு வளைவுகள்

ஆ.பங்கிடும் கருவி

இ. செட் ஸ்கொயர்

ஈ. பாகைமானி

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 36 25-01-2023 11:25:52

3. மேல்பக்க தோற்றம் கீழ்கண்ட எந்த தளத்தில் தெரியும்
   அ) செங்குத்து தளம்
   ஆ) கிடைமட்ட தளம்
   இ) புரொபைல்(Profile) தளம்
   ஈ) துணை (Auxiliary) தளம்

4. முதல்கோண புரொஜெக்சனில், மேல்பக்க தோற்றம் அமையும் இடம்
   அ) முன்பக்க தோற்றத்தின் மேல்புறம்
   ஆ) முன்பக்க தோற்றத்தின் இடதுபுறம்
   இ) முன்பக்க தோற்றத்தின் வலதுபுறம்
   ஈ) முன்பக்க தோற்றத்தின் கீழ்புறம்

5. BIS என்பதின் விரிவாக்கம்
   அ) Bharath Industrial Society
   ஆ) Bureau of Indian Standards
   இ) British Institute of Standars
   ஈ) Bureu of Internal Standards

6. ISI நிறுவனம் எந்த ஆண்டு BIS பெயர் மாற்றம் செய்யப்பட்டது?
   அ) 1947 ஆ) 1983
   இ) 1987 ஈ) 1999

7. வரைப்படத்தின் தலைப்பு எழுத்துகளின் அளவு
   அ) 10 மிமீ ஆ) 6 மிமீ
   இ) 3 மிமீ ஈ) 2 மிமீ

8. கோத்திக் எழுத்துகளை எழுதும் முறை என்பது
   அ) எழுத்துகளை ஒரே சீரான தடிமனில் எழுதும் முறை
   ஆ) காலி கிராபிக் நிப்ஸ் (Calligraphic nibs) முறையில் எழுதுவது
   இ) எழுத்துகளின் உயரத்திற்கு ஏற்றவாறு அகலத்தைக் குறைத்தல்
   ஈ) எழுத்துகளின் அகலம் அதிகமாகவும் சாதாரண உயரத்திலும் எழுதும் முறை

9. வரைபடத்தில் அளவுக்கோட்டிற்கு இணையாக மேல்பக்கம் எழுதும் முறை
   அ) அலைண்டு சிஸ்டம்
   ஆ) லீடர்லைன் முறை
   இ) நீட்டப்பட்டக் கோடு முறை
   ஈ) யுனிடைரக்சனல் சிஸ்டம்

10. அம்புக்குறி தலைப் பகுதியின் (arrow head) நீளம் மற்றும் அகலத்தின் விகிதம்
   அ) 2:1 ஆ) 1:2
   இ) 3:1 ஈ) 5:2

11. $1000 \times 700 \times 25$ அளவுள்ள வரைபடப்பலகையின் பெயர்
   அ) D0 ஆ) D1
   இ) D2 ஈ) D3

12. 297×210 அளவுள்ள வரைபடத்தாளின் பெயர்
   அ) A0 ஆ) A1
   இ) A2 ஈ) A4

13. கிடைமட்ட கோடு மற்றும் இணைகோடுகள் வரைய பயன்படுத்தப்படும் வரைபடக் கருவி
   அ) T– வடிவ மட்டப்பலகை
   ஆ) பாகைமானி
   இ) ஃபிரெஞ்ச் வளைவு
   ஈ) வரைபட பலகை

14. ஃபிரீ ஹாண்ட் படங்கள் வரைய பயன்படும் பென்சில்
   அ) 2B பென்சில் ஆ) 4B பென்சில்
   இ) HB பென்சில் ஈ) 2H பென்சில்

15. கோண அளவுகளை அளக்கவும், வரையவும் பயன்படும் வரைபட கருவி
   அ) பங்கிடும் கருவி
   ஆ) பாகைமானி
   இ) கவராயம்
   ஈ) T– வடிவ மட்ட பலகை

16. நேரான கோடுகள், வளைவான கோடுகள் ஆகியவைகளைச் சமபாகங்களாகப் பிரிக்கப்பயன்படும் வரைபடக் கருவி
   அ) பங்கிடும் கருவி
   ஆ) பாகைமானி
   இ) கவராயம்
   ஈ) இங்கிங் பென்

17. நீளம் மற்றும் உயரம் ஆகிய விவரங்கள் தெரியும் தோற்றம்,

அ) முன்பக்க தோற்றம்

ஆ) வலப்பக்க தோற்றம்

இ) இடப்பக்க தோற்றம்

ஈ) மேல் பக்க தோற்றம்

18. நீட்டப்பட்ட கோடுகள் அளவு காட்டும் கோட்டிற்கு ------------ அளவை தாண்டக்கூடாது.

அ) 3 மி.மீ

ஆ) 2 மி. மீ

இ) 1 மி. மீ

ஈ) 4 மி. மீ

19. வரைபடத்தின் முகப்பு கோட்டிலிருந்து முதல் அளவுக்கோடு குறைந்தபட்சம் ------------ தூரம் இருக்க வேண்டும்.

அ) 10 மி. மீ

ஆ) 6 மி. மீ

இ) 4 மி. மீ

ஈ) 3 மி.மீ

20 சாய்வான எழுத்துக்களின் கோணம்

அ) 45° ஆ) 35°

இ) 75° ஈ) 60°

21. குறைக்கப்பட்ட அளவு விகிதம் இவ்வாறு குறிக்கப்படுகிறது.

அ) 1 : 1 ஆ) 1 : 2

இ) 2 : 1 ஈ) எதுவுமில்லை

பகுதி ஆ

கீழ்கண்ட வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி (3 மதிப்பெண்கள்)

22. ஆர்த்தோகிராபிக் படத்தின் வகைகள் யாவை?
23. "ஐசோமெட்ரிக் படம்" என்றால் என்ன?
24. "ஆர்த்தோகிராபிக் படம்" என்றால் என்ன?
25. "மூன்றாவது கோண வகை படம்" என்றால் என்ன?
26. ஆர்த்தோகிராபிக் படத்தில் உள்ள மூன்று முக்கிய தோற்றங்களைக் கூறுக
27. முதல் கோண தோற்றம் மற்றும் மூன்றாம் கோண தோற்றத்தின் அடையாள குறியீடுகளை (symbols) வரைக
28. BIS நிறுவனம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
29. ISI என்பதன் விரிவாக்கம் யாது?
30. வரைபடத்தாளில் "தலைப்பு கட்டம்" என்பது என்ன?
31. எண் மற்றும் எழுத்து எழுதும் முறையின் அவசியம் யாது?
32. எழுத்துகளின் (Letters) வகைகள் யாவை?
33. "பரிமாணமிடல்" என்றால் என்ன?
34. பரிமாணமிடுதலின் இரண்டு வகைகள் யாவை?
35. செட்ஸ்கொயரின் இரண்டு வகைகள் யாவை?
36. வரைபட பென்சில்களின் தரங்களை(Grade) எழுதுக
37. பிரெஞ்சு வளைவுகளின் பயன் யாது?
38. கருவிப்பெட்டியில் (Instrument box) உள்ள கருவிகளைக் கூறுக
39. வெட்டுத்தோற்றத்தின் தேவைகள் யாவை?
40. "வெட்டுத்தளம்" என்றால் என்ன?
41. வெட்டுத்தோற்றம் என்றால் என்ன?
42. வெட்டுத்தோற்றத்தின் வகைகள் யாவை?
43. "வரைபடத்தின் அளவு விகிதம்" என்றால் என்ன?
44. அளவு விகிதத்தின் பயன்கள் யாவை?
45. அளவு விகிதத்தின் வகைகள் (Types of scales) யாவை?

பகுதி இ

கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி (5 மதிப்பெண்கள்)

46. தலைப்புக்கட்டத்தில் குறிப்பிட வேண்டியவற்றை பட்டியலிடுக
47. வரைபடத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு கோடுகளை வரைந்து அவற்றின் பயன்பாடுகளை எழுதுக

பகுதி ஈ

IV கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி

(10 மதிப்பெண்கள்)

48. படம் 1 முதல் 4 வரை உள்ள வரைபடங்களுக்கான வினாக்களுக்கு விடையளி



படம் 1

அ) கொடுக்கப்பட்ட பாகத்தின் பயன் யாது?

ஆ) கொடுக்கப்பட்ட பாகத்தின் வெளிவிட்டம் என்ன?

இ) கொடுக்கப்பட்ட பாகத்தின் நீளம் என்ன?

ஈ) கொடுக்கப்பட்ட பாகத்தின் மரையின் அளவு என்ன?

உ) V– வடிவ பள்ளத்தின் கோண அளவு என்ன?

ஊ) மையத்துளையின் விட்டம் யாது?

எ) V– வடிவ பள்ளத்தின் ஆழம் என்ன?

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 39 25-01-2023 11:25:52

www.tnschoolbooks.in



படம் 2

அ) கொடுக்கப்பட்ட பாகத்தில் உள்ள PCD(Pitch Circle Diameter) யின் அளவு என்ன?

ஆ) கொடுக்கப்பட்ட பாகத்தில் எத்தனை சிறுதுளைகள் போடப்பட்டுள்ளது?

இ) கொடுக்கப்பட்ட பாகத்தின் 'வெளிவிட்டம்' என்ன?

ஈ) கொடுக்கப்பட்ட பாகத்தின் "தடிமன் அளவு" (Thickness) என்ன?

உ) கொடுக்கப்பட்ட பாகத்தில் அடுத்தடுத்துள்ள இரண்டு துளைகளுக்கிடையே உள்ள கோணத்தின் அளவு என்ன?



படம் 3

அ) கொடுக்கப்பட்ட பாகத்தில் உள்மரை (tap) போடப்பட்ட துளைகளின் எண்ணிக்கை யாது?

ஆ) பள்ளத்தின் (Groove) ஆரம் என்ன?

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 40 25-01-2023 11:25:53

www.tnschoolbooks.in

இ) படத்திலுள்ள பாகத்தின் நீளம் என்ன?

ஈ) படத்திலுள்ள பாகத்தின் அகலம் என்ன?

உ) படத்திலுள்ள பாகத்தின் உயரம் என்ன?

ஊ) படத்தில் குறிக்கப்பட்டுள்ள A, B, C ன் அளவுகள் யாது?



படம் 4

அ) படத்தில் காட்டப்பட்டுள்ள தாங்கு சட்டத்தின் (Bracket) மொத்த அளவுகள் (நீளம், அகலம், உயரம்) யாது?

ஆ) தாங்கு சட்டத்தின் அடிப்பாகத்தின் வடிவம் மற்றும் அதன் மொத்த அளவுகள் (நீளம், அகலம், தடிமன்) யாது?

இ) தாங்கு சட்டத்தில் உள்ள துளையின் விட்டத்தின் அளவு என்ன?

ஈ) தாங்குசட்டத்தின் மேல்புற வளைவின் ஆரம் என்ன?

உ) தாங்கு சட்டத்தின் தடிமனின் அளவு யாது?

XI_TM_BME_Tamil_Chapter02_2022.indd 41 25-01-2023 11:25:53

www.tnschoolbooks.in

பாடம்
3

ஆட்டோகேட் (AUTOCAD)

கற்றலின் நோக்கம்

- ஆட்டோகேட் மென்பொருளை (AUTO CAD) அறிமுகம் செய்தல்.
- பல்வேறு வகையான பட்டியல்கள் (Menu), கருவிகள் (Tools), கட்டளைகள் (Commands) மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- ஆட்டோகேட் மென்பொருளை பயன்படுத்தி இருபரிமாண (2D) முறையில், அடிப்படை இயந்திர பொறியியல் வரைபடங்கள் வரைய தயார் செய்தல்.
- இருபரிமாண (2D) இயந்திரவியல் வரைபடங்களை திருத்தியமைத்தல்.
- இயந்திர பொறியியல் வரைபடங்களை பற்றி படிப்பது மற்றும் அதிலிருந்து தொழில் நுட்ப தகவல்களை பெறுதல்.

பொருளடக்கம்

3.1 அறிமுகம்

3.2 ஆட்டோகேட் மென்பொருளை பற்றி அறிந்து கொள்ளுதல்.

3.3 முக்கிய செயல்முறைகள்

3.4 முக்கியமான கட்டளைகள்

3.5 ஆட்டோகேடில் விசைப்பலகையின் குறுக்கு வழிகள்

3.6 அமைப்புக் கட்டளைகள்

3.7 சரியான (Absolute) மற்றும் அதிகரிக்கக் கூடிய ஒருங்கிணைந்த அச்சுக்கள் ஆயற்தொகுப்புகள் பற்றிய குறிப்புகள்.

3.8 ஆட்டோகேடில் கட்டளைகளை பயன்படுத்துதல்.

3.9 ஆட்டோகேடில் அடுக்குகள் .

3.10 ஆட்டோகேடில் அளவிடுதல் (DIMENSIONING)

3.11 DWG கோப்பினை PDF கோப்பாக மாற்றுதல்.

3.1 அறிமுகம்:

ஆட்டோகேட் மென்பொருளானவை 1982 – ல் மிகச் சிறிய நிறுவனமான Auto Desk குழுமத்தால் (Auto Desk Inc) வெளியிடப்பட்டது. இது கணிப்பொறிகளில் மட்டுமே பயன்படுத்தப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்போதிருந்தே ஆட்டோகேட் (AUTO CAD) ஆனது CAD வணிகத்தில் பயனர்கள் பயன்படுத்தும் உலகின் மிகப் பெரிய

XI_TM_BME_Tamil_Chapter03_2022.indd 42 02/05/2022 17:33:13

www.tnschoolbooks.in

தளமாக இருந்து வருகிறது. இருபரிமாண (2D), முப்பரிமாண (3D) வரைவு (Draft) மற்றும் வடிவமைப்பிற்கு பயனர்கள் ஆட்டோகேடை பயன்படுத்த முடியும். கட்டிடக்கலை (Architectural), கட்டமைப்பு (Structural), இயந்திரவியல் (Mechanical) மின் பொறியியல் (Electrical), சுற்று சூழல் மற்றும் உற்பத்தி (Environmental and Manufacturing), வரைபடங்கள், சாலை மற்றும் நெடுஞ்சாலை வடிவமைப்புகளுக்கும் ஆட்டோகேடை (AUTOCAD) பயன்படுத்த முடியும்.

இன்றைய காலகட்டத்தில் BIM (Building Information Modelling) மீது மென்பொருள் பயன்படுத்தும் அனைவரின் கவனமும் இருந்தாலும், Auto Desk குழுமத்திற்கு அதிக லாபம் ஈட்டி தரும் மென்பொருளாக ஆட்டோகேட் உள்ளது. ஏனென்றால் இது பயன்படுத்துவதற்கு எளிதாகவும், விரிவாகவும், அனைத்து பயனர்களின் தேவையை பூர்த்தி செய்ய கூடியதாகவும் உள்ளது. ஆட்டோகேடின் அடுத்த நிலை (Another Version) AUTO CAD LT ஆகும். இது இருபரிமாண (2D) வரைபடங்களை உருவாக்க மட்டும் பயன்படுகிறது.

ஆட்டோகேட் 2016 – ல் துவங்குவதற்கு முகப்புத்திரையிலுள்ள AUTOCAD குறியீட்டை (Shortcut Icon) இருமுறை கிளிக் (Double Click) செய்யவும். ஆட்டோகேட் ஆனாது பின்வரும் படத்தில் தோன்றுவது போல் துவக்கத் திரையில் வெளிப்படுத்தும்.



படம் 1. தொடக்க திரை (Login Screen)

துவக்கத் திரையின் கீழ் பகுதியில் இரண்டு வகையான தேர்வுகளை காணலாம்.

1. உருவாக்கு (Create)
2. கற்றுக்கொள் (Learn).

தற்போது உள்ள படத்தில் Create விருப்ப திரைப் பகுதியானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் இந்த விருப்ப பகுதியில் இருக்கும் போது பின் வருபவனவற்றை உங்களால் செய்ய முடியும்.

- புதிய வரைபடத்தை வரையத் தொடங்கலாம்.
- ஏற்கனவே உள்ள கோப்பினை திறந்து பார்க்கலாம்.

XI_TM_BME_Tamil_Chapter03_2022.indd 43 02/05/2022 17:33:13

- தாள் தொகுப்பினை திறக்கலாம் (Sheet set)
- இணைய வழி (on line) மூலமாக மேலும் பல முன் வடிவுகளை பதிவிறக்கம் செய்யலாம்.
- மென்பொருளுடன் இணைந்து வரக்கூடிய மாதிரிக் கோப்புகளை ஆய்வு செய்யலாம்.
- நீங்கள் சமீபத்தில் திறந்த கோப்பு பெயர் பட்டியலை காணலாம்.
- உங்களது மென்பொருள் / வன்பொருள் பற்றிய அறிவிப்புகள் ஏதேனும் உள்ளதா என சோதிக்கலாம்.
- Auto Desk 360° உடன் இணைக்கலாம். (ஆட்டோ டெஸ்க் கிளெவுடு)
- உங்கள் பின்னூட்டத்தை (Feed Back) ஆட்டோ டெஸ்கிற்கு அனுப்ப முடியும்.

திரையில் கீழ்பகுதியில் Learn விருப்பத்தை கிளிக் செய்வதன் மூலம் பின் வரும் திரையை காணலாம்.



படம் – 2 – திரை (Learn)

இந்த விருப்ப பகுதியில் பின்வருவனவற்றை காணலாம்.

- ஆட்டோகேட் 2016 – ன் தனிச்சிறப்புகள் பற்றிய ஒளிக்கோப்புகள் (Video Files)
- ஆட்டோகேடில் மாற்றியமைக்கும் கட்டளைகள் சிலவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பன போன்ற தனிச்சிறப்புகளை பற்றி இதர ஒளிக்காட்சிகளில் காணலாம்.
- ஆட்டோடெஸ்க் – ல் இருந்து பெறும் உதவிக் குறிப்புகள் (பொதுவாக ஒவ்வொரு முறையும் ஆட்டோ கேடை துவங்கும் போது வெவ்வேறு வகையான குறிப்புகளை காணலாம்.
- ஹிட்ச்ஹைக்கர் (Hitchhiker) மற்றும் லிண்டா.காம் (lynda.com) போன்ற நிகழ் நிலை வளைத்தள ஆதாரங்கள் மாணவர்களுக்கு உதவவும் மற்றும் பயிச்சியளிக்கவும் உதவுகின்றன.

www.tnschoolbooks.in

3.2 ஆட்டோகேட் (AUTO CAD) மென்பொருளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

ஆட்டோகேட் 2016 – ல் ஒரு புதிய கோப்பினை துவங்கும் போதோ அல்லது ஏற்கனவே உள்ள கோப்பினை திறக்கும் போதோ பின்வருமாறு தோற்றமளிக்கக் கூடிய ஆட்டோகேட் முகப்புத் திரையை காணலாம்.



படம் – 3

1. பயன்பாட்டு பட்டியல் (Application Menu) : இது கோப்பு தொடர்புடைய கட்டளைகளை கொண்டிருக்கும். (எ.கா.) New, Open, Save, Save As, Export, Publish, Print, Suite, Workflow, Drawing Uitilities, Close.
2. துவக்க தொகுதி (Start Tab) : Create மற்றும் Learn தேர்வுகள் தோன்றும்.
3. கோப்பு தொகுதி (File Tab) : கோப்பினை குறிப்பிட்ட (File Tab) பெயரில் உருவாக்கிய பின்பு இந்த தொகுதியை அணுகலாம்.
4. ரிப்பன் (Ribbon): இங்கு வரைதலுக்கு (Draw), கீழே, கோடு (Line), வட்டம் (Circle) போன்ற கட்டளைகளும், திருத்தியமைத்தல் (Modify) க்கு கீழ் நகர்த்துதல் (move), சுழற்றுதல் (Rotate) ஒழுங்கமைத்தல் (Trim) கட்டளைகளும், (Annotation) அளவுகள் மற்றும் குறிப்புகளை பயன்படுத்துவதற்கான கட்டளைகளும், அடுக்குகள் (layers), தொகுதிகள் (Blocks) போன்ற கட்டளைகளின் தொகுப்பாகும்.
5. பணியிடம் (Work Space) : இது பட்டியல்கள் (Menus) கருவிப்பட்டைகள் (Tool bars) போன்ற தட்டுகளின் தொகுப்பாகும். புதிய பணியை துவங்குவதற்கு இடது மேல் மூலையிலுள்ள பட்டியலிலுள்ள New Work Space – ஐ தேர்வு செய்க.
6. தகவல் மையம் (Info Center) : தெரியாத தரவுகளை பற்றிய விபரங்களை தெரிந்து கொள்ள பயன்படுகிறது.
7. ஆட்டோ டெஸ்க் 360° (Auto Desk 360°) : பயனர் உள்நுழைவதற்கு பயன்படுகிறது.
8. வியு கியூப் (View Cube) : வரைதலின் திசையை காணவும், அறிந்து கொள்ள பயன்படுகிறது.
9. வழி செலுத்துதல் பட்டை (Navigation Bar) : திரையை மேலும் கீழும் நகர்ந்த பயன்படுகிறது.
10. குறுக்கு இழைகள் (Cross Hairs) : செருகுமிடத்தின் இருப்பிடத்தை காட்ட பயன்படுகிறது.
11. நிலை பட்டை (Status Bar) : ஆட்டோ கேடில் நிலைமை பட்டையானது முக்கிய செயல்பாடுகளுடன் கூடிய ஆயத்தொலைவு பகுதிகளை கொண்டிருக்கும். அவற்றில் சில துல்லியமான இருபரிமாண வரை நிலைக்கானவை. மேலும் சில முப்பரிமாண வரைநிலைக்கானவை.
12. கட்டளை சாளரம் (Command Window): கட்டளைகள் தட்டச்சு செய்யப்படக்கூடிய பகுதியாகும். (எ.கா.) M குறுகிய வடிவம் Move முழுவடிவம் இந்த கட்டளையை

XI_TM_BME_Tamil_Chapter03_2022.indd 45 02/05/2022 17:33:13

www.tnschoolbooks.in

பயன்படுத்த ஒருவர் M அல்லது Move என தட்டச்சு செய்யலாம்.

13. வரைநிலை தொகுதி (Layout Tab): இது வரைபடத்தை அச்சுப்பிரதி எடுக்கப்பயன்படுவதாகும். ஒவ்வொரு லே அவுட்டும் (Layout) வரைபடத்திலுள்ள எழுத்துரு, அளவுகள், வரைபடம் பற்றிய தகவல்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

14. வடிவமைப்பு தொகுதி (Model Tab) : வடிவமைப்பு செய்யப்படும் தற்போதைய சாளரத்தை காட்டும்.

15. வரைகலை பகுதி (Graphical Area) : வரைகலை பகுதியானது மாணவர்களின் வரைவு பகுதியாகும். கோடுகள், வளைவுகள் மற்றும் வட்டம் போன்றவற்றை இங்கு வரைய இயலும். முப்பரிமாண படங்களை வரைய XYX தளங்களையும் மற்றும் இருபரிமாண படங்களை வரைய XY தளங்களையும் கொண்ட மிகச் சரியான இடமாகும். நிலைமை பட்டையின் பகுதியில் ஆயத்தொலைவுகளையும் கண்காணிக்கலாம்.

3.3 முக்கிய செயல் முறைகள் (IMPORTANT FUNCTIONS)

ஆர்த்தோ செயல்முறை (ORTHO FUNCTION):

ஆர்த்தோ கட்டளையானது 0°, 90°, 180°, மற்றும் 270° போன்ற கோண அளவுகளில் செங்கோண கோடுகளை நகர்த்தி வரைய உதவுகிறது. ஆர்த்தோ செயல்முறையை இயக்க / நிறுத்த விசை பலகையிலுள்ள F8 பொத்தான் பயன்படுகிறது.

ஆப்ஜெக்ட் ஸ்னாப் (Object Snap)

இந்த கட்டளை வரைபடத்திலுள்ள முக்கிய புள்ளிகளை துல்லியமாக குறிப்பிட பயன்படுவதாகும். இது இருபரிமாணம் (2D) மற்றும் முப்பரிமாண (3D) வரைபடத்தில் பயன்படுகிறது. இக்கட்டளையை இயக்க / நிறுத்த F3 பொத்தான் பயன்படுகிறது.

சில முக்கியமான ஆப்ஜெக்ட் ஸ்னாப்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- **இறுதி புள்ளி** (End Point): ஒரு கோட்டின் இறுதி புள்ளியை பெற
- **மைய புள்ளி** (Mid Point) : ஒரு கோட்டின் மையபுள்ளியை பெற
- குறுக்கு வெட்டு (Intersection) : இரண்டு பொருள்களின் குறுக்கு வெட்டு புள்ளியை பெற (ஏதேனும் இரண்டு பொருள்கள்)



படம் 4

OSNAP உரையாடல் பெட்டி செங்குத்தாக (Perpendicular) : ஒரு பொருளின் செங்குத்து புள்ளியை பெற

அருகாமையில் (Nearest) : நீங்கள் கிளிக் செய்யும் இடத்திற்கு அருகிலுள்ள ஒரு பொருளின் புள்ளியை பெற

F1 : ஒவ்வொரு கட்டளை அல்லது குறும் படத்துடன் தோன்றும் சிறு குறிப்புடன் மேலும் அதை பற்றிய உதவியை பெற F1 பொத்தானை அழுத்த வேண்டும்.



மேல் நகர்வு மற்றும் கீழ்நகர்வு பொத்தான்களை (Arrow up and down) மேல் மற்றும் கீழ் நகர்வு பொத்தான்களை முந்தைய

XI_TM_BME_Tamil_Chapter03_2022.indd 46 02/05/2022 17:33:13

கட்டளைகளுக்கிடையே நகர்த்த பயன்படுகிறது. பொருத்தமான கட்டளையை தேர்வு செய்தவுடன் நுழைவு பொத்தானையை (Enter Key) அழுத்தினால் தேர்வு செய்யப்பட்ட கட்டளையானது இயக்கப்படும்.

ESC : செயல்பட்டுக்கொண்டிருக்கும் கட்டளையில் இருந்து பாதியில் வெளிவர ESC பொத்தானை அழுத்தவும்,.

3.4 முக்கியமான கட்டளைகள் (IMPORTANT COMMANDS)

லைன் Line (L) : L வரைபடத்தில் எளிமையாக கோடுகள் வரைய பயன்படுகிறது.

சர்கிள் Circle (C) : C ஆட்டோகேடில் வட்டம் (Circle) வரைவதற்கு இக்கட்டளையானது பயன்படுகிறது.

பாலிலைன் Poly Line (PL): PL வரைபடத்தில் பல முனை கோடுகள் வரைவதற்கு இக்கட்டளையானது பயன்படுகிறது.

ரெக்ட்டேங்கிள் Rectangle (REC): REC இக்கட்டளையானது ஆட்டோகேடில் செவ்வகத்தை உருவாக்க பயன்படுகிறது.

பாலிகன் POLIGON (POL): POL இக்கட்டளையானது குறைந்த பட்சம் 3 பக்கங்கள் முதல் அதிக பட்சமாக 1024 பக்கங்களை கொண்ட பல கோணம் வரைய பயன்படுகிறது.

ஆர்க் ARC (A): ARC இதன் பெயரை போலவே ஆட்டோகேடில் வளைவு (Arc) வரைவதற்கு இக்கட்டளை பயன்படுகிறது.

எலிப்ஸ் ELLIPSE (EL) : EL இதன் பெயருக்கு ஏற்றது போல் சிறிய மற்றும் பெரிய அச்சுகளை கொண்ட நீள் வட்டம் வரைய பயன்படுகிறது.

காப்பி COPY (CO): CO என்பது ஆட்டோகேடில் பொருளினை நகலெடுக்க இக்கட்டளை பயன்படுகிறது.

அரே ARRAY (AR): AR இக்கட்டளையை பயன்படுத்தி செவ்வக வடிவிலான பொருள்களின் அணியையும் அல்லது பாதை அல்லது விட்டம் சார்ந்த பொருள்களின் அணியையும் உருவாக்க பயன்படுகிறது.

ட்ரிம் TRIM (TR): TR இக்கட்டளையானது ஒரு பொருளின் தேவையற்ற பாகத்தை நீக்கி ஒழுங்கான வடிவத்தை பெற பயன்படுகிறது.

ஸ்கேல் SCALE (SC): SC இக்கட்டளையானது பொருளின் அளவினை மாற்றியமைக்க பயன்படுகிறது.

பிளாக் BLOCK (B): B இக்கட்டளையானது ஒரு தொகுதியை உருவாக்க பயன்படுகிறது. தொகுதி இதில் தொகுதிக்கான பண்புக் கூறுகள் வரையறுக்கப்படுகின்றன.

இன்செர்ட் INSERT (I): I இக்கட்டளையானது ஏற்கனவே உள்ள தொகுதியை அல்லது வரைபடத்தை தொகுதியாக செருகுவதற்கு பயன்படுகிறது.

டெக்ஸ்ட் ஸ்டைல் TEXT STYLE (ST): ST இக்கட்டளையை பயன்படுத்தி Autocad– ல் எழுத்துக்களின் பாங்கினை மாற்றியமைக்கலாம்.

எக்ஸ்ப்லோட் EXPLODE (X): X இக்கட்டளையானது பல கோடுகளை கொண்ட ஒரு பொருளை ஒரு கோடாக மாற்றவும் அணிகள் அல்லது தொகுதியை எளிய வடிவமாக மாற்றவும் பயன்படுகிறது.

ஃபில்லட் FILLET (F): F கூர்மையான விளிம்புகளை கொண்ட ஒரு வடிவத்தின் முனைகளை வட்ட முனைகளாக (Rounded corners) மாற்ற பயன்படுகிறது. வட்ட முனைகளானது ஃபில்லெட்டுகள் (Fillet) எனவும் அழைக்கப்படுகிறது.

டிம் ஸ்டைல் (DIMSTYLE): இக்கட்டளையின் உதவியுடன் ஒரு வடிவத்தின் அளவீட்டு முறைகளை டிம் ஸ்டைல் மூலம் (DIMSTYLE) மாற்றியமைக்க முடியும்.

3.5 ஆட்டோகேடில் விசைப்பலகையின் குறுக்கு வழிகள் (SHORTCUT KEYS IN AUTOCAD)

Ctrl +N: இந்த Ctrl +N என்ற குறுக்கு வழி பொத்தானை பயன்படுத்தி ஆட்டோகேடில் புதிய வரைதலுக்கான கோப்பினை திறக்கலாம்.

Ctrl +S : வரைதல் கோப்பினை சேமிக்க இந்த Ctrl +S என்ற குறுக்கு வழி பொத்தான் பயன்படுகிறது.

Ctrl + Shift + S : ஏற்கனவே சேமிக்கப்பட்டுள்ள வரைதல் கோப்பினை வேறொரு பெயரில் சேமிக்க இந்த Ctrl + Shift + S குறுக்கு வழி பொத்தான் பயன்படுகிறது. "save as" கட்டளைக்கான பொத்தான் குறுக்கு வழியாகும்.

Ctrl + O : இந்த Ctrl + O குறுக்கு வழி பொத்தான் வரைதலுக்கான பரப்பை மட்டும் வெளிப்படுத்தும். தட்டுகள் மற்றும் இதர தொகுதிகள் மறைக்கப்பட்டிருக்கும். மறைக்கப்பட்டவை மீண்டும் தெரிய Ctrl + O பொத்தானை சேர்த்து அழுத்தவும்.

Ctrl + 1 : ஒரு பொருளினை தேர்வு செய்து Ctrl + 1 என்ற பொத்தானை சேர்த்து அழுத்தினால் தேர்வு செய்யப்பட்டுள்ள பொருளுக்குரிய பண்புக்கூறுகளை கொண்ட சாளரங்கள் (Palettes) தோன்றும். இதை பயன்படுத்தி பொருளின் பெரும்பான்மையான பண்புகளை மாற்றியமைக்க முடியும். PR – கட்டளையை பயன்படுத்தியும் பண்புகளுக்கான சாளரத்தை திறக்கலாம்.

Ctrl+2: உங்கள் வரைபடத்தை நேரடியாக வரைய பல வகையான ஆட்டோகேட் தொகுதிகளை கொண்டிருக்கும் வடிவமைப்பு மைய சாளரத்தை (Design centre palette) Ctrl + 2 வை பயன்படுத்தி திறக்கலாம்.

Ctrl + 9 : இந்த Ctrl + 9 குறுக்கு வழி பொத்தானை பயன்படுத்தி கட்டளையிடும் பகுதியினை தோன்றச் செய்யவோ அல்லது மறைக்கவோ முடியும். சில காரணங்களினால் கட்டளையிடும் பகுதி வரைதல் பரப்பில் இருந்து மறைக்கப்பட்டிருந்தால் அதை மீண்டும் தோன்றச் செய்ய இது பயன்படுகிறது.

Ctrl + C : வரைதல் பரப்பில் உள்ள ஒரு பொருளினை தேர்வு செய்து Ctrl + C என்ற குறுக்கு வழி பொத்தானை அழுத்தினால் அந்த பொருளானது பிடிபலகையில் (Clipboard) நகலெடுக்கப்பட்டிருக்கும்.

Ctrl + V : பிடிபலகையிலுள்ள நகலெடுக்கப்பட்ட பொருளினை வரைதலில் அப்பொருளின் அசல் பண்புக்கூறுகளுடன் ஒட்டுவதற்கு இந்த Ctrl + V என்ற குறுக்கு வழி பொத்தான் பயன்படுகிறது.

Ctrl + Shift + Y : நகலெடுக்கப்பட்ட பொருளினை ஒரு தொகுதியாக ஒட்டுவதற்கு இந்த Ctrl + Shift + Y குறுக்கு வழி பொத்தானை பயன்படுத்த முடியும். உருவாக்கப்பட்ட தொகுதியானது தொடர்பற்ற எழுத்துகளின் கோர்வையை பெயராக கொண்டிருக்கும். இந்த சாவிச் சேர்மானத்தை பயன்படுத்தி கிரியேட்டிங் பிளாக் விண்டோ – வின் (Creative Black Window) உதவியின்றி விரைவாக தொகுதிகளை உருவாக்கலாம்.

Ctrl+Z: வரைதலில் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட செயல்பாட்டினை தவிர்ப்பதற்கு இந்த Ctrl+ Z குறுக்கு வழி பொத்தான் பயன்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட முறை அழுத்துவதன் மூலம் தொடர்ச்சியாக செய்யப்பட்ட செயல்களை தவிர்க்கலாம்.

Ctrl + Y : இறுதியாக செய்யப்பட்ட செயல் தவிர் செயல்பாட்டை மீண்டும் செய்ய இந்த Ctrl + Y குறுக்கு வழி பொத்தான் பயன்படுகிறது.

Ctrl + Tab : இந்த Ctrl + Tab குறுக்குவழி பொத்தான் மூலம் திறக்கப்பட்டுள்ள அனைத்து வரைதல் தொகுதிகளில் ஒன்றிலிருந்து மற்றொரு தொகுதிக்கு மாறலாம்.

3.6 அமைப்புக் கட்டளைகள் (SETUP COMMANDS)

அலகுகள் : (UNITS)

தேவையான துல்லியத்தின் அடிப்படையில் பொருத்தமான தசம புள்ளிகளை தேர்வு செய்ய பயன்படுகிறது. குறிப்பிட்ட அலகை அமைக்கவும் (எ.கா. 2.75 மிமீ பரிமாணத்தை குறிக்க 0.00 என்ற தசம முறையை தேர்ந்தெடுக்கவும். இது இரண்டு தசம அலகுகளாகவும் மேலும் அலகுகளை மில்லி மீட்டராகவும் அமைக்கும் / குறிக்கும்.

வரம்பு : (LIMITS)

இக்கட்டளையானது வரைகலை பரப்பை குறிக்க / அமைக்க பயன்படுகிறது. மேல் மற்றும் கீழ் வரம்புகளை குறிப்பிடுவதன் மூலம் வரைவு செய்யப்பட வேண்டிய தாளின் அளவை / பரிமாணத்தை குறிக்கலாம். (எ.கா. (0,0), (420, 297) இந்த அளவுகளின் மூலம் தாளின் அளவை A3 அளவில் அமைக்கலாம். UCS ஒருங்கிணைப்பு அமைப்பானது (UCS – User Coordinate System) நகரக்கூடிய கார்ட்டிசியன் அச்சு அமைப்புகளின் அமைவிடம் மற்றும் அமைவுகளை நிலைப்படுத்த பயன்படுகிறது. கொடாநிலையாக தொடக்கப் புள்ளியாது (0,0) என அமையும். அனைத்து படங்களும் முதல் கால் பகுதியில் வரையப்படும். UCS கட்டளையின் தொடக்க விருப்ப நேர்வானது வடிவத்தின் ஒரு பகுதிக்கு தொடக்கத்தை மறு அமைவு செய்யும். எனவே X மற்றும் Y அச்சுகளுக்கான மதிப்பு (0,0) என்பது சரியாக இருக்கும். நீங்கள் UCS தொடக்கத்தை விட்டு விலகும் போது சேர்க்கப்படும் மதிப்பு தவறாக இருக்கலாம்.

3.7 முழுமையான மற்றும் அதிகரிக்கக் கூடிய அச்சு குறிப்புகள் (ABSOLUTE AND INCREMENTAL CO-ORDINATE REFERENCES)

அச்சுகளின் உதவியுடன் எவ்வாறு வரைபடம் வரையப்பட வேண்டும் என்பதை ஆட்டோகேட் பயனர் தேர்ந்தெடுக்கலாம்.

- முழுமையான அச்சு குறிப்புகள் (Absolute Co-ordinate References) :
- புள்ளிகளின் அமைவிடமானது (0,0) என்ற தொடக்க புள்ளிகளை பயன்படுத்தி அமைக்கப்படுகிறது.

(எ.கா) 100 மிமீ நீளமுள்ள ஒரு கோடு, தொடக்கப்புள்ளி (X, Y) = (20,20) உடன் "Y" அச்சுக்கு இணையாக வரையப்படுவதாக கருதுவோம். அக்கோட்டின் இறுதிப்புள்ளியாக ஆதிப்புள்ளியை (0,0) அடிப்படையாகக் கொண்ட (X2, Y2) = (20,120) என அமைக்கப்படுகிறது. இங்கு "Y" அச்சின் இறதிப்புள்ளி மற்றும் தொடக்க புள்ளியின் வேறுபாடு என்பது 120 – 20 = 100 மிமீ என நாம் வரைந்த கோட்டின் உண்மை நீளத்தை கொடுக்கிறது.

அதிகரிக்கக் கூடிய அச்சு குறிப்புகள் (Incremental co-ordinate References) :

தொடர்ச்சியான புள்ளியின் (Xn, Yn) அமைவிடம் என்பது அதன் முந்தைய புள்ளியின் ((Xn–1, Yn–1) அமைவிடத்தை பொறுத்து குறிப்பிடப்படுகிறது.

(எ.கா.) 100 மிமீ – ஐ கொண்ட ஒரு கோடானது தொடக்கபுள்ளி (X1, Y1) = (20,20) mm என்ற தொடக்க புள்ளியுடம் X – அச்சுக்கு இணையாக இருப்பதாக கருதுவோம். இரண்டாவது புள்ளியானது (X2, Y2) முந்தைய புள்ளியின் குறிப்புகளை அடிப்படையாக கொண்டு (X2,Y2) = (0,100) என்ற மதிப்புகளை பெற்றிருக்கும். இங்கு X அச்சின் மதிப்பில் எந்த மாற்றமும் இல்லை. மேலும் Y அச்சின் மதிப்பானது 100mm அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் Y –ன் மதிப்பானது 100mm நீளம் கொண்ட கோட்டினை நேரடியாக தரும்.

3.8 ஆட்டோகேடில் கட்டளைகளை பயன்படுத்துதல் (USING OF AUTOCAD COMMANDS)

படி 1: ரிப்பனில் தேவையான கருவியை தேர்ந்தெடுக்கவும் (அல்லது) கட்டளை ஜன்னல் திரையில் அதற்குரிய கட்டளையை தட்டச்சு செய்யவும்.

படி 2: தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு கட்டளைகளிலும் உள்ள பொருத்தமான விருப்பங்களை தேர்ந்தெடுக்கவும்.

படி 3 : அந்த வடிவத்தை வரைந்து முடிக்கவும்.

(எ.கா.) கோடு வரைதல் (Drawing a Line)

படி 1 : கட்டளை ஜன்னல் திரையில் Line என தட்டச்சு செய்து நுழைவு விசையை (Enter) அழுத்தவும்.

படி 2 : முதல் புள்ளியை குறிக்கவும் (பயனரே அச்சு அமைவுகளை தட்டச்சு செய்யலாம் அல்லது அங்கொன்றும் இங்கொன்றுமாக (Random) புள்ளியை அமைக்க திரையில் சுட்டியை இடது கிளிக் செய்து தொடக்க புள்ளியை அமைக்கவும்.



படி 3 : அடுத்த புள்ளியை குறிப்பதற்கு சுட்டியின் குறியீட்டை (Cursor) நகர்த்தி உரிய இடத்தில் மீண்டும் இடது கிளிக் செய்யவும் (left Click) அல்லது அச்சு புள்ளிகைளை தட்டச்சு செய்து நுழைவு விசையை (Enter key) அழுத்தவும்.



(Orthomode செயல்பாட்டில் உள்ள நிலையில் (ON) மேலே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள படி கோடு வரைய முடியுமா என்பதை சிந்தித்து சரிபார்க்கவும்).

3.9 ஆட்டோகேடில் அடுக்குகள் : (LAYERS IN AUTOCAD)

அடுக்குகள் என்பவை ஒரு வெளிப்படையான காகிதத்தின் தொகுப்பாகும். குறிப்பிட்ட வண்ணம், கோட்டின் வகை மற்றும் கோட்டின் அகலம் போன்ற முறைகளை பயன்படுத்தி வரைபடத்தின் ஒரு பகுதியாக வரையலாம். இந்த அமைப்பானது (Layers) அடுக்குகள் என அழைக்கப்படும். அதாவது பொருட்களை கட்டுப்படுத்துதலை தவிர்த்து அடுக்குகளை கட்டுப்படுத்துவதன் மூலம் வரைபடத்தை கட்டுப்படுத்தலாம்.

(எ.கா.) அடுக்குகளை பயன்படுத்தி கோட்டினை மாற்றியமைத்தல் :

- அடுக்கு பண்புகூறுகள் மேலாளர் பெட்டியிலிருந்து தேவையான அடுக்கினை தேர்ந்தெடுக்கவும்.
- கோட்டுவகை புலத்தை பயன்படுத்தி கோட்டு வகை பெயரின் மேல் கிளிக் செய்யவும். பின் வரும் உரையாடல் பெட்டியை நீங்கள் காணலாம்.

உரையாடல் பெட்டியில் விரும்பிய கோட்டின் வகை பட்டியலிடப்பட்டிருந்தால் அதை கிளிக் செய்யவும்.



- பட்டியலிடப்பட வில்லையெனில் அந்த வகையை நீங்கள் ஏற்ற வேண்டும்(load). Load – பொத்தானை கிளிக் செய்தால் பின் வரும் உரையாடல் பெட்டியை காணலாம்.
- நீங்கள் விரும்பும் கோட்டின் வகையை தேடவும். ஏற்றம் செய்ய அந்த கோட்டின் வகையை தேர்ந்தெடுக்கவும். OK என்ற பொத்தானை கிளிக் செய்யவும். இப்பொழுது கோட்டின் வகையானது ஏற்றம் செய்யப்படும். அதை நீங்கள் தேர்ந்தெடுத்து Ok பொத்தானை கிளிக் செய்யவும்.

(குறிப்பு : மேலே உள்ள எடுத்துக்காட்டில் குறிப்பிட்டுள்ளதை போலவே அடுக்குகளை பயன்படுத்தி கோட்டின் அகலம் (line width) மற்றும் வண்ணத்தை (Color) அமைக்கலாம்).

3.10 ஆட்டோகேடில் அளவிடுதல் : (DIMENSIONING IN AUTOCAD)

அளவிட்டுமுறை பின் வரும் மூன்று கூறுகளை கொண்டுள்ளது.

1. அளவுக் கோடு (DIMENSION LINE)
2. அளவின் எழுத்துரு (DIMENSION TEXT)
3. நீட்டப்பட்ட கோடு (EXTENSION LINE)



அளவீடுகளின் வகைகள் (Types of Dimension)

1. நேர் கோட்டு அளவுகள் (Linear Dimension) : X,Y மற்றும் Z அச்சுகளில் இரு புள்ளிகளுக்கு இடையே உள்ள கோட்டினை அளவிடப்படுகிறது.
2. சீரமைக்கப்பட்ட அளவுகள் (Aligned Dimension) : இருபுள்ளிகளுக்கிடையே சாய்ந்த நிலையிலிருக்கும் கோட்டினை அளவிடப்படுகிறது.
3. வட்ட அளவுகள் (Circular Dimension) : வில்லின் நீளம், ஆரம், விட்டம் (வில் மற்றும் வட்டம்)
4. கோண அளவு (Angular Dimension) : இரண்டு கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளும் கோணம்.

அளவிட்டினை சேர்த்தல் / செருகுதல் (Inserting a Dimension) :

எ.கா. Annotate தொகுதிக்கு செல்லவும். Dimensions pannel என்பதில் Angular Button என்பதை கிளிக் செய்யவும்.

XI_TM_BME_Tamil_Chapter03_2022.indd 50 02/05/2022 17:33:13



- சாய்ந்த கோட்டினை தேர்ந்தெடுத்து சுட்டியின் குறியீட்டை (Cursor) நகர்த்தலாம். கோண பரிமாணமானது (Angular Dimension) ஏதேனும் ஒரு அச்சை பொறுத்து குறிக்கலாம்.



- தேர்ந்தெடுககப்படும் பொருளினை அடிப்படையாக கொண்டு ஆட்டோகேடை பின்வரும் முறைகளில் ஒன்றை பயன்படுத்தலாம்.

1. நீங்கள் வட்ட வளைவை தேர்ந்தெடுத்தால் (Circular arc) ஆட்டோகேடானது சேர்க்கப்பட்ட கோணத்தை அளவிடும்.
2. நீங்கள் வட்டத்தை தேர்ந்தெடுத்தால் நீங்கள் தேர்வு செய்யும் புள்ளி முதல் புள்ளியாக இருக்கும். வட்டத்தின் மையமானது இரண்டாவது புள்ளியாக இருக்கும். மேலும் மூன்றாவது புள்ளியை பயனர் தேர்வு செய்யலாம்.
3. நீங்கள் கோட்டினை தேர்வு செய்தால் அது உங்களை இரண்டாவது கோட்டினை தேர்ந்தெடுக்க கேட்கும்.
4. நீங்கள் ஒரு புள்ளியை தேர்வு செய்தால் அது மையப்புள்ளியாக கருதப்படும். மேலும் இரண்டு புள்ளிகளை குறிக்குமாறு பயனரை ஆட்டோ கேட் கேட்கும்.
5. டிம் ஸ்டைல் (DIMSTYLE) கட்டளையை பயன்படுத்தி நாம் எழுத்துருவின் பாணியை மாற்றியமைக்கலாம். (SYTLE OF TEXT) (எழுத்துருவின் உயரம், இடைவெளி, அம்புகுறியின் அளவு, ஏற்பமைவு போன்றவை)

(குறிப்பு : ஹேட்சிங் முறையானது ஒரு பொருளினை சாதாரண முறை மற்றும் வெட்டுத் தோற்ற முறையில் வேறுபடுத்தி காட்டுகிறது. இது ஒரு பொருளின் இயல்பான அமைப்பையும், அது போன்ற வெட்டுத் தோற்ற அமைப்பையும் காட்டுகிறது).

3.11 DWG கோப்பினை PDF கோப்பாக மாற்றம் செய்தல் : (EXPORRTING DWG FILE TO PDF)

சரியான வரைநிலையை தேர்ந்தெடுத்த பிறகு Output தொகுதிக்கு செல்லும். Export to DWG / PDF தொகுதியை அடையாளம் காணவும். பிறகு Export பொத்தானை கிளிக் செய்யவும். அடுத்து PDF – ஐ கிளிக் செய்யவும்.



வினாக்கள்

பகுதி – அ

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

(1 மதிப்பெண்)

1. தெரிந்திராத கட்டளைகளை பற்றிய உதவியை பெற எந்த செயல்முறை அல்லது விசை பயன்படுகிறது?

   அ. F1 ஆ. F8

   இ. F3 ஈ. F5

2. பின்வருபவனவற்றுள் எது வரைதல் திசையை அறிய உதவுகிறது ?

   அ. வழிகாட்டி பட்டை (Navigation Bar)

   ஆ. கனசதுரம் (View Cube)

   இ. குறுக்கு இழைகள் (Cross Hairs)

   ஈ. நிலைமை பட்டை (Status Bar)

3. கோட்டினை ஒழுக்கமைவு செய்ய பயன்படும் செயல்முறை

   அ. OSNAP ஆ. RIGHTALIGN

   இ. ORTHO ஈ. XALIGN

4. PL – கட்டளையை பயன்படுத்தி வரையக் கூடியது ____________________

   அ. சாதாரண கோடு ஆ. பல கோடு

   இ பல கோணம் . ஈ. செங்குத்து கோடு

5. உங்களுடைய வரைதலில் கடைசியாக செய்யப்பட்ட செயலை தவிர்க்க பின்வரும் எந்த சாவிச் சேர்மானம் பயன்படுகிறது?

   அ. Ctrl +Shift + V ஆ. Ctrl + C

   இ.Ctrl + G ஈ. Ctrl + Z

பகுதி –ஆ

II ஓரிரு வரிகளில் விடையளிக்க.

(3 மதிப்பெண்கள்)

6. ஆட்டோ கேடில் OSNAP மற்றும் ORTHOMODE செயல் முறைகளை ஒப்பிடுக.
7. பின்வருவருனவற்றை பற்றி குறிப்பு வரைக.

   அ. காண் சதுரம் (VIEW CUBE)

   ஆ. வழிகாட்டுப்பட்டை (Navigation Bar)

8. வரைகலை பரப்பு மற்றும் பணியிடம் வேறுபடுத்துக.
9. ஆட்டோகேடில் பின்வருபவனவற்றின் செயல்பாடுகளை எழுதுக.

(Stainless Steel): இதில் மெல்லிய ஆக்சைடு படலம் உள்ளதால் வேதிவினை புரியாமல் தடுக்கிறது மேலும், இதில் இந்த உலோகத்தில் துருகறைகள் (Stains) ஏதும் படிவதில்லை எனவே, இதனை துருப்பிடிக்காத எஃகு (Stainless Steel) என்று அழைக்கிறோம். இதில் 10 முதல் 20 சதவீதம் வரை குரோமியம் முக்கிய கலவை உலோகமாக உள்ளது. இது அதிக அரிமான எதிர்ப்பு தன்மை கொண்டது. வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் தயாரிக்க இது பயன்படுகிறது.

ஆ) வெட்டுளி எஃகு (Tool Steel):

இந்த வெட்டுளி எஃகில் டங்ஸ்டன், மாலிப்டினம், கோபால்ட் மற்றும் வெனடியம் ஆகிய உலோகங்கள் கலந்துள்ளது. இவை வெப்ப எதிர்ப்பு மற்றும் ஆயுட்காலம் ஆகிய பண்புகளை அதிகரிக்கிறது. துளையிடும் அலகு மற்றும் வெட்டுளிகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

i) **டங்ஸ்டன் எஃகு** (Tungsten Steel): அதிவேக டங்ஸ்டன் எஃகு என்பது அதிக கரி கலந்த வெட்டுளி எஃகு ஆகும்.இதில் அதிக அளவு டங்ஸ்டன் கலந்துள்ளது. அதிவேக எஃகு (HSS) வெட்டுளியில் கலந்துள்ளது போல், இதில் டங்ஸ்டன் 18%, குரோமியம் 4%, வெனடியம் 1%, கார்பன் 0.7%, மற்றும் இரும்பு கலந்துள்ளது.

ii) **அதிவேக எஃகு** (High Speed Steel): அதிவேக எஃகு என்பது ஒரு வெட்டுளி உலோகமாகும். டங்ஸ்டன், மாலிப்டினம், வெனடியம் மற்றும் குரோமியம் ஆகியவை அதிவேக எஃகின் உலோக கலவைகள் ஆகும். இவ்வகை உலோகங்களால் செய்யப்படும் வெட்டுளி, துளையிடுதல், மில்லிங் செய்தல், கடைசல், மரையிடுதல், துளைபெருக்குதல், பல்லிணை வெட்டுதல் போன்ற இயந்திரப் பணிகள் செய்யப் பயன்படுகிறது.

வார்ப்பிரும்பு (Cast Iron):

வார்ப்பிரும்பு என்பது கார்பன் கலந்த எஃகு வகையைச் சார்ந்தது.இதில் கார்பன் அளவு 2% முதல் 4.5% வரை உள்ளது.இந்த கார்பன் அளவு தேவையான பொருட்களை எளிதில் வார்ப்பு செய்யப் பயன்படுகிறது.

எஃகில், கலவை எஃகு மூலப்பொருட்களை சேர்ப்பதால் ஏற்படும் முக்கிய விளைவுகள்

மூலப்பொருட்கள்	சதவிகிதம்	விளைவுகள்
நிக்கல்	2.0 முதல் 5.0 வரை 12.0 முதல் 20.0 வரை	எஃகிற்கு உறுதியைத் தருகிறது. அரிமான எதிர்ப்பு மற்றும் கம்பியாக நீளும் தன்மையை அதிகரிக்கிறது.
குரோமியம்	0.5 முதல் 2.0 வரை 2.0 முதல் 18.0 வரை	கடினத்தன்மை, அரிமான எதிர்ப்பு, வெப்ப எதிர்ப்பு ஆகியவற்றை அதிகரிக்கிறது.
மாலிப்டினம்	0.2 முதல் 5.0 வரை	கார்பனின் நிலைப்புத் தன்மையை உருவாக்குகிறது. நுண் துகள்கள் உருவாக்க உதவுகிறது.
வெனடியம்	0.15	கார்பனின் நிலைப்புத் தன்மையை உருவாக்குகிறது.
டங்ஸ்டன்	20வரை	அதிக வெப்ப நிலையில் கடினத்தன்மையை தக்க வைக்க உதவுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 77 1/31/2023 12:18:08 PM

வார்ப்பிரும்பின் வகைகள் :

1. வெள்ளை வார்ப்பிரும்பு (White Cast Iron)
2. சாம்பல் நிற வார்ப்பிரும்பு (Grey Cast Iron)
3. உலோக கலவை வார்பு இரும்பு (Alloy Cast Iron)
4. தகடாக நீளும் வார்ப்பிரும்பு (Malleable Cast Iron)

6.4.2 இரும்பு கலவாத உலோகம் (Non – Ferrous Metals)

வ. எண்	இரும்பு கலவாத உலோகம்	விளக்கம்
1.	அலுமினியம்	தாது : பாக்சைட் அடையாளக்குறியீடு : Al அணு எண் : 13 உருகு நிலை : 658° C பயன்கள் : மண் அச்சு செய்ய
2.	காப்பர்	தாது : பைரைட் அடையாளக்குறியீடு : Cu அணு எண் : 29 உருகு நிலை : 1083°C பயன்கள் : மின் கம்பிகள் மற்றும் பாத்திரங்கள் செய்ய
3.	துத்தநாகம்	தாது : ஸ்பாலரைட் (Sphalerite) அடையாளக்குறியீடு : Zn அணு எண் : 30 உருகு நிலை : 419°C பயன்கள் : இரும்பு மற்றும் எஃகு உலோக பாகங்களின் மீது முலாம் பூச
4.	ஈயம்	தாது : கலினா(Galena) அடையாளக்குறியீடு : Pb அணு எண் : 82 உருகு நிலை : 326°C பயன்கள் : பேட்டரிகள், குழாய்கள், சால்டரிங் எலக்ட்ராடுகள் செய்ய
5.	பித்தளை	தாது : காப்பர் மற்றும் துத்தநாகம் அடையாளக்குறியீடு : ----- அணு எண் : ----- உருகு நிலை : 930°C பயன்கள் : பூட்டு, பல்லிணைகள் (gears), தாங்கிகள் (bearings) மற்றும் வால்வுகள் செய்ய

இந்த உலோகத்தில் இரும்பு கலந்திருக்காது. இவ்வுலோகத்தில் வேறு உலோகங்களை சேர்ப்பதால் உலோகக் கலவையைப் பெறலாம். உதாரணமாக, காப்பர் மற்றும் துத்தநாகம் உலோகங்களை சேர்த்து வெண்கல உலோகக் கலவையைப் பெறலாம். குறைந்த எடை, அதிக வலிமை, அதிக உருகுநிலை தேவைப்படுகின்ற உள்கட்டமைப்பு பணிகளுக்கு இவ்வகை இரும்பு கலவாத உலோகங்கள் பயன்படுத்தப்படுகிறது. மின்னணு பொருட்கள் தயாரிக்கவும் இது பயன்படுகிறது.

6.5. வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்தல்

உலோகங்களை ஒரு குறிப்பிட்ட முறையில் குறிப்பிட்ட வெப்பநிலைக்கு வெப்பப்படுத்தி, குறிப்பிட்ட வேகத்தில் குளிரப்படுத்துவதால் அதன் உள் அமைப்பில் மாறுதல் ஏற்படும். இதன் மூலம் உலோகத்தில் இயற்பியல் மற்றும் இயந்திரவியல் பண்புகளை மாற்றி அமைக்கலாம்.

6.6. வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்வதன் நோக்கம் (Purpose of Heat TreatmenT)

1. உலோகத்தின் நீள்விசை தன்மை மேம்படுத்தப்படுகிறது.
2. உலோகத்தின் உள் அமைப்பில் உள்ள உட்தகவை நீக்கப்படுகிறது
3. துகள் அளவு மாற்றப்படுகிறது.
4. கடினத் தன்மை மற்றும் நீள்விசை தாங்கும் சக்தி ஆகியவற்றை அதிகரிக்கலாம்.
5. இயந்திரவியல் பண்பை மேம்படுத்தப்படுகிறது.
6. காந்தப் பண்புகள் மாற்றம் செய்யப்படுகிறது.
7. உலோகத்தின் உறுதித் தன்மை மற்றும் உள் அமைப்பு ஆகியவை மேம்படுத்தப்படுகிறது.

6.7. கீழ் மற்றும் மேல் முக்கிய வெப்பநிலை (LOWER AND HIGHER CRITICAL TEMPERATURE)

உலோகங்களை வெப்பப்படுத்தும் பொழுது குறிப்பிட்ட வெப்பநிலையில் அதன் உள் அமைப்பு மாறுபடத் துவங்கும். இந்த குறிப்பிட்ட வெப்பநிலைக்கு 'கீழ் முக்கிய வெப்பநிலை' என்று பெயர். மேலும் அந்த உலோகங்களை தொடர்ந்து வெப்பப்படுத்தினால், அதன் உள் அமைப்பு முழுவதும் மாறிவிடும். உலோகங்களின் உள் அமைப்பு முழுவதும் மாற்றப் பயன்படும் வெப்ப நிலைக்கு 'மேல் முக்கிய வெப்பநிலை' என்று பெயர்.

6.7.1 வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்யும் முறைகள் (Method Of Heat Treatment):

1. மிருதுவாக்குதல் (Annealing)
2. நார்மலைசிங் (Normalising)
3. கடினப்படுத்துதல் (Hardening)
4. பதப்படுத்துதல் (Tempering)
5. புறக்கடினமாக்குதல் (Case Hardening)
   அ) கார்புரைசிங் (Carburising)
   ஆ) நைட்ரைடிங் (Nitriding)
   இ) சயனைடிங் (Cyaniding)
   ஈ) ஃபிளேம் ஹார்டனிங்(Flame Hardening)

6.7.2. மிருதுவாக்குதல் (Annealing)

உலோகத்தை குறிப்பிட்ட வெப்பநிலைக்கு வெப்பப்படுத்தி, அதே வெப்பநிலையில் பல மணி நேரம் அல்லது பல நாட்கள் வைத்திருந்து பிறகு மெதுவாக குளிரச் செய்வதற்கு 'மிருதுவாக்குதல்' என்று பெயர். குளிரப்படுத்துவதற்கு மணல், சுண்ணாம்பு மற்றும் சாம்பல் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும், உலோகங்களை மிருதுவாக்க இம்முறை பயன்படுத்தப்படுகிறது.



XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 79 1/31/2023 12:18:08 PM

மிருதவாக்குதல் செய்ய பின்பற்றப்படும் முறைகள் :

1. இம்முறையில் குறைந்த கரி கொண்ட எஃகினை மேல் முக்கிய வெப்பநிலைக்கு மேலே 30°c முதல் 50°c வரை வெப்பப்படுத்தப்படுகிறது.
2. எஃகினை, அதே வெப்பநிலையில் குறிப்பிட்டகால இடைவெளியில் வைக்க வேண்டும்.
3. மணல், சாம்பல் அல்லது சுண்ணாம்பு ஆகியவற்றை பயன்படுத்தி எஃகு மெதுவாக குளிரப்படுத்தப்படுகிறது. அவ்வாறு செய்யும் பொழுது குளிரப்படுத்துதல் மெதுவாக நடைபெறுகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
4. உலோகத்தை வெப்பப்படுத்த எண்ணெய் ஊது உலை, எரிவாயு ஊது உலை, அல்லது மின்சார உலை பயன்படுத்தப்படுகிறது.

   தெர்மோகப்புல் (Thermocouple) கொண்டு வெப்பம் கண்காணிக்கப்படுகிறது.

மிருதுவாக்குதலின் நோக்கம் :

1. எஃகு மிருதுவாக்கப்படுகிறது.
2. இயந்திரவியல் பண்பு அதிகரிக்கப்படுகிறது
3. கம்பியாக நீளும் தன்மை மற்றும் உறுதித்தன்மை அதிகரிக்கப்படுகிறது.
4. உலோகத்தின் உட்தகவு (Stress) விடுவிக்கப்படுகிறது.
5. துகள்களின் அளவு (Grain size) மாற்றப்படுகிறது.
6. ஒரு படித்தான (homogenous) உள் அமைப்பு மேம்படுத்தப்படுகிறது.

6.8. நார்மலைசிங் (NORMALIZING)

உலோகத்தை அதன் மேல் முக்கிய வெப்ப நிலைக்கு வெப்பப்படுத்தி, அதே வெப்ப நிலையில் குறிப்பிட்ட கால அளவு வைக்க வேண்டும். பிறகு காற்றில் குளிரவைக்க வேண்டும். அவ்வாறு குளிரவைக்கப்படும் போது உலோகத்தின் உள்ளமைப்பு மாற்றமடைகிறது.

ரோலிங், ஃபோர்ஜிங் மற்றும் வார்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட பொருட்களின் உள் அமைப்பு மிகவும் ஒழுங்கற்றதாக மாறுகிறது. அந்த உள்ளமைப்பு ஒழுங்கானதாகவும், அதன் துகள் அளவை மாற்றியமைக்கவும் நார்மலைசிங் செய்யப்படுகிறது.எனவே உலோகம் அதன் பழைய நிலையை அடைகிறது.



நார்மலைசிங் (Normalizing)

நார்மலைசிங் செய்யும் முறை (Process Of Normalizing)

1. இம்முறையில் எஃகை அதன் மேல் முக்கிய வெப்பநிலைக்கு மேலே 50°c –க்கு வெப்பப்படுத்தப்பட வேண்டும். அதே வெப்பநிலையில், தோராயமாக 15 நிமிடம் வரை வைத்திருக்க வேண்டும்.
2. பிறகு காற்றில் குளிரவைக்க வேண்டும்.

நார்மலைசிங் செய்வதன் நோக்கம் (Purpoe Of Normalizing) :

1. துகள்களின் அளவு (Grain size) மாற்றப்படுகிறது.
2. உலோகத்தின் உட்தகவு (Stress) விடுவிக்கப்படுகிறது.
3. இயந்திரப்பணி செய்யும் தன்மையை மேம்படுத்தப்படுகிறது.
4. உறுதித் தன்மையை மேம்படுத்தப்படுகிறது.
5. ஒரு படித்தான (homogeneous) உள் அமைப்பை மேம்படுத்தப்படுகிறது.

6.8.3. கடினப்படுத்துதல் (Hardening):

இம்முறையில், உலோகப் பொருட்கள் கடினப்படுத்தப்படுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 80 1/31/2023 12:18:09 PM

கடினப்படுத்தும் முறை
(Process of Hardening):

1. எஃகை அதன் மேல் முக்கிய வெப்பநிலைக்கு (சுமார் 750°c முதல் 850°c) வரை வெப்பப்படுத்த வேண்டும்.
2. அதே வெப்ப நிலையில் குறிப்பிட்ட கால அளவு வைத்திருந்து, தண்ணீர் அல்லது உப்புகரைசலில் வேகமாக குளிரவைக்க வேண்டும்.
3. பின் வரும் காரணிகளுக்கு ஏற்ப கடினத்தன்மை மாறுபடும்.

 1. கார்பன் அளவு
 2. குளிர்விக்கும் அளவு
 3. உலோகத்தின் அளவு

கடினப்படுத்துவதன் நோக்கம்
(Purpose Of Hardening)

1. உலோகத்தின் கடினத் தன்மையை அதிகரிக்க.
2. தேய்மான எதிர்ப்பு மற்றும் பிற உலோகங்களை வெட்டுவதற்கு தேவையான குணத்தை பெற.
3. உறுதி, நீள்விசை, வலிமை மற்றும் கம்பியாக நீளும் தன்மை ஆகியவற்றை மேம்படுத்த.

6.8.4. பதப்படுத்துதல் (Tempering) :

இது எஃகில் செய்யப்படும் வழக்கமான முறையாகும். எஃகின் கடினத்தன்மை மற்றும் உறுதித்தன்மையை மேம்படுத்த பதப்படுத்துதல் செய்யப்படுகிறது.மேலும் சிதறும் தன்மையை குறைக்கவும் இந்த முறை பயன்படுத்தப்படுகிறது. உலோகத்திற்கு கம்பியாக நீளும் தன்மை மற்றும் நிலையான கட்டமைப்பு (Stable structure) இம்முறையில் கிடைக்கிறது. எஃகு அல்லது மற்ற வெட்டுளிகள் அதிக கடினத் தன்மையாக இருந்தால் அது சிதறும் தன்மை பெற்றிருக்கும், எனவே வெப்பப்படுத்தி பதப்படுத்தும் முறையில் சிதறும் தன்மையைக் குறைக்கலாம்.

பதப்படுத்துதல் செய்யும் முறை
(Process of Tempering):

1. கடினப்படுத்தப்பட்ட எஃகை அதன் கீழ் முக்கிய வெப்பநிலைக்கு சற்று குறைவாக வெப்பப்படுத்த வேண்டும்.
2. குறிப்பிட்ட நேரம் அதே வெப்பநிலையில் வைத்திருக்க வேண்டும்.
3. பிறகு மெதுவாக குளிரவைக்க வேண்டும்.

பதப்படுத்துவதன் நோக்கம்
(Purpose of Tempering):

1. கடினப்படுத்தப்பட்ட எஃகின் சிதறும் தன்மையை குறைக்க.
2. உலோகத்தின் சிறந்த இயந்திரவியல் பண்பை பெற.
3. உலோகத்தின் உள் கட்டமைப்பை நிலைநிறுத்த.
4. உறுதித் தன்மையை அதிகரிக்க
5. கம்பியாக நீளும் தன்மையை மேம்படுத்த.

புறக்கடினமாக்குதல் (Case Hardening):

இம்முறையில் உலோகத்தின் மேற்பரப்பு மட்டும் கடினப்படுத்தப்படுகிறது.அவ்வாறு செய்யும் பொழுது அந்த உலோகத்தின் உட்பகுதி மிருதுவாகவே இருக்கும். இம்முறையில் உலோகத்தின் மேற்பரப்பில் கார்பன் உட்புகுத்தப்படுகிறது. இது உலோகத்தின் மேற்பரப்பில் வேதிவினை மாற்றத்தை ஏற்படுத்துகிறது.





XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 81 1/31/2023 12:18:09 PM

விவரங்கள்	கார்புரைசிங்	நைட்ரைடிங்	சயனைடிங்
நோக்கம்	மேற்பரப்பில் கார்பனை சேர்த்தல்.	மேற்பரப்பில் நைட்ரஜனை சேர்த்தல்.	மேற்பரப்பில் கார்பன் மற்றும் நைட்ரஜனை சேர்த்தல்.
மேற்பரப்பை உருவாக்குதல்	குறைந்த கரி கொண்ட எஃகின் மேற்பரப்பில் அதிக கடினமான கார்பனை படியவைத்தல்.	ஏற்கெனவே கடினப்படுத்தப்பட்ட எஃகின் மேற்பரப்பில் அதிக கடினமான நைட்ரைடை படியவைத்தல்.	குறைந்த கரி கொண்ட எஃகின் மேற்பரப்பில் கார்பன் மற்றும் நைட்ரைடை சேர்த்தல்.
சீராக நிலை நிறுத்தப்பட வேண்டிய வெப்ப நிலை.	$900^{0}c – 930^{0}c$	$500^{0}c – 575^{0}c$	$800^{0}c – 900^{0}c$
குளிரப்படுத்துதல்	எண்ணெய் அல்லது தண்ணீர்	குளிரப்படுத்த தேவையில்லை	எண்ணெய் அல்லது தண்ணீர்
கடினப்படுத்தப்படும் ஆழம்	0.1–0.25 மி.மீ	0.5மிமீ வரை	0.4 மிமீ வரை
பயன்பாடு	பல்லிணைகள், கேம் சாப்ட், தாங்கிகள்	கிராங்க் பின், ஷாப்ட்கள்,வெட்டுக் கருவிகள்	திருகாணிகள், நட்டுகள்,போல்ட்டுகள், பல்லிணைகள், கேம்

புறக்கடினமாக்குதலின் நோக்கம் (Purpose Case Hardening):

1. தேவையான தேய்மான எதிர்ப்பை மேற்பரப்பில் பெற.
2. அரிமான எதிர்ப்பு பண்பை மேம்படுத்த
3. வெப்பம் தாங்கும் திறனை மேம்படுத்த
4. குறைந்த விலை கொண்ட உலோகத்தின் ஆயுட்காலத்தை அதிகரிக்க.

புறக்கடினமாக்கும் சில முறைகள்

1. கார்புரைசிங் (Carburising)
2. நைட்ரைடிங் (Nitriding)
3. சயனைடிங் (Cyaniding)
4. ஃபிளேம் ஹார்டனிங் (Flame Hardening)

6.9. விரைவாக குளிரச் செய்தல் (QUENCHING):

இது திடீரென குளிரப்படுத்தும் முறையாகும். இது உலோகத்தை வெப்பப்படுத்திய பிறகு தண்ணீர், எண்ணெய் அல்லது அழுத்தக் காற்று ஆகியவற்றின் மூலம் குறுகிய நேரத்தில் குளிரச் செய்வதற்கு" விரைவாக குளிரச் செய்தல்" என்று பெயர்.

விரைவாக குளிரச் செய்ய பயன்படும் பொருட்கள்

1. சோடியம் கலந்த நீர் கரைசல்
2. குளிர்ந்த நீர்
3. உப்பு கரைசல்
4. எண்ணெய் வகைகள்
5. காற்று

6.10. வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்ய பயன்படும் உலைகள்

1. மின்சார உலை
2. எரிவாயு ஊது உலை
3. எண்ணெய் ஊது உலை
4. உப்பு நீர் ஊது உலை



மின்சார உலை



மின்சார உலை (Sintering Furnace):

உலோகங்களை வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்ய மின்சாதனங்களை பயன்படுத்தி வெப்பப்படுத்தும் உலைக்கு மின்சார உலை என்று பெயர்.இந்த மின்சார உலையினுள் மூன்று அறைகள் உள்ளன. அவை வெப்ப அறை, சோக்கிங் (Soaking) அறை மற்றும் குளிர்விக்கும் அறை என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தெர்மோஸ்டேட் (Thermostat) மூலம் உலையினுள் வெப்பம் கட்டுப்படுத்தப்படுகிறது. வெப்ப அளவை தெர்மோகப்புல் (Thermocouple) மூலம் அளக்கப்படுகிறது. வெப்பப்படுத்தி குணமாற்றம் செய்ய வேண்டிய பொருளை தகட்டில் வைத்து உலையினுள் தொடர் இரும்புப்பட்டை(Iron Belt Conveyers) மூலமாக அனுப்பப் படுகிறது.

அப்பொருள் வெப்ப அறையில் வெப்பப்படுத்தப்படுகிறது, சோக்கிங் அறையில் (Soaking zone) அதே வெப்ப நிலையில் பராமரிக்கப்படுகிறது. பிறகு அப்பொருள் குளிர்விக்கும் அறையில் குளிர்விக்கப்படுகிறது. இம்முறையில் தொடர் இரும்புப்பட்டையை (Iron Belt conveyers) இயக்கவும், வேகத்தை கூட்டவும், குறைக்கவும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் உள்ளன.

செயல்பாடுகள்

1. பொறியியல் பொருட்கள் சிலவற்றை சிறிய அளவில் சேகரி.
2. சிதறும் தன்மை கொண்ட(Brittleness) பொருட்களை பட்டியலிடுக.
3. ஏதேனும் ஒரு வார்ப்பக பட்டறைக்கு சென்று அங்கு நடைபெறும் செயல் முறைகளை குறிப்பு எடுத்து ஒப்படைக்கவும்.

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 83 1/31/2023 12:18:10 PM

சொற்களஞ்சியம்

Brittleness	சிதறும் தன்மை
Malleability	தகடாக நீளும் தன்மை
Ductility	கம்பியாக “நீளும் ம் தன்மை
Elasticity	மீள்தன்மை
Galvanizing	துத்தநாக முலாம் பூசுதல்
Annealing	மிருதுவாக்குதல்
Hardening	கடினப்படுத்துதல்
Case Hardening	புறக் கடினமாக்கல்
Quenching	விரைவாக குளிரச்செய்தல்
Sintering Furnace	மின்சார உலை

வினாக்கள்

பகுதி–அ

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

(1 மதிப்பெண்)

1. அரிமான எதிர்ப்பு தன்மை என்பது
   அ) இயற்பியல் பண்பு
   ஆ) வேதியியல் பண்பு
   இ) மின்னியல் பண்பு
   ஈ) இயந்திரவியல் பண்பு

2. மீள் தன்மை என்பது
   அ) இயற்பியல் பண்பு
   ஆ) இயந்திரவியல் பண்பு
   இ) மின்னியல் பண்பு
   ஈ) வேதியியல் பண்பு

3. சிதறும் தன்மை கொண்ட உலோகம்
   அ) எஃகு ஆ) காப்பர்
   இ) வார்ப்பிரும்பு ஈ) அலுமினியம்

4. மீள்தன்மை கொண்ட உலோகத்திற்கு எடுத்துக்காட்டு
   அ) எஃகு ஆ) வார்ப்பிரும்பு
   இ) பித்தளை ஈ) குறைந்த கரி கொண்ட எஃகு

5. சுத்தமான இரும்பின் அணு எண்
   அ) 16
   ஆ) 26
   இ) 36
   ஈ) 46

6. மின்மாற்றிகள் தயாரிக்க பயன்படும் எஃகு
   அ) கார்பன் எஃகு
   ஆ) கலவை எஃகு
   இ) வெட்டுளி எஃகு
   ஈ) அதிவேக எஃகு

7. மில்லிங் வெட்டுக்கருவிகள் தயாரிக்கப் பயன்படும் எஃகு
   அ) கார்பன் எஃகு
   ஆ) வெட்டுளி எஃகு
   இ) துருப்பிடிக்காத எஃகு
   ஈ) அதிவேக எஃகு

8. வார்ப்பிரும்பில் உள்ள கார்பனின் அளவு
   அ) 2% முதல் 3% வரை
   ஆ) 2% முதல் 4%வரை
   இ) 2% முதல் 4.5% வரை
   ஈ) 2% முதல் 5%வரை

XI_TM_BME_Tamil_Chapter06_2022.indd 84 1/31/2023 12:18:10 PM

9. நைட்ரைடீங் செய்யும் பொழுது, எஃகு பாகத்தின் மேற்பரப்பில் சேர்க்கப்படுவது
   அ) கார்பன் மற்றும் நைட்ரஜன்
   ஆ) நைட்ரஜன்
   இ) கார்பன்
   ஈ) ஹைட்ரஜன்.

10. பதப்படுத்துவதன் நோக்கம்
   அ) அதிமான எதிர்ப்புத் தன்மை அதிகரிக்க
   ஆ) உலோகத்தின் கடினத்தன்மையை அதிகரிக்க
   இ) சிதறும் தன்மையை குறைக்க
   ஈ) இயந்திரப்பணி செய்யும் தன்மையை மேம்படுத்த

11. புறக்கடிமைகுதல் என்பது வெப்பநிலை
   அ) பதப்படுத்தல்
   ஆ) மிருதுவக்குதல்
   இ) சயனைடிங்
   ஈ) கடினப்படுத்துதல்.

12. கார்புரைசிங்கின் போது பயன்படுத்தும் வெப்பநிலை
   அ) 900°C to 930°C
   ஆ) 750°C to 850°C
   இ) 30°C to 50°C
   ஈ) 500°C to 600°C

பகுதி –ஆ

ஓரிரு வரிகளில் விடையளிக்க.

(3 மதிப்பெண்கள்)

13. பொறியியல் பண்புகள் சிலவற்றை கூறு?
14. மின்னியல் பண்புகள் சிலவற்றை கூறு?
15. எஃகின் வகைகள் யாவை?
16. கார்பன் எஃகின் மூன்று வகைகள் யாவை?
17. துருப்பிடிக்காத எஃகு என்றால் என்ன?
18. .வெப்பப்டுதி குணமாற்றம் செய்தல் வரையறு?
19. வெப்பப்டுதி குணமாற்றம் செய்யும் முறைகளை யாவை?
20. கீழ் மற்றும் மேல் முக்கிய வெப்பநிலை ஏன்றால் என்ன்?

பகுதி இ

ஒரு பக்க அளவில் விடையளி:

(5 மதிப்பெண்கள்)

21. பொறியியல் பொருட்களின் பண்புகளை கூறி ஏதேனும் இரண்டினைப் பற்றி குறிப்பு வரைக?
22. வெட்டுளி எஃகின் வகைகளை கூறி விளக்குக?
23. வெப்பப்டுதி குணமாற்றம் செய்வதன் நோக்கங்களில் ஏதேனும் ஐந்தினை எழுதுக

பகுதி ஈ

விரிவான விடையளி: (10 மதிப்பெண்கள்)

24. பொறியியல் பொருட்களின் இயந்திரவியல் பண்புகளை கூறி. ஏதேனும் நான்கினை பற்றி குறிப்பு வரைக.
25. மின்சார உலையைப் பற்றி தெளிவானபடதுடன் விளக்குக

பாடம்
7

கைக்கருவிகள் மற்றும் அளக்கும் கருவிகள்

கற்றலின் நோக்கம்

- கைக்கருவிகள், அவற்றின் வகைகள் மற்றும் பணிமனையில் அவற்றின் பயன்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- அளவுகோல், காலிப்பர் போன்ற அளக்கும் கருவிகள் பற்றியும் மற்றும் அளவிகள் பற்றியும் தெரிந்து கொள்ளுதல்.
- அளக்கும் கருவிகள் மற்றும் அளவிகள் கொண்டு பொருட்களை அளக்கும் முறைகள் பற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

7.1. அறிமுகம்

7.2. கைக்கருவிகள் மற்றும் அளக்கும் கருவிகளின் வகைகள்

7.3. கைக்கருவிகள்

7.4. அளக்கும் கருவிகள்

7.1. அறிமுகம்

இயந்திர பாகங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை ஒன்றோடு ஒன்று இணைக்கவோ அல்லது பிரிக்கவோ, பிரித்த பாகங்களை இணைக்கவோ பயன்படும் கருவிகளை "கைக்கருவி"கள் என்கிறோம். இவைகள் பொருட்களின் அளவுகளை அளக்கவும், புள்ளி குத்துதல் போன்ற குறியீடு வேலைகள் செய்யவும், பணிப்பொருளில் தேவையற்ற பாகங்களை வெட்டி எடுக்கவும் பயன்படுகிறது. தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் என்பது அவற்றின் வடிவம், அளவு, மேற்பரப்பின் தன்மை ஆகியவற்றை பொறுத்து அமையும். இவைகளை அளப்பதற்குப் பயன்படும் கருவிகளை "அளக்கும் கருவிகள்" என்கிறோம். இப்பாடத்தில் சில முக்கிய "கைக்கருவிகள் மற்றும் அளக்கும் கருவிகள்" பற்றி காண்போம்.

7.2. கருவிகளின் வகைகள்



7.3. கைக் கருவிகள்

கைக்கருவிகள் என்பது இயந்திர சக்தியின் மூலமாக இல்லாமல் முழுமையாக கைகள் வழியாகவே இயக்கப்படுகின்ற கருவிகள் ஆகும். கற்காலந்தொட்டே மனிதனால் கைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கற்காலத்தில் மனிதன் உடைப்பது மற்றும் வெட்டுவது போன்ற செயல்களை செய்வதற்குக் கற்களைப் பயன்படுத்தினான்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பல்வேறு செயல்களை செய்து தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய இயந்திரங்கள் பயன்படுகிறது. என்றாலும் கைகளின் மூலமாகவே இயந்திரங்கள் இயக்கப்படுகிறது. மேற்கண்ட ஒழுக்கு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கைக்கருவிகள் பற்றிக் காண்போம்.

7.3.1. குறியீட்டுக் கருவிகள் (Marking Tools)

நாம் தயாரிக்க இருக்கும் பணிப்பொருளில் அளவு குறித்தல் மற்றும் கோடுகள் வரைந்து அதன் மீது புள்ளி குத்துதல் போன்ற வேலைகளைச் செய்ய பயன்படும் கருவிகளை "குறியீட்டு கருவிகள்" என அழைக்கிறோம்.

பணிப்பொருளை உருவாக்கும் பொழுது குறியீட்டுக் கருவிகளின் உதவி கொண்டு கோடிடுதல் முக்கியமான செயல் ஆகும். பணிப்பொருளின் மீது கோடுகள் வரையப்பட வேண்டும். இக்கோடுகள் பணிப்பொருளின் விளிம்பிலிருந்தோ அல்லது அடிப்படை கோட்டிலிருந்தோ (Datum line) வரையப்பட வேண்டும். விளிம்புகள் மற்றும் அடிப்படை கோடுகளின் நிலையை கொடுக்கப்பட்ட பணிப்பொருளின் வரைபடத்தில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

தவறான குறியீட்டு முறையினால் ஏற்படும் இழப்புகள்

1. பணிப்பொருள் வீணாகிறது.
2. குறியீடு செய்த நேரம் வீணாகிறது.
3. வீணாகிய பணிப்பொருளினால் ஏற்படும் பொருளாதார நட்டம்.
4. தவறாகக் குறியீடு செய்யப்பட்ட பொருள் தயாரிக்கப்பட்டு, சேர வேண்டிய இடத்திற்கு அனுப்பி, அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டு அதனால் ஏற்படும் போக்குவரத்து செலவு.
5. தொழில்துறையில், தொழிற்சாலைக்கு ஏற்படும் அவப்பெயர்.

www.tnschoolbooks.in

சரியான குறியீட்டு முறைக்கு தெரிந்து கொள்ள வேண்டியவை

1. வரைபடத்தை நன்கு பார்த்து, அளவுகளை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.
2. குறியீட்டுக் கருவிகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
3. சரியான குறியீட்டுக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.
4. புள்ளளி குத்தும் கம்பியின் (punch) மூலம் புள்ளிக் குத்துவதற்கு முன்பு, போடப்பட்ட கோடுகள் சரியாக உள்ளனவா என சோதிக்க வேண்டும்.
5. புள்ளிக் குத்துவதற்கு, சரியான புள்ளிக் குத்தும் கம்பியை தேர்ந்தெடுக்க வேண்டும்.

குறியீட்டுக் கருவிகள்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில முக்கிய குறியீட்டுக் கருவிகளின் பெயர்கள் பின்வருமாறு:

1. அளவுகோல்
2. பங்கிடும் கருவி
3. புள்ளி குத்தும் கம்பி
4. மூலை மட்டம்
5. வருகு ஊசி
6. சர்பேஸ் பிளேட்
7. மார்க்கிங் டேபிள்
8. சர்பேஸ் கேஜ்
9. V–பிளாக்
10. ஆங்கிள் பிளேட்

ஸ்டீல் அளவுகோல் (Steel Rule)

பொருட்களின் நீள, அகல, உயர அளவுகளை அளக்கவும் மற்றும் நேர்க்கோடுகளை வரையவும் ஸ்டீல் அளவுகோல் பயன்படுகிறது. இந்த அளவுகோல் மெல்லிய ஸ்டீல் தகட்டினால் செய்யப்பட்டுள்ளதால், இது "ஸ்டீல் அளவுகோல்" (Steel Rule) என அழைக்கப்படுகிறது.



ஸ்டீல் அளவுகோல் (Steel Rule)

பங்கிடும் கருவி (Divider)

பங்கிடும் கருவி, கூரிய முனைகளைக் கொண்ட இரண்டு கால்களை உடையது. இரண்டு கால்களின் தலைப்பகுதியானது ரிவிட் மூலமாகவோ அல்லது ஸ்பிரிங் மூலமாகவோ இணைக்கப்பட்டிருக்கும்.



பங்கிடும் கருவி (Divider)

பங்கிடும் கருவியின் பயன்கள்

1. இது பணிப்பொருளின் மீது வட்டவில் அல்லது இணைகோடுகள் வரைய பயன்படுகிறது.
2. நேர்க்கோடுகள் மற்றும் வளைகோடுகள் ஆகியவற்றை சமபாகங்களாகப் பிரிக்க பங்கிடும் கருவி உதவுகிறது.
3. உருளை வடிவ பணிப்பொருளின் முகப்பின் மையம் காணவும், சோதிக்கவும் இது பயன்படுகிறது.
4. இது, ஸ்டீல் அளவுகோலின் மூலம் எடுக்கப்பட்ட அளவுகளை, பணிப்பொருளின் மீது குறியிட உதவுகிறது.

புள்ளி குத்தும் கம்பிகள் (Punches)

பணிப்பொருளில் உள்ள ஏற்கெனவே வரையப்பட்ட கோடுகளின் மீது நிலையான குறியீடு செய்ய, புள்ளி குத்த உதவும் கைக் கருவிக்கு "புள்ளி குத்தும் கம்பி" என்று பெயர். வரையப்பட்ட கோடுகள் தெளிவாக தெரிய அதன் மீது குத்தப்பட்ட குறியீடுகள் (Punch mark) உதவுகிறது. பணிப்பொருளின் மீது எந்த புள்ளியில் துளையிட வேண்டும் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ள புள்ளி குத்தும் கம்பியின் மூலம் அவ்விடத்தில் புள்ளி குத்தப்படுகிறது. புள்ளி குத்தும் கம்பி கலவை எஃகினால் (Steel Alloys) செய்யப்படுகிறது. புள்ளி குத்தும் கம்பியின் முனையானது தேவையான கோணத்திற்குக் கூர்மை செய்யப்பட்டிருக்கும். புள்ளி குத்தும் கம்பியின் உடல் பகுதியில் பிடிப்புத் தன்மை (Gripness) ஏற்பட சொரசொரப்பு (Khurling) உண்டாக்கப்படுகிறது.

புள்ளி குத்தும் கம்பியின் வகைகள்

1. மையப் புள்ளி குத்தும் கம்பி (Centre Punch)
2. அளவு புள்ளி குத்தும் கம்பி (Dot Punch)
3. ஆழப் புள்ளி குத்தும் கம்பி (Prick Punch)
4. பெல் புள்ளி குத்தும் கம்பி (Bell Punch)
5. துளை வெட்ட பயன்படும் புள்ளி குத்தும் கம்பி (Hollow Punch)
6. சிறுகூர் முனை புள்ளி குத்தும் கம்பி (Pin Punch)

www.tnschoolbooks.in

பஞ்சின் வகைகள்

வ. எண்.	புள்ளி குத்தும் கம்பியின் வகை	குத்தும் கம்பி படம்	அடி முனைக் கோணம்	பயன்கள்
1.	மையப்புள்ளி குத்தும் கம்பி (Centre punch)		90°	பணிப்பொருளில் துளையிடும் புள்ளியில், புள்ளி குத்த உதவுகிறது.
2.	அளவு புள்ளி குத்தும் கம்பி (Dot punch)		60°	பணிப் பொருளின் மீது வரையப்பட்ட அளவுக் கோடுகளின் மீது புள்ளி குத்த உதவுகிறது.
3.	ஆழப்புள்ளி குத்தும் கம்பி (Prick punch)		30°	மிருதுவான உலோகங்களில் வேலை செய்யும் போதும், நுணுக்கமான வேலைகளுக்கும் இது பயன்படுகிறது.
4.	பெல் புள்ளி குத்தும் கம்பி (Bell punch)		கூர்முனையுடன் பெல் வடிவத்தில் காணப்படும்.	உருளை வடிவப் பணிப்பொருளின் முகப்பில் மையப் புள்ளியிட பயன்படுகிறது.
5.	துளை வெட்ட பயன்படும் புள்ளி குத்தும் கம்பி (Hollow punch)		குழிந்த முனை உடையது.	தோல், ரப்பர் மற்றும் அட்டை பலகை போன்றவற்றில் சிறு துளையிட உதவுகிறது.
6.	கூர்முனை கொண்ட புள்ளி குத்தும் கம்பி (Pin punch)		ஊசி முனை கொண்டது	சிறு புள்ளி குத்த உதவுகிறது. துளைகளில் மெல்லிய கம்பிகளை செருகவும், வெளியேற்றவும் உதவுகிறது.

மூலை மட்டம் (Try Square)

பணிப்பொருளின் உட்புற அல்லது வெளிப்புற பக்கங்கள் ஒன்றுக்கொன்று செங்கோணமாக (right angle) அல்லது செங்குத்தாக 90°–ல் உள்ளதா என சோதிக்க மூலை மட்டம் என்ற கைக்கருவி பயன்படுகிறது. மேலும் இது குறிப்பிட்ட பரப்பிற்கு செங்குத்தாக இணைக்கோடுகள் (Parallel lines) வரையவும் மற்றும் பரப்பின் சமமட்டத்தை (Flatness) சோதிக்கவும் உதவுகிறது.



மூலைமட்டத்தில் ஸ்டாக் (Stock) மற்றும் பிளேடு (Blade) ஆகிய இரண்டு பாகங்கள் உள்ளன. ஸ்டாக் என்ற பாகம் வார்ப்பிரும்பு அல்லது வார்ப்பு எஃகு என்ற உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது. பிளேடு என்ற பாகம் அதிக கார்பன் எஃகு அல்லது ஸ்டெயின்லெஸ் எஃகு என்ற உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது.

ஸ்டாக்கின் அடுத்தடுத்த செங்குத்தான எல்லா பக்கங்களும் துல்லியமாக சமமாக இயந்திரப் பணி செய்யப்பட்டிருக்கும். ஸ்டாக் என்ற பாகமும் பிளேடு என்ற பாகமும் ஒன்றுக்கொன்று 90° இருக்கும்படி செங்குத்தாக ரிவிட் மூலம் இணைக்கப்பட்டிருக்கும்.

பிளேடின் அடிப்புறத்திற்கு அருகில் ஸ்டாக்கில் சிறுபள்ளம் வெட்டப்பட்டிருக்கும்.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 89 1/31/2023 12:19:20 PM

பணிப்பொருளில் காணப்படும் சிறு பிசிறுகள் மூலை மட்டம் கொண்டு அளக்கும் பொழுது அச்சிறு பள்ளத்தில் தங்கி விடும். மூலை மட்டத்தின் பிளேடு பாகத்தில் மி.மீ. அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும்.

மூலை மட்டத்தை சரியான முறையில் பராமரிக்க வேண்டும். இதில் உள்ள பிளேடை திருப்புளியாகவோ அல்லது ஸ்டாக்கை சுத்தியலாகவோ பயன்படுத்தக் கூடாது. துருப்பிடிக்காமல் இருக்க, வேலை முடிந்த பின் அதன் மேற்பரப்பில் எண்ணெய் விட்டு துடைத்து வைக்க வேண்டும்.

வருகுஊசி

உலோகப் பணிப்பொருட்களில் கோடுகள் வரைய உதவும் கைக்கருவிக்கு வருகு ஊசி (Scriber) என்று பெயர். இவை அதிக கார்பன் எஃகு என்ற உலோகத்தால் செய்யப்பட்டு கடினப்படுத்தி பதப்படுத்தப்பட்டிருக்கும். வருகு ஊசியின் முனையானது 12° முதல் 15°–ல் கூர்மைப்படுத்தப்பட்டிருக்கும். வருகு ஊசியின் உடல் பகுதியானது வழுக்கல் இல்லாமல் இறுக்கி பிடிப்பதற்கு ஏதுவாக சொரசொரப்பு (Knurling) செய்யப்பட்டிருக்கும். இது 150 மி.மீ. 200 மி.மீ மற்றும் 250 மி.மீ. அளவுகளில் கிடைக்கிறது.

பல்வேறு வகைகளில் வருகு ஊசி கிடைக்கிறது. அவற்றில் சில பின்வருமாறு:

1. நேரான வருகுஊசி (Straight Ended Scriber)
2. வளைவான வருகுஊசி (Bend Ended Scriber)
3. மாற்றியமைக்கும் வருகுஊசி (Adjustable Ended Scriber)
4. விலக்கி வைக்கும் வருகுஊசி (Offset Ended Scriber)
5. கத்தி முனை வருகுஊசி (Knife Edge Ended Scriber)



வருகு ஊசி

பராமரித்தல்

1. முனையை நேராகவும், கூர்மையாகவும் வைத்திருக்க வேண்டும்.
2. கடினமான உலோகங்களை இதன் மீது வைக்கக்கூடாது.
3. வேண்டாத போது முனையை உறைக்குள் வைக்கவேண்டும்.
4. வார்ப்பு செய்த பரப்புகளை சுத்தம் செய்தபின் பயன்படுத்த வேண்டும்.

சர்பேஸ் பிளேட் (Surface Plate)

பணிப்பொருளின் பரப்புகள் சமமட்டமாக உள்ளதா என சோதிக்க பயன்படும் கைக்கருவி "சர்பேஸ் பிளேட்" ஆகும். பணிப்பொருளில் கோடுகள் வரையவும், குறியீடுகள் செய்யவும், பணிப்பொருளை சர்பேஸ் பிளேட்டின் மீது வைத்து செய்யலாம். சர்பேஸ் பிளேட் ஆனது சாம்பல் வார்ப்பிரும்பு (Grey Cast Iron) என்ற உலோகத்தால் செய்யப்படுகிறது. சர்பேஸ் பிளேட்டின் மேற்பரப்பு துல்லியமாக இயந்திரப் பணி செய்யப்பட்டு சுரண்டும் செயல் (Scraping) மூலம் மேலும் நுணுக்கமாக்கப்படுகிறது.

சர்பேஸ் பிளேட் (Surface Plate)

இது பெஞ்சின் மீதோ அல்லது 800 மி.மீ. உயரமுள்ள ஸ்டாண்டின் மீதோ வைக்கப்படும். இது A கிரேடு மற்றும் Bகிரேடு ஆகிய இரண்ட தரங்களில் செய்யப்படுகிறது. A கிரேடு சர்பேஸ் பிளேட்டின் மேற்பரப்பு 0.005 மி.மீ. நுணுக்கத்திலும், 'B' கிரேடு சர்பேஸ் பிளேட்டின் மேற்பரப்பு 0.02 மி.மீ. நுணுக்கத்திலும் கிடைக்கிறது. 150 x 100 மி.மீ. மற்றும் 1000 x 750 மி.மீ. ஆகிய அளவுகளில் சர்பேஸ் பிளேட்டுகள் கிடைக்கிறது.

சர்பேஸ் பிளேட் பராமரிப்பு

1. சர்பேஸ் பிளேட்டை பயன்படுத்தாத நேரங்களில் மூடி வைத்திருக்க வேண்டும்.
2. இதன் நுணுக்க மேற்பரப்பு துருப்பிடிக்காமலும் தூசிகள் படியாமலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. இதை பயன்படுத்திய பின்பு சுத்தமான துணியால் மேற்பரப்பை துடைத்தை கிரீஸ் அல்லது எண்ணெய் போட்டு வைக்க வேண்டும்.
4. பிசிறுள்ள பணிப் பொருட்களை இதன் மேல் தேய்த்துப் பார்க்கக் கூடாது.

மார்க்கிங் டேபிள்

வார்ப்பிரும்பாலான சமதள மேடையும், அதனைத் தாங்கும் கால்பாகங்களையும் கொண்ட அமைப்பிற்கு மார்க்கிங் டேபிள் (Marking Table) என்றுபெயர். இதன் மீது பணிப்பொருட்களை வைத்து நின்றபடி அளவு குறித்தல், வருவுதல் மேற்பரப்பின் மட்டம் ஆய்வு செய்தல் போன்ற வேலைகளை செய்யலாம். 900x 900 x825மிமீ அளவிலும் பிற அளவுகளிலும் கிடைக்கிறது.

சர்பேஸ் கேஜ்

"சர்பேஜ் கேஜ்" என்பது குறியீட்டு கருவிகளில் ஒன்றாகும். இது "மார்க்கிங் பிளாக்" (Marking Block) என்றும் அழைக்கப்படுகிறது. இது பணிப்பொருளின் மீது அளவுக் குறியீடு செய்யவும், மேற்பரப்பின் மட்டம் (flatness) ஆய்வு செய்யவும் பயன்படுகிறது. இதனுடன் டயல் இண்டிகேட்டர் இணைக்கப்பட்டு, வெட்டுளி அல்லது பணிப்பொருளின் நேர்க்கோட்டு சமநிலை (Alignment) சோதிக்கப்படுகிறது.

இதில் இரண்டு வகைகள் உள்ளன. அவையாவன:

1. சாதாரண சர்பேஸ் கேஜ் (Plain Surface Gauge)
2. அனைத்திற்கும் ஏற்ற சர்பேஸ் கேஜ் (Universal Surface Gauge)

சாதாரண சர்பேஸ் கேஜ்

சாதாரண சர்பேஸ் கேஜில் துல்லியமாக இயந்திரப் பணி செய்யப்பட்ட அடிப்பாகமும் அதற்கு செங்குத்தான ஒரு தூண் பாகமும் உள்ளது. தூண் பாகத்தில் மேலும் கீழும் நகரும்படி வருகு ஊசி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. வருகுஊசியை தூண் பாகத்தில் குறிப்பிட்ட உயரத்தில் நிலையாக முடுக்க மரையாணியுடன் கூடிய கிளாம்ப் ஒன்றும் உள்ளது. இவ்வகை சாதாரண சர்பேஸ் கேஜ் நுணுக்க வேலைகளுக்கு ஏற்றதல்ல.

சர்பேஸ் கேஜின் மூலம் சோதிப்பதற்கு முன்பு, சர்பேஸ் பிளேட், ஆங்கிள் பிளேட் மற்றும் பணிப்பொருள் ஆகியவற்றை சுத்தமாக துடைத்து வைக்க வேண்டும். ஆங்கிள் பிளேட்டை சர்பேஸ் பிளேட்டின் மீது வைக்க வேண்டும். ஆங்கிள் பிளேட்டின் ஒரு பக்கத்தில் நெருக்கமாக பணிப்பொருளையும், ஸ்டீல் ரூலையும் வைக்க வேண்டும். பணிப்பொருளின் மீது தேவையான இடத்தில் வருகு ஊசியின் முனை தொடுமாறு வைத்து, சர்பேஸ் கேஜை நகர்த்தி நேர்க்கோட்டை வரைய வேண்டும்.



சாதாரண சர்பேஸ் கேஜ்

அனைத்திற்கும் ஏற்ற சர்பேஸ் கேஜ் (Universal Surface Gauge)

V–வடிவ பள்ளம் உடைய அடிப்பாகம், தூண் பாகம் மற்றும் வருகு ஊசி ஆகிய முக்கிய பாகங்களை உடையது அனைத்திற்கும் ஏற்ற சர்பேஸ் கேஜ் ஆகும். வருகு ஊசியை, தூண் பாகத்தில் வேண்டிய இடத்தில் ஒரு நட்டின் மூலம் முடுக்கலாம். இதில் உள்ள தூண் பாகத்தை தேவையான கோணத்திற்கு சாய்த்து அமைக்க முடியும் என்பதால் குறியீடு செய்யும் வேலை துல்லியமாக அமைகிறது. சாதாரண சர்பேஸ் கேஜை விட மிக துல்லியமாக குறியீடு வேலை செய்ய இது பயன்படுகிறது. உருளை வடிவ பணிப்பொருளின் மீது யுனிவர்சல் சர்பேஸ் கேஜை வைப்பதற்கு அதன் அடிப்புறத்தில் உள்ள V–வடிவ பள்ளம் உதவுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 91 1/31/2023 12:19:21 PM



அனைத்திற்கும் ஏற்ற சர்பேஸ் கேஜ்
(Universal Surface Gauge)

சர்பேஸ் கேஜின் பயன்கள்

1. உருளை மற்றும் சதுர வடிவ கம்பிகளின் மையம் காணலாம்.
2. கடைசல் இயந்திரத்தில பணிப்பொருளை ஷக்கில் மையமாக இருக்கும்படி அமைத்திடலாம்.
3. வெர்னியர் உயர அளவிபோல் பணிபொருளில் இணைகோடுகள் வரையலாம்.
4. பொறிப்பணி செய்யப்பட்ட பணிப்பொருளின் பரப்புகள் ஒருபக்கத்திற்கு எதிராக உள்ள பக்கங்கள் இணையாக உள்ளதா எனவும் சரிபார்க்கலாம்.
5. இதில் உள்ள வருகுஊசிக்குப் பதிலாக டயல் டெஸ்ட் இண்டிகேட்டரைப் பொருத்தி ஒரு நுணுக்க கருவியாகவும் பயன்படுத்தலாம்.

7.3.2. பணிப்பொருளை பிடிக்கும் கருவிகள் (Holding Devices)

கொடுக்கப்பட்ட பணிப்பொருளை இறுக்கிப் பிடிப்பதற்குப் பயன்படும் உபகரணங்களை "பிடிக்கும் கருவிகள்" என்கிறோம். பணிப்பொருட்களில் இயந்திர வேலைகளைச் செய்யும் பொழுது, அவற்றை இறுக்கிப் பிடிக்க "பிடிக்கும் கருவிகள்" பயன்படுகிறது.

வழக்கமாக பயன்படுத்தப்படும் பிடிக்கும் கருவிகள்

1. பிடிப்பான் (Vice)
2. V–பிளாக் (V–block)
3. ஆங்கிள் பிளேட்

பிடிப்பான் (Vice)

பணிப் பொருட்களில் துளையிடுதல், தேய்த்தல், செதுக்குதல், அறுத்தல் போன்ற வேலைகளைச் செய்யும் பொழுது, அவற்றை இறுக்கிப் பிடிக்க "பிடிப்பான்" பயன்படுகிறது. பணிமனைகளில் பயன்படுத்தப்படுகின்ற கருவிகளில் "பிடிப்பான்" முக்கியமான ஒன்றாகும். இது இருந்ததால் மட்டுமே அப்பணிமனை முழுமையடைகிறது. பணிமனையில் செய்யப்படும் வேலை, பணிப்பொருளின் அளவு ஆகியவற்றை பொருத்து பலவகை பிடிப்பான்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பிடிப்பானின் வகைகள் :

1. பென்ச் வைஸ் (Bench Vice)
2. ஹேண்ட் வைஸ் (Hand Vice)
3. லெக் வைஸ் (Leg Vice)
4. பைப் வைஸ் (Pipe Vice)
5. பின் வைஸ் (Pin Vice)
6. யுனிவர்சல் வைஸ் (Universal Vice)

வ. எண்	பெயர்	படம்	பொருத்தப்படும் இடம்	பயன்கள்
1.	பென்ச் வைஸ்		இது இயந்திரகளின் பணிமேடை அல்லது பெஞ்சில் பொருத்தப்படும்.	பொருட்களை பிடித்து தேய்த்தல், செதுக்குதல், அறுத்தல் போன்ற பல விதமான வேலைகளை செய்யப் பயன்படுகிறது.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 92 1/31/2023 12:19:22 PM

2.	ஹேண்ட் வைஸ்		கைகளின் மூலம் பிடிக்கலாம்.	ஹேண்ட் வைஸின் மூலம் சிறிய பணிப்பொருட்களான ஸ்குரு, ரிவிட், சாவிகள் மற்றும் சிறு துளையிடும் அலகு போன்றவற்றை பிடிக்கலாம்.
3.	லெக் வைஸ்		இவை பெரும்பாலும் இரும்பு வேலை செய்யும் பட்டறைகளில் பயன்படுகிறது.	இரும்பு பட்டறைகளில் அடித்தல், செதுக்குதல் மற்றும் அறுத்தல் போன்ற கனமான வேலைகளை செய்ய பயன்படுகிறது.
4.	பைப் வைஸ்		பணி மேடை அல்லது பெஞ்ச் மீது பொருத்தப்படும்.	இதில் உருளை வடிவமான பொருட்கள் மற்றும் பைப்புகளை பிடித்து வேலை செய்யலாம்.
5.	பின் வைஸ்		கைகளின் மூலம் பிடிக்கலாம்.	சிறிய விட்டமுள்ள கம்பிகளை பிடிக்க பயன்படுகிறது.
6.	யுனிவர்சல் வைஸ்		பணிமேடை (அ) பெஞ்ச் மீது பொருத்தலாம்.	கிடைநிலையில் அல்லது செங்குத்து நிலையில், வேண்டிய கோணத்தில் திருப்பி வைக்கலாம்.

V – பிளாக் (V – Block):

V–பிளாக் என்பது உருளை வடிவ பணிப்பொருட்களை இறுக்கிப் பிடிக்கப் பயன்படும் கருவியாகும். V – பிளாக்கின் மேல் மற்றும் கீழ்புறங்களில் 'V' – வடிவப் பள்ளம் வெட்டப்பட்டிருக்கும். இதன் கோணம் 90° அல்லது 120° ஆகும். V – பிளாக்கின் வலது மற்றும் இடது புற பக்கவாட்டில் நீண்ட செவ்வக வடிவ பள்ளம் வெட்டப்பட்டிருக்கும். V – பிளாக்கின் முன்புறம் சதுரம் அல்லது செவ்வக வடிவில் இருக்கும். துளையிடும் இயந்திரம், உருவமைக்கும் இயந்திரம் ஆகிய இயந்திரங்களில் உருளை வடிவ பணிப்பொருட்களை

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 93 1/31/2023 12:19:22 PM

www.tnschoolbooks.in

பிடித்து வேலை செய்ய V – பிளாக் பயன்படுகிறது. உருளை வடிவ பணிப்பொருட்களில் குறியீட்டு வேலைகளை செய்யும் பொழுதும் V – பிளாக் பயன்படுகிறது. அளவுகளில் நீளத்தில் 50 முதல் 250 மிமீ வரையிலும், அகலம் மற்றும் உயரத்தில் 50 முதல் 100 மிமீ வரையிலும் V – பிளாக் கிடைக்கிறது.



V – பிளாக் (V – Block)

ஆங்கிள் பிளேட் (AnglePlate) :

ஆங்கிள் பிளேட்டானது L – என்ற ஆங்கில எழுத்து போன்ற வடிவத்தில் இருக்கும். இதன் இரண்டு பக்கங்களும் ஒன்றுக்கொன்று 90° இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். பொதுவாக ஆங்கிள் பிளேட் வார்ப்பிரும்பால் செய்யப்பட்டிருக்கும். கடைசல் இயந்திரம், துளையிடும் இயந்திரம், மில்லிங் இயந்திரம் ஆகிய இயந்திரங்களில் பணிப் பொருளை பிடிப்பதற்காக ஆங்கிள் பிளேட்டின் பக்கங்களில் நீண்ட துளைகள் மற்றும் துளைகள் போடப்பட்டிருக்கும். இயந்திரப் பணி செய்யப்பட்ட பணிப்பொருளின் பக்கங்கள் 90° – ல் உள்ளதா என சோதிக்க ஆங்கிள் பிளேட் பயன்படுகிறது. ஆங்கிள் பிளேட்டுடன், சர்பேஸ் பிளேட், மார்க்கிங் டேபிள் ஆகியவற்றை பயன்படுத்தி பணிப்பொருட்களில் அளவுகோடுகள் போடலாம். இதனைக் குறிப்பிடும் பொழுது நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.

ஆங்கிள் பிளேட் (AnglePlate)

7.3.3 வெட்டுக் கருவிகள் : (Cutting Tools or Operating Tools)

கொடுக்கப்பட்ட பணிப் பொருளில் வெட்டுதல், உருமாற்றம் செய்தல், தேவையற்ற பகுதிகளை நீக்குதல் போன்ற செயல்களைச் செய்வதற்கு பயன்படும் கடினபடுத்தப்பட்ட கருவிகள் 'வெட்டுக்கருவிகள்' என அழைக்கப்படுகிறது. மேலும் இது 'செயல்பாட்டுக் கருவிகள்' (Operating Tools) எனவும் அழைக்கப்படுகிறது.

பொதுவாக பயன்படும் வெட்டுக் கருவிகள் கீழ்வருமாறு:

1. அரம் (File)
2. ஹாக்சா (Hacksaw)
3. சுரண்டி (Scrapper)
4. டேப் (Tap)
5. டை(Die)

அரம்

அரம் என்பது பல வெட்டு முனைகளைக் கொண்ட கடின எஃகினாலான கருவியாகும். இதன் மேற்பரப்பில் காணப்படும் வெட்டு முனைகள் சாய்வாகவும், இணையாகவும் இருக்கும். இது உலோகம், உலோகமல்லாத மரம் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை தேய்த்தெடுக்கவும், குறைந்த அளவு உலோகத்தை தேய்த்து துல்லியமாக வேலை செய்யவும் பயன்படுகிறது.



அரம்

பணிப்பொருளில் செதுக்குதல் மற்றும் அறுத்தல் செய்த பிறகு காணப்படும் சிறு பிசிறுகள் அரத்தின் உதவி' கொண்டு தேய்த்தெடுக்கப்படும். மேலும் ரம்பம் மற்றும் கூரிய முனை கொண்ட கருவிகளை கூர்மைப்படுத்தவும் அரம் பயன்படுகிறது. அரத்தின் கீழ்முனை "டேங்" (Tang) எனப்படுகிறது. இது கைப்பிடியில் செருகப்பட்டிருக்கும். டேங்கின் மேற்புறம் "ஹீல்" (Heel) என அழைக்கப்படுகிறது. அரத்தின் மேற்புறத்தில் சாய்வான வெட்டுமுனைகள்

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 94 1/31/2023 12:19:23 PM

www.tnschoolbooks.in

உள்ளன. அரம், அதிக கரி கலந்த எஃகினால் (High carbon steel) ஆனது.

அரங்கள் கீழ்கண்ட காரணிகளால் பொதுவான பிரிவுகளாக (Classification) பிரிக்கப்படுகிறது.

1. வெட்டு நீளம் (Effective length)
2. வெட்டும் வடிவம் (Sectional form)
3. வெட்டு முனை (Cut of teeth)
4. தரம் (Grade)

அரங்களின் அளவு : (Size of the File)

அரங்களின் அளவானது அதன் முன் முனையிலுள்ள வெட்டு முனையிலிருந்து காம்பு பாகம் தவிர்த்து உள்ள நீளம் வரை குறிப்பிடப்படும்.

பொதுவாக அரம் 100 மிமீ முதல் 200 மிமீ வரை கிடைக்கும். கனமான வேலைகள் செய்வதற்கு 200 மிமீ முதல் 500 மிமீ வரையிலுள்ள அரங்களை பயன்படுத்தலாம். அரங்களின் வகைகள் அதன் வெட்டுத் தோற்றத்தினைப் பொறுத்து கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகிறது.

1. கை அரம் (Hand File)
2. தட்டையான அரம் (Flat File)
3. சதுர வடிவ அரம் (Square File)
4. வட்ட வடிவ அரம் (Round File)
5. அரை வட்ட வடிவ அரம் (Half – round File)
6. முக்கோண வடிவ அரம் (Triangular File)
7. கத்தி முனை அரம் (Knife Edge File)

வ. எண்	அரத்தின் வகை	படம்	அமைப்பு விவரம்	பயன்கள்
1.	கை அரம்		• செவ்வக வெட்டுத் தோற்றம் • முழு நீளமும் அகலம் ஒரே சீராக இருக்கும்.	பணிப்பொருளின் உட்பக்கம், செங்கோண பரப்புகளை தேய்த்தெடுக்க பயன்படுகிறது.
2.	தட்டையான அரம்		• நீண்ட செவ்வக வெட்டுத் தோற்றம் • முனைப் பகுதியில் அகலம் சரிந்து காணப்படும்.	பணிப்பொருளை விரைவாக தேய்த்தெடுக்க பயன்படுகிறது.
3.	சதுர வடிவ அரம்		• சதுர வடிவ வெட்டுத் தோற்றம் • மையப் பகுதி அகலமாகவும், முனையை நோக்கி சிறிது சரிவாகவும் இருக்கும்.	சதுர வடிவ துவாரங்களை தேய்க்கவும் பெரிதாக்கவும் உதவுகிறது.
4.	வட்ட வடிவ அரம்		• வட்ட வடிவ வெட்டுத் தோற்றம் • இது 2/3 பங்கு நீளத்திற்கு ஒரே வட்டமாகவும், முனை நோக்கி சிறிது சரிவாகவும் இருக்கும்.	வளைவான பரப்புகளை தேய்க்கவும், வட்டத் துளைகளின் முனையை பெரிதாக்கவும் பயன்படுகிறது.
5.	அரை வட்ட வடிவ அரம்		• 1/3 பங்கு வட்ட வடிவமாகவும் மறுபுறம் தட்டையாகவும் இருக்கும். • மையப் பகுதி வரை ஒரே அகலமாகவும் முனையை நோக்கி சிறிது சரிவாகவும் இருக்கும்.	(குழிந்த மற்றும் குவிந்த) வளைபரப்புகளை தேய்க்கலாம்.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 95 1/31/2023 12:19:23 PM

www.tnschoolbooks.in

6.	முக்கோண வடிவ அரம்		• முக்கோண வடிவ வெட்டுத் தோற்றம் கோண அளவு 60 உடையது. • முனையை நோக்கி சரிந்து காணப்படும்.	V – வடிவ பள்ளங்கள் மற்றும் மூலைகளை தேய்க்க உதவுகிறது.
7.	கத்தி முனை அரம்		• சரிவான வெட்டுத்தோற்றம் • கத்தியைப் போன்று காணப்படும்.	குறுங்கோண மூலைகளையும் சாவிப் பள்ளங்களையும் தேய்க்க பயன்படுகிறது.

அரங்களைப் பராமரித்தல்:

அரங்களைக் கொண்டு பணிப்பொருளை தேய்க்கும் பொழுது வெளிவரும் பிசிறுகள் அரங்களின் வெட்டுமுனைகளுக்கிடையே புகுந்து விடும். எனவே வெட்டுமுனைகளின் செயல்திறன் குறைந்துவிடும். ஆதலால் வெட்டு முனைகளுக்கிடையே உள்ள பிசிறுகளை மெல்லிய இரும்புக் கம்பிகள் கொண்ட பிரஷ்கள் மூலம் சுத்தப்படுத்தலாம்.

தரம்: (Grade)

அரங்களின் தரம் என்பது, அரத்திலுள்ள வெட்டு முனைகளுக்கிடையே உள்ள தூரத்தைப் பொறுத்து குறிப்பிடப்படுகிறது. அதாவது ஒரு அங்குலத்தில் எத்தனை வெட்டு முனைகள் உள்ளன என்பதைக் குறிப்பதாகும். அரங்களின் தரத்தைப் பொறுத்து ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. கடின அரம் (R) – 20 – 25 பற்கள் / அங்குலம்
2. பாஸ்டர்டு அரம் (B) – 25 – 30 பற்கள் / அங்குலம்
3. செகண்ட்கட் அரம் (SC) – 35 – 40 பற்கள் / அங்குலம்
4. மிருதுவான அரம் (S) – 40 – 60 பற்கள் / அங்குலம்
5. மிக மிருதுவான அரம் (DS) – 80 – 100 பற்கள் / அங்குலம்

ஆக்சா பிரேம்: (HACKSAW FRAME)

ஆக்சா பிரேம் என்பது சட்டம், மரக் கைப்பிடி, ஸ்டட் முனைகள், இறுக்கும் மரையாணி மற்றும் விங்நட் (Wing Nut) ஆகியவைகளைக் கொண்டதாகும். இது கடின எஃகை தவிர அனைத்து உலோகங்களை அறுக்கவும், துண்டுபடுத்தவும் பயன்படுகிறது. விங்நட்டின் உதவியுடன், இறுக்கும் மரையாணியில், ஆக்சா பிளேடு பொருத்தப்படுகிறது.



ஆக்சா பிரேம்: (HACKSAW FRAME)

ஆக்சா பிரேம் இரண்டு வகைப்படும்.

1. நிலையான ஆக்சா பிரேம் (Standard or Solid hacksaw frame)
2. மாற்றியமைக்கும் ஆக்சா பிரேம் (Adjustable Solid hacksaw frame)

நிலையான ஆக்சா பிரேம் :

இவ்வகை ஆக்சா பிரேமில் இரண்டு முனைகளுக்கிடையே (Prongs or Studs) உள்ள தூரத்தை மாற்றி அமைக்க முடியாது. எனவே குறிப்பிட்ட நீளமுள்ள பிளேடை மட்டும் இதில் இறுக்கமாக பிடிக்கலாம்.

மாற்றியமைக்கும் ஆக்சா பிரேம்:

இவ்வகை ஆக்சா பிரேமில் இரண்டு முனைகளுக்கிடையே உள்ள தூரத்தை

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 96 1/31/2023 12:19:23 PM

அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியும். எனவே இதில் 200மிமீ முதல் 300 மிமீ வரை நீளமுள்ள பிளேடுகளை இறுக்கிப் பிடிக்கலாம்.



மாற்றியமைக்கும் ஆக்சா பிரேம்

ஆக்சா பிளேடு:

ஆக்சா பிளேடுகள், ஹைகார்பன் ஸ்டீல், குறைந்த கலவை எஃகு, ஹைஸ்பீடு ஸ்டீல் போன்ற உலோகத்தால் செய்யப்பட்டு அவை கடினப்படுத்தப்பட்டு, பதப்படுத்தப்பட்டிருக்கும். இது மெல்லிய தகடுகளாக அகலம் குறைவாக காணப்படும். இதன் ஒரு புறமோ அல்லது தகட்டின் மேல் மற்றும் கீழ்புறங்களிலோ பற்கள் வெட்டப்பட்டிருக்கும். இதன் இரு முனைகளிலும் துளைகள் இருக்கும். இதன் அளவு (size) என்பது இரு துளைகளுக்கு இடையே உள்ள தூரம் ஆகும்.

ஆக்சா பிளேடிலுள்ள அடுத்தடுத்த இரண்டு பற்களுக்கிடையே உள்ள தூரத்தைப் (பிட்ச்) பொறுத்து, அவை மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. நெருக்கமற்ற வகை (Coarse)
2. நடு நிலை வகை (Medium)
3. நெருக்கமான வகை (Fine)

நெருக்கமற்ற வகை பிளேடுகள் மூலம் பிளாஸ்டிக் போன்ற மென்மையான பொருட்களை துண்டுபடுத்தலாம். நீல் ஸ்டீல், கடின உருக்கு, தடிமனான குழாய்கள் போன்றவற்றை துண்டுபடுத்த நடுநிலை வகை பிளேடுகள் பயன்படுகிறது. நெருக்கமான பிளேடுகள் சிறிய தடிமனுள்ள பொருட்களை நுணுக்கத்துடன் துண்டுபடுத்த உதவுகிறது.

ஆக்சா பிளேடு உடைவதற்கான காரணங்கள்:

1. சீரான வேகம் மற்றும் அழுத்தம் கொடுத்து அறுக்காதது.
2. பிளேடை சரியாக பொருத்தாதது. (அதிக இறுக்கமாகவோ அல்லது தளர்ச்சியாகவோ பொருத்துதல்)
3. பாதி அறுத்த பின்பு இடையில் புதிய பிளேடை பொருத்தி சரியாக பயன்படுத்தாத பொழுது
4. சரியான பிட்ச் உடைய பிளேடை தேர்ந்தெடுக்காதது.
5. வேலையில் கவனக் குறைவு.

ஆக்சா பிளேடு முனை தேய்வதற்கான காரணங்கள் :

1. பிளேடை விட அறுக்கப்படும் பொருள் கடினமாக இருப்பது.
2. சரியான உலோகத்திற்கு சரியான பிளேடு தேர்ந்தெடுக்காதது.
3. அதிக அழுத்தம் மற்றும் வேகம் தருவது.
4. பிளேடு பின்னோக்கி வரும்பொழுது அதிக அழுத்தம் தருவது.
5. குளிர்விக்கும் திரவம் பயன்படுத்தாதது.

சுரண்டி: (Scrapper)

செய்து முடிக்கப்பட்ட பணிப்பொருளின் மேற்புரத்திலுள்ள கண்ணுக்கு தெரியாத மேடு பள்ளங்களைச் சுரண்டி சமமட்டத்தை உருவாக்கும் கருவிக்கு 'சுரண்டி' என்று பெயர். இது தரமுள்ள எஃகு உலோகத்தினால் செய்யப்பட்டு வெட்டு முனை கடினப்படுத்தப்பட்டிருக்கும்.

தேய்த்தல் மூலமோ அல்லது இயந்திரப்பணி மூலமோ பெறப்படுகின்ற துல்லியத்தை விட பணிப்பொருளின் மேல்புறத்தில் அதிகமான துல்லியத்தை சுரண்டு கருவி மூலம் பெறப்படுகின்ற முறைக்கு சுரண்டுதல் (Scrapper) என்று பெயர்.

சர்பேஸ் பிளேட்டின் மீது பிரஷ்ஷியன் புளு எனப்படும் நீல மை பரவலாக சீராக பூசப்படும். சுரண்டுதல் செய்ய வேண்டிய பணிப் பொருளை நீல மை பூசப்பட்ட சர்பேஸ் பிளேட்டின் மீது முன்னும் பின்னுமாக தேய்க்க வேண்டும். அவ்வாறு செய்த பின்பு பணிப்பொருளின் மீது உள்ள மேடான பகுதிகளில் மட்டும் நீல மை படிந்திருக்கும். அவற்றை 'சுரண்டி' மூலம் தேய்த்தெடுக்க வேண்டும். இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்து துல்லியமான சமமான மேற்பரப்பை பணிப்பொருளில் உருவாக்கலாம்.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 97 1/31/2023 12:19:23 PM

சுரண்டிகள் மூன்று வகைப்படும். அவையாவன :

1. தட்டையான சுரண்டி (Flat Scrapper)
2. முக்கோண வடிவ சுரண்டி (Triangular Scrapper)
3. அரை வட்ட வடிவ சுரண்டி (Half – round Scrapper)



சுரண்டி: (Scrapper)



டேப்:(Tap)

டேப் : (Tap)

டேப் என்பது மரையாணி போன்ற கைக்கருவி ஆகும். அது ஒரு போல்டில் காணப்படும் மரைகள் போன்று தோற்றமளிக்கும். மரைகளின் குறுக்காக மேலும் கீழுமாக மூன்று அல்லது நான்கு சிறு பள்ளங்கள் வெட்டப்பட்டிருக்கும். நட்டின் உட்புற மரைபோல, துளையின் உட்புறத்தில் மரையிட பயன்படும் கைக் கருவியே "டேப்" என அழைக்கப்படுகிறது.

டேப்பை பிடித்து துளையின் உட்புறத்தில் மரையிட 'ரென்ஞ்' (Wrench) எனப்படுகின்ற கைப்பிடி உதவுகிறது. டேப்கள் மூன்று கொண்டதுதான் ஒரு செட் ஆகும். அவையாவன.

1. சரிவு டேப் (Taper Tap)
2. இரண்டாம் டேப் (Second Tap)
3. இணை டேப் (Parallel Tap)

துளையின் உட்புற மரையிடும்போது மேற்கண்ட டேப்களை வரிசைப்படி ஒன்றன் பின் ஒன்றாக பயன்படுத்த வேண்டும்.

டேப், அதிவேக எஃகு அல்லது அதிக கரி கொண்ட எஃகு உலோகத்தால் செய்யப்பட்டு கடினப்படுத்தி பதப்படுத்தப்பட்டிருக்கும்.

சரிவு டேப் :

இச்சரிவு டேப்பில் ஆறு மரைகள் வரை சரிவாக காணப்படும். இச்சரிவு வடிவானது துளையினுள் சுலபமாக செல்வதற்கு உதவுகிறது. டேப்பை வலஞ்சுழியாகவும் மற்றும் இடஞ்சுழியாகவும் திருப்பினால் துளையினுள் உட்புற மரை உருவாகும். உட்புற மரையிடும் பொழுது குளிரப்படுத்தும் எண்ணெய் இட வேண்டும்.

இரண்டாம் டேப் :

இரண்டாம் டேப்பில், கீழிருந்து மூன்று அல்லது நான்கு மரைகள் வரை சரிவாக காணப்படும். சரிவு டேப் பயன்படுத்திய பின் இவ்வகை டேப்பை இரண்டாவதாக பயன்படுத்த வேண்டும்.

இணை டேப் :

இவ்வகை டேப்பில் சரிவு இல்லாமல் மரைகள் இணையாக காணப்படும். சரிவு டேப் மற்றும் இரண்டாம் டேப் ஆகிய இரண்டு டேப்களை பயன்படுத்திய பின்பு மூன்றாவதாக இணை டேப்பை பயன்படுத்தி உட்புற மரை போட்டு முடிக்கப்பட வேண்டும்.

XI_TM_BME_Tamil_Chapter07_2022.indd 98 1/31/2023 12:19:24 PM

டை (Die):

போல்டின் வெளிப்புறம் காணப்படும் மரைகளைப் போல, உருளை வடிவ கம்பிகளின் வெளிப்புற மரையிடப் பயன்படும் கருவிக்கு "டை" (Die) என்று பெயர். இது கார்பன் ஸ்டீல் உலோகத்தால் செய்யப்பட்டு கடினப்படுத்தி பதப்படுத்தப்பட்டிருக்கும். 'டை' என்பது வட்ட வடிவில் உட்புறத்தில் வெட்டு முனை கொண்ட மரைகள் உடையதாகும்.



டை (Die)

டை என்பது இரண்டு வகைப்படும். அவையாவன :

1. கெட்டியான டை (Solid Die)
2. மாற்றியமைக்கும் டை (Adjustable Die)

கெட்டியான வகை: (Solid Die)

கெட்டியான வகை டை என்பது நிலையான அளவு கொண்டதாகும். வெளிப்புற விட்டத்திற்கு ஏற்றவாறு அதன் அளவை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியாது.

மாற்றியமைக்கும் டை: (Adjustable Die)

வட்ட வடிவ மாற்றியமைக்கும் பிளவு பட்ட டை படத்தில் காட்டப்பட்டுள்ளது. வட்ட வடிவ டையின் ஒரு புறம் சிறிது பிளவு பட்டு காணப்படும். வெளிப்புற மரையிட வேண்டிய பணிப்பொருளின் விட்டத்திற்கேற்ப, அதை ஒரு செட் ஸ்குரூவின் மூலம் சரி செய்யலாம். செட் ஸ்குரூவை இறுக்கினால் பிளவு சுருங்கி ஒன்று சேரும். செட் ஸ்குரூவை தளர்ச்சி அடைய செய்தால் பிளவு விரிந்து டையின் விட்டம் அதிகரிக்கும்.

டையின் அளவைக் குறிப்பிட, போட வேண்டிய வெளிப்புற மரையின் விட்டத்தை குறிக்க வேண்டும். டையை பிடித்து வெளிப்புற மரையிட உதவும் கைப்பிடி கொண்ட சாதனத்திற்கு "டை ஸ்டாக்" என்று பெயர்.

7.3.4 பொதுவான கைக்கருவிகள்

பொறியியல் பணிமனையில் பணியாற்றும் பொழுது பல்வேறு வகையான கருவிகளை பயன்படுத்துகிறோம். அவற்றில் பொதுவான அனைத்து வேலைகளிலும் பயன்படுத்தும் சில கைக்கருவிகளைக் காண்போம்.

1. சுத்தியல்
2. ஸ்பேனர்
3. ஸ்குரு டிரைவர்
4. பிளையர்

சுத்தியல்:

சுத்தியல் என்பது கைப்பிடி பொருத்தப்பட்ட கனமான உலோகத் துண்டினால் ஆன தலைப் பகுதி கொண்ட கைக்கருவியாகும். இது மரத்தாலான பொருட்களில் ஆணிகளை அடித்து இறக்குவதற்கு பயன்படுகிறது. உலோகப் பொருட்களின் மீது சுத்தியல் கொண்டு விசையுடன் அடித்து அதன் வடிவத்தை சிறிதளவு மாற்றலாம்.

வ. எண்	சுத்தியின் வகைகள்	பயன்பாடு
1.	கிளா சுத்தி	மர வேலை செய்யும் பொழுதும் வீடு பழுது பார்க்கும் இடங்களிலும் இது பயன்படுகிறது. இதில் பிளவுபட்ட பகுதி ஆணிகளை கழற்ற உதவுகிறது.

2.	பால் பீன் சுத்தி 	உலோக வேலை செய்யும் பொழுது இவ்வகை பயன்படுகிறது. இதன் வளைவான தலைப்பகுதி பணிப்பொருளில் வளைவை உண்டாக்க பயன்படுகிறது.
3.	கிளப் சுத்தி 	கூரான மரத்தாலான அல்லது உலோகத்தாலான உளிகளை கழற்ற இது உதவுகிறது. கட்டுமானங்களை இடிப்பதற்கும் இது பயன்படுகிறது.

பொதுவாக பயன்படுத்தப்படுகின்ற சுத்தியலை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. கிளா சுத்தியல் (Claw Hammer)
2. பால் பீன் சுத்தியல் (Ball Peen Hammer)
3. கிளப் சுத்தியல் (Club Hammer)

ஸ்பேனர்:

ஸ்பேனர் என்பது பொறியில் துறையில் நட்டுகள் (Nuts) மற்றும் போல்ட்டுகள் (bolts) ஆகியவற்றை இறுக்குவதற்கும் அல்லது தளர்ச்சி அடைய செய்து கழற்றுவதற்கும் பயன்படுகின்ற கைக்கருவி ஆகும். வழக்கமாக பயன்படுத்துகின்ற ஸ்பேனர்களை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. ஒரு முனை (அ) திறந்த முனை ஸ்பேனர்
2. இரு முனை ஸ்பேனர்
3. ரிங் ஸ்பேனர்
4. சாக்கெட் ஸ்பேனர்
5. பாக்ஸ் ஸ்பேனர்

ஸ்குரு டிரைவர்

ஸ்குரு டிரைவர் என்பது பொருட்களை இணைப்பதற்கு பயன்படும் மரையாணியை இறுக்கவதற்கோ அல்லது தளர்ச்சி அடைய செய்வதற்கோ பயன்படும் கைக்கருவி ஆகும். ஸ்குரூ டிரைவரின் முனையின் வடிவத்தைப் பொறுத்து அது வகைப்படுத்தப்படுகிறது.

ஸ்குரூ டிரைவரின் பொதுவான வகைகள் சில கீழ்கண்ட படங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

S. No.	Types	Pictures
1.	ஒரு முனை ஸ்பேனர் Open Ended Spanner	
2.	இரு முனை ஸ்பேனர் Double Ended Spanner	
3.	ரிங் ஸ்பேனர் Ring Spanner	
4.	சாக்கெட் ஸ்பேனர் Socket Spanner	
5.	பாக்ஸ் ஸ்பேனர் فطغڠغسقغح	

www.tnschoolbooks.in

S.No.	Type	Picture
1.	சிலாட் – Slot	
2.	பிலிப்ஸ் – Philips	
3.	ட்ராக்ஸ் – Trox	
4.	ஆலென் – Allen	

பிளையர்:

பிளையர் என்பது சிறு பொருட்களை இறுக்கமாக பிடிப்பதற்கு பயன்படும் கைக்கருவி ஆகும். மேலும் சிறு ஒயர்களை வெட்டித் துண்டாக்குவதற்கும் இது பயன்படுகிறது.

.S.No	Types	Pictures
.1	ஒருங்கிணைந்த இடுக்கி Combination Plier	
$$\text{திட்டமிட்ட வேகம்} \frac{600-588}{600} \times 100$$

$$\frac{12}{600} \times 100$$

பட்டை வழுக்கல் = 2 %

9.3.5. பட்டை முறையின் நிறைகள் மற்றும் குறைகள்

நிறைகள்

1. இம்முறையில் சத்தம் மற்றும் அதிர்வு ஏற்படாது.
2. அதிக பளுவை கடத்துகிறது.
3. குறைவான பராமரிப்பே போதுமானது.
4. நேர்க்கோட்டு அலைவு இன்மைக்கும் ஏற்றது.

குறைகள்

1. இதில் வேகவிகிதம் மாறக்கூடியது.
2. அதிகபட்சம் 2000 மீட்டர்/நிமிடம் வேகத்திற்கு மட்டுமே ஏற்றது.
3. இவ்வகை முடிவில்லா பெல்ட்டை பொருத்தும் பொழுது சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.
4. சுழலும் பொழுது, கப்பியில் இருந்து பெல்ட் நழுவ வாய்ப்பு உள்ளது.

9.4. பல்லிணைகள்(GEARS)

பல்லிணைகள், சுழலும் சக்தியை பல்வேறு இயந்திரங்களுக்கு கடத்த பயன்படுகிறது எந்தவிதமான வேக வழுக்கலின்றி சுழலும் சக்தி கடத்தப்படுகிறது. குறைந்த இடைவெளி கொண்ட சுழலும் சக்தி பெறும் இடங்களிலும் அதிக வேகத்துடன் சுழலக் கூடியது.

பட்டை (Belt) மூலம் இணையான இரு சுழல் தண்டுகளை மட்டுமே சுழலச் செய்ய முடியும். ஆனால் பல்லிணைகள் மூலம் இணையற்ற மற்றும் ஒன்றுக்கொன்று செங்குத்தான சுழல்தண்டுகளிலும் சுழலும் விசையை கடத்த முடியும்.

9.4.1. பல்லிணை வகைகள் (Types of Gear)

பல்லிணைகளில் பல வகைகள் உள்ளன. அவற்றில் கீழ்கண்ட பல்லிணைகள் முக்கியமானவையாகும்.

1. நேர் பல்லிணை (Spur Gear)
2. நெளிவுப் பல்லிணை (Helical Gear)
3. சரிவுப் பல்லிணை (Bevel Gear)
4. தட்டை மற்றும் சிறு பல்லிணை (Rack & Pinion Gear)
5. வார்ம் மற்றும் வார்ம் பல்லிணை (Worm & Worm Gear)

XI_TM_BME_Tamil_Chapter09_2022.indd 125 28-04-2022 15:34:35

1. நேர் பல்லிணை (Spur Gear)

வட்டமான தட்டு போன்ற உருளை வடிவ உலோகத்தின் அதன் சுற்றுப் பரப்பில் அச்சுக்கு இணையாக பற்கள் வெட்டபட்டிருக்கும், அதற்கு நேர் பல்லிணை என்று பெயர்.

நேர் பல்லிணை (Spur Gear)

இப்பல்லிணைகள் இணையான இரு தண்டுகளை இணைத்து சுழலும் சக்தியைக் கடத்தப் பயன்படுகிறது.

2. நெளிவுப் பல்லிணை (Helical Gear)

வட்டமான தட்டு போன்ற உருளை வடிவ உலோகத்தின் அதன் சுற்றுப் பரப்பில் அச்சுக்கு இணையாக இல்லாமல் சுருள் போன்ற வடிவத்தில், பற்கள் நெளிவாக வெட்டப்பட்டிருக்கும், அதற்கு நெளிவு பல்லிணை என்று பெயர். இப்பல்லிணைகள் இணையான மற்றும் இணையில்லாத இருதண்டுகளை இணைத்து சுழலும் சக்தியைக் கடத்தப் பயன்படுகிறது.

நேர் பல்லிணையை விட நெளிவு பல்லிணையின் மூலம் அதிக விசையைக் கடத்த முடியும்.

நெளிவுப் பல்லிணை (Helical Gear)

3. சரிவுப் பல்லிணை (Bevel Gear)

சரிவு உருளையின் மேற்பரப்பில் பற்கள் வெட்டப்பட்டிருக்கும். இது பொதுவாக ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ள அச்சுகளை இணைத்து சுழலும் விசையைக் கடத்தப் பயன்படுகிறது.

சரிவுப் பல்லிணை (Bevel Gear)

4. தட்டை மற்றும் சிறு பல்லிணை (Rack & Pinion Gear)

இவ்வகையான பல்லிணை, சுழலும் சக்தியை நேர்க்கோட்டில் முன்னும் பின்னும் நகரும் விசையாக மாற்றித்தரப் பயன்படுகிறது. இது பற்கள் வெட்டப்பட்ட நீண்ட உலோகப்பட்டை ஆகும்.

தட்டை மற்றும் சிறு பல்லிணை (Rack & Pinion Gear)

இவ்வகையான பல்லிணை, கடைசல் இயந்திரம் மற்றும் துளையிடும் இயந்திரங்களில் பயன்படுகிறது.

5. வார்ம் மற்றும் வார்ம் பல்லிணை (Worm & Worm Gear)

வார்ம் மற்றும் வார்ம் பல்லிணை ஒன்றுக்கொன்று செங்குத்தாக(90°) உள்ள இரு அச்சுகளை இணைத்து சுழல் சக்தியைக் கடத்தப்பயன்படுகிறது.

இது வடிவத்தில் நேர்ப்பல்லிணையைப் போன்றது. இவ்வகை பல்லிணையில் வார்ம் மட்டுமே இயங்கும் பல்லிணையாக செயல்படுகிறது. வேகக்குறைப்புஅதிகமாக தேவைப்படும்இடங்களில் இது பயன்படுகிறது. இது குறியிடும் தலை, சுழலும் பணிமேடை மற்றும் கடைசல் இயந்திரத்தில் உள்ள ஊட்டம் தரும் தண்டில் பயன்படுகிறது.

வார்ம் மற்றும் வார்ம் பல்லிணை
(Worm & Worm Gear)

9.5. பல்லிணைத் தொடர் (GEAR TRAIN)

இரு பல்லிணைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து சுழலும்போது, இயக்கும் பல்லிணை வலஞ்சுழியாகச் சுற்றினால் இயக்கப்படும் பல்லிணை இடஞ்சுழியாகச் சுழலும். வேக விகிதம் என்பது இயக்கும் பல்லிணையின் பற்களின் எண்ணிக்கைக்கும், இயக்கப்படும் பல்லிணையின் பற்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமாகும்.

எடுத்துக்காட்டு கணக்கு 5

48 பற்கள் கொண்ட பல்லிணை இடஞ்சுழியாக 600 RPM வேகத்தில் சுழலும்போது, அதனுடன் இணையும் 72 பற்கள் கொண்ட பல்லிணை எந்ததிசையில் எந்த வேகத்தில் சுழலும்?

இயக்கப்படும் பற்களின் எண்ணிக்கை

T1 = 48 பற்கள்

இயங்கும் பற்களின் எண்ணிக்கை

T2 = 72 பற்கள்

இயக்கப்படும் பல் சுற்றுக்களின் எண்ணிக்கை

N1 = 600 RPM

N2 = ?

$$\frac{T_1}{T_2} = \frac{N_2}{N_1}$$

$$N_2 = \frac{T_1 \times N_1}{T_2}$$

$$= \frac{48 \times 600}{72} = 400 \text{ rpm}$$

N2 = 400 rpm வலது பக்கமாக சுழலும்

9.5.1. பல்லிணைத் தொடரின் வேகவிகிதம்

ஒரு குறிப்பிட்ட வேகவிகிதத்தில் அதிக சுழலும் விசையை கடத்த பல்லிணைத் தொடர் பயன்படுகிறது.

பல்லிணைத் தொடரின் வேகவிகிதம் என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இயங்கும் அச்சு அல்லது பல்லிணையின் சுழலும் எண்ணிக்கைக்கும், இயக்கப்படும் அச்சு அல்லது பல்லிணைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

N_1 மற்றும் N_2 என்பது முறையே இயக்கும் மற்றும் இயக்கப்படும் பல்லிணையின் சுற்றுக்களின் எண்ணிக்கையை குறிக்கும். T_1 மற்றும் T_2 என்பது முறையே இயக்கும் மற்றும் இயக்கப்படும் பல்லிணையின் பற்களின் எண்ணிக்கையை குறிக்கும்.

$$\text{வேக விகிதம்} = \frac{N_2}{N_1} = \frac{T_1}{T_2}$$

9.5.2. எளிய பல்லிணைத் தொடர் (Simple Gear Train)

ஒவ்வொரு அச்சிலும் ஒரு பல்லிணை வீதம் இருக்கும்படி வைத்து தொடர்ச்சியாக பல பல்லிணைகளை இணைக்கும் முறைக்கு எளிய பல்லிணைத் தொடர் (Simple Gear Train) என்று பெயர்.

இருமுனைகளில் உள்ள பல்லிணைகளின் பற்கள் எண்ணிக்கையைப் பொறுத்து வேக விகிதம் இருக்கும். முதல் பல்லிணைப் பொருத்தப்பட்ட அச்சிற்கும், கடைசி பல்லிணைப் பொருத்தப்பட்ட அச்சிற்கும் இடைவெளி இருப்பின் அதை பூர்த்தி செய்ய பல்லிணைகள் பொருத்தப்படும். இவை வேக விகிதத்தை மாற்றாமல் சுழலும் திசையை மட்டும் மாற்றும். இப்பல்லிணைக்கு வெற்றுப் பல்லிணை (Idle Gear) என்று பெயர்.

எளிய பல்லிணைத் தொடரில் மொத்தமுள்ள பல்லிணைகளின் எண்ணிக்கை ஒற்றைப்படையாக இருப்பின், முதல்

பல்லிணையும், கடைசி பல்லிணையும் ஒரே திசையில் சுழலும்.



எளிய பல்லிணைத் தொடர்(Simple Gear Train)

எடுத்துக்காட்டு கணக்கு 6

A, B, C, D என்ற பல்லிணைகள் எளிய பற்சக்கரத் தொடர் மூலம் இணைக்கப் பட்டுள்ளன. அவற்றின் பற்களின் எண்ணிக்கை முறையே 75, 45, 60, 50 என கொண்டால் D என்ற பல்லிணை வலஞ்சுழியாக 360 சுற்றுகள் சுற்றினால் A என்ற பல்லிணை எந்த திசையில் எத்தனை சுற்றுகள் சுற்றும்?

T_1 = 75 பற்கள்

T_2 = 45 பற்கள்

T_3 = 60 பற்கள்

T_4 = 50 பற்கள்

N_4 = 360 சுற்றுகள்

$T_1 N_1 = T_4 N_4$

$N_1 = \frac{T_4 \times N_4}{N_1}$

$N_1 = \frac{50 \times 360}{75}$

$N_1 = \frac{2 \times 360}{3}$ = 240 rpm

N_1 = 240 RPM சுழலும் திசை இடஞ்சுழியாகும்.

9.5.3. கூட்டு பல்லிணைத் தொடர் (Compound Gear Train)

ஒரே அச்சில் ஒன்றுக்கு மேற்பட்ட பல்லிணைகள் பொருத்தப்பட்ட பல்லிணைத் தொடருக்கு, கூட்டுப் பல்லிணைத் தொடர் என்று பெயர். இதில், இயக்கப்படும் பல்லிணையின் வேகமானது இடைப்பட்ட பல்லிணைகளின் பற்கள் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும்.

சுழலும் திசையானது பல்லிணைத் தொடரின் அமைப்பைப் பொறுத்தது. குறுகிய இடைவெளியில் அதிகமான வேக விகிதம் தர முடியும்.



கூட்டு பல்லிணைத் தொடர் (Compound Gear Train)

எடுத்துக்காட்டு கணக்கு 7

கூட்டுப்பல்லிணைத் தொடரில் இயக்கும் அச்சு 1–ல் 40 பற்கள் கொண்ட பல்லிணை (A) வலஞ்சுழியாக 900 சுற்றுகள் ஒரு நிமிடத்தில் சுற்றுகிறது. அத்துடன் 80 பற்கள் கொண்ட (B) பல்லிணை 2 என்ற அச்சில் இணைக்கபடுகிறது. 2 வது அச்சில் 50 பற்கள் கொண்ட மற்றொரு B1 பல்லிணை இணைக்கப்பட்டு, அப்பல்லிணையிலிருந்து இயக்கப்படும் அச்சு 3–இல் 60 பற்கள் கொண்ட (C) பல்லிணைக்கு சுழலும் விசை கடத்தப்பட்டால், இயக்கப்படும் பல்லிணையின் வேகம் மற்றும் சுழலும் விசை என்ன?



T_A = 40 பற்கள் NB_1 = ?

T_B = 80 பற்கள் NB_2 = ?

T_{B1} = 50 பற்கள் N_C = ?

T_C = 60 பற்கள்

N_A = 900 RPM

$T_A N_A = T_B N_B$

$N_B = \frac{T_A N_A}{T_B}$

XI_TM_BME_Tamil_Chapter09_2022.indd 128 28-04-2022 15:35:30

$$N_B = \frac{40 \times 900}{80}$$

N_B = 450 RPM

இரண்டும் ஒரே அச்சில் உள்ளதால் $N_B = N_{B1}$

$N_B = N_{B1}$ = 450 RPM

$T_{B1} N_{B1} = T_C N_C$

$$N_C = \frac{T_{B_1} \times N_{B_1}}{T_c}$$

$$= \frac{50 \times 450}{60}$$

= 375 RPM

இயக்கப்படும் அச்சின் வேகம் N_C = 375 RPM

கடைசி இயக்கப்படும் அச்சு இடஞ்சுழியாக சுழலும்.

9.5.4. நிறைகள் மற்றும் குறைகள்

பல்லிணைத்தொடரின் நிறைகள்

1. பல்லிணைத் தொடரைப் பயன்படுத்தும் போது இடைவெளி குறைவாக உள்ள இடத்தில் அதிக வேக விகிதத்தை பெற முடிகிறது.
2. பல்லிணைத்தொடர் கொண்ட இயந்திரங்கள் அதிக வலிமை கொண்டவை எனவே அதிக எடை கொண்ட பொருட்களை தூக்குவது எளிது.
3. இது நிச்சயமான வேக ஓட்டத்திற்கு பயன்படுகிறது. இதனுடைய வேக விகிதம் மாறுபடாமல் சீராக இருக்கும்.
4. பல்லிணைத் தொடருக்கு உயவு மட்டுமே தேவை, ஏனெனில் பராமரிப்புக்கு அதுவே போதுமானது.

பல்லிணைத் தொடரின் குறைகள்

1. அதிகமான வேகத்திற்கு இது பொருத்தமானது இல்லை.
2. இடைவெளி அதிகமாக உள்ள இடங்களுக்கும் விசைக்கடத்துதலுக்கும் இது பொருந்தாது.
3. வளைந்து கொடுக்கும் தன்மை கிடையாது.
4. பல்லிணை இயக்கமானது அதிக இரைச்சல் உடையது.

சுழலும் சக்தியை கடத்துதல் பற்றிய தொகுப்பு

1. சுழலும் சக்தியை கடத்தும் முறைகள்	1. பெல்ட், 2. சங்கிலி, 3. பல்லிணை
2. பட்டை மூலம் சுழலும் சக்தி கடத்தும் போது	1. வேக வழுக்கல் ஏற்படும் 2. இடைவெளி அதிகம் உள்ள அச்சுக்களை இணைக்க
3. சங்கிலி, பல்லிணை மூலம் சுழலும் சக்தி கடத்தும் போது	1. வேக வழுக்கல் ஏற்படுவது இல்லை. 2. இடைவெளி குறைவாக உள்ள அச்சுகளை இணைக்கும்
4. வேக வழுக்கல் இல்லாமல் கடத்தப்படும் சுழல் விசைக்கு	நிச்சயமான வேக ஓட்டம்
5. வேக வழுக்கல் ஏற்பட்டு கடத்தப்படும் சுழல் விசைக்கு	நிச்சயமற்ற வேக ஓட்டம்
6. (மின் மோட்டார் உடன் இணைக்கப்பட்ட அச்சு) எந்த அச்சிலிருந்து சக்தி பெறப்படுகிறதோ அந்த கப்பிக்கு	இயக்கும் கப்பி Driving Pulley
7. எந்த அச்சிலிருந்து சக்தி பெறப்படுகிறதோ அந்த அச்சு இயங்கும் கப்பி, அதனுடன் இணைந்த கப்பிக்கு,	இயக்கப்படும் கப்பி Driven Pulley

8. பட்டைக்கும் (பெல்ட்டிற்கும்) உருளைக்கும் இடையே ஏற்படும் இறுக்கம்	பிடிப்புத் தன்மை (Grip)
9. நேர் பட்டை முறை	இரு உருளைகளும் ஒரே திசையில் சுழலும்
10. குறுக்குப் பட்டை	இரு உருளைகளும் எதிர் எதிர் 1) திசையில் சுழலும் 2) பிடிப்புத் தன்மை (Grip) அதிகம்.
11. பட்டை வகைகள்	1) தட்டை வடிவப் பட்டை 2) V – வடிவப் பட்டை
12. தட்டை வடிவ பட்டையின் குறுக்கு வெட்டு தடிமன்	0.75 மி.மீ முதல் 5 மி.மீ வரை
13. தட்டை வடிவ பட்டையின் சுழல் சக்தியைக் கடத்தும் திறன்	98%
14. V – வடிவப் பட்டையின் குறுக்கு வெட்டு தடிமன்	8 மிமீ முதல் 19 மிமீ
15. V – வடிவ பட்டை சுழலும் சக்தி கடத்தும் திறன்.	70% to 98%
16. பட்டை வேக விகிதம்	$\frac{N_2}{N_1} = \frac{D_1}{D_2}$ D_1,D_2 இரு உருளைகளின் விட்டங்கள் N_1,N_2 இரு உருளைகளின் வேகம்
17. வேக விகிதம் என்பது	1. பட்டையின் தடிமனை பொருத்தது, 2. வேக வழுக்கலை பொருத்து மாறுபடும்.
18. பட்டை வேக வழுக்கல் (%)	$\frac{\text{திட்டமிட்ட வேகம் - உண்மையான வேகம்}}{\text{திட்டமிட்ட வேகம்}} \times 100$
19. D_1, D_2 என்பது இரு உருளைகளின் விட்டங்கள் N_1, N_2 என்பது அவற்றின் வேகம் எனவும், S என்பது வேக வழுக்கல் சதவிகிதம் (%) எனக் கொண்டால்	$\frac{N_2}{N_1} = \frac{D_1}{D_2} \times \left(\frac{100 - S}{100}\right)$
20. நேர் பல்லிணை	1. அச்சிற்கு இணையாக பற்கள் வெட்டப்பட்டிருக்கும் 2. இணையான இரு தண்டுகளை இணைக்கும்
21. நெளிவுப் பல்லிணை	1. அச்சிற்கு இணையாக இல்லாமல் சுருள் போன்ற வடிவத்தில், பற்கள் நெளிவாக வெட்டப்பட்டிருக்கும் 2. ஒன்றுக்கு மேற்பட்ட பற்கள் இணைந்திருப்பதால் அதிக விசையை கடத்த முடியும்
22. சரிவுப் பல்லிணை	1. சரிவு உருளையின் மேற்பரப்பில் பற்கள் வெட்டப்பட்டிருக்கும் 2. ஒன்றுக் கொன்று செங்குத்தாக உள்ள அச்சுகளை இணைத்து சுழலும் விசை கடத்தும். மீட்டர் கியர் என்றும் பெயர் உண்டு

23. தட்டை மற்றும் சிறு பல்லிணை	1. சிறு பல்லிணையானது சுழலும், தட்டைப் பல்லிணை முன்னும், பின்னும் நகரும் ஆனால் சுழலாது 2. சுழலும் விசையை நேர்கோட்டில் நகரும் விசையாக மாற்றவோ அல்லது நேர்கோட்டில் நகரும் விசையை சுழலும் விசையாக மாற்றவோ பயன்படும்
24. வார்ம் மற்றும் வார்ம் பல்லிணை	1. வார்ம் என்பது மரையிடப்பட்ட சிறிய மரைதண்டு, வார்ம் என்பது வார்ம் பற்சக்கரத்துடன் பொருந்தும் 2. அதிவேக குறைப்பு செய்து விசையை கடத்த பயன்படும் 3. ஒன்றுக்கொன்று செங்குத்தாக (90°) உள்ள இரு அச்சுகளை இணைத்து சுழல் சக்தியை கடத்தலாம்
25. இரு பல்லிணைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து சுழலும் போது	1. இயக்கும் பல்லிணை வலஞ்சுழியாக சுழலும் 2. இயக்கப்படும் பல்லிணை இடஞ்சுழியாக சுழலும் அதாவது எதிர் எதிர் திசையில் சுழலும்
26. வேக விகிதம்	$\frac{N_2}{N_1} = \frac{T_1}{T_2}$ T1 &T2 பல்லிணையின் பற்கள் எனவும் N_1 & N_2 என்பவை அவற்றின் வேகம் என கொள்ளவும்
27. எளிய பல்லிணைத் தொடர்	1. ஒவ்வொரு அச்சிலும் ஒரு பல்லிணை வீதம் இருக்கும் படி வைத்து தொடர்ச்சியாக பல பல்லிணைகளை இணைக்கும் முறைக்கு எளிய பல்லிணைத் தொடர் எனப்படும் 2. மொத்தமுள்ள பல்லிணைகளின் எண்ணிக்கை ஒற்றைப்படையாக இருப்பின், முதல் பல்லிணையும், கடைசி பல்லிணையும் ஒரே திசையில் சுழலும்
28. கூட்டுப் பல்லிணைத் தொடர்	1. ஒரே அச்சில் ஒன்றுக்கு மேற்பட்ட பல்லிணைகள் பொருத்தப்பட்ட பல்லிணைத் தொடருக்கு, கூட்டுப் பல்லிணைத் தொடர் என்று பெயர் 2. இயக்கப்படும் பல்லிணையின் வேகமானது இடைப்பட்ட பல்லிணைகளின் பற்கள் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும்

சொற்களஞ்சியம்

Spur Gear	நேர்ப்பல்லிணை
Helical Gear	நெளிவுப்பல்லிணை
Bevel Gear	சரிவுப்பல்லிணை
Rack and Pinion	தட்டை மற்றும் சிறு பல்லிணை

செயல்பாடுகள்

- நேர்ப்பட்டை வேக ஓட்ட முறை குறுக்குப்பட்டை வேக ஓட்ட முறை சங்கிலி (செயின்) வேக ஓட்ட முறை ஆகிய சுழலும் சக்தியை கடத்தும் முறைகளின் மாதிரி வடிவம் செய்க.

www.tnschoolbooks.in

வினாக்கள்

பகுதி அ

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக (1 மதிப்பெண்)

1. அதிக இடைவெளிஉள்ள சுழலும் சக்தியைக் கடத்த இது பயன்படும்

   அ) பட்டை

   ஆ) பல்லிணை

   இ) சங்கிலி

   ஈ) மின் மோட்டார்

2. இயக்கும் உருளையின் விட்டம் 200 செ. மீ., வேக விகிதம் 4 எனில் இயக்கப்படும் உருளையின் விட்டம்

   அ) 100 செ.மீ ஆ) 25 செ.மீ.

   இ) 40 செ.மீ. ஈ) 50 செ.மீ.

3. பல்லிணையின் வேகம் காணும் வாய்ப்பாடு

   அ) $D_1N_1 = D_2N_2$ ஆ) $\frac{N_T - N_A}{N_T} \times 100 \times 100$

   இ) $= \frac{T_1}{T_2} = \frac{N_2}{N_1}$ ஈ) RPM

பகுதி ஆ

ஓரிரு வரிகளில் விடையளிக்க (3 மதிப்பெண்கள்)

4. RPM விளக்குக
5. சுழல் சக்தியைக் கடத்தும்முறைகள் யாவை?
6. ஏதேனும் இரண்டு பல்லிணைகள் பற்றி விளக்குக?
7. செயலற்ற பல்லிணைகள்(Idle Gear) என்றால் என்ன?
8. சரிவு பல்லிணைகள் என்றால் என்ன?6

பகுதி இ

ஒரு பக்க அளவில் விடையளிக்க (5 மதிப்பெண்கள்)

9. வேக விகிதம் என்பதனை விளக்குக.
10. எளிய பல்லிணைத் தொடர் படம் வரைந்து விளக்குக.
11. கூட்டுப் பல்லிணைத் தொடர் படம் வரைந்து விளக்குக.
12. பட்டை மூலம் சுழலும் சக்தி கடத்துதலை விவரி.

பகுதி ஈ

விரிவான விடையளிக்க (10 மதிப்பெண்கள்)

13. நேர் பட்டை முறையை படத்துடன் விவரி.
14. குறுக்குப்பட்டை முறையினை படத்துடன் விவரி.

XI_TM_BME_Tamil_Chapter09_2022.indd 132 28-04-2022 15:36:12

பாடம்
10

மின்னியல்

கற்றலின் நோக்கம்

- அடிப்படை மின்னியில், ஃபாரடே விதி மற்றும் ஃபிளம்மிங் விதி ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- அடிப்படை மின்சுற்றுகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- நேர்த்திசை மின்னோட்டம் மற்றும் மாறுதிசை மின்னோட்டம் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- மின் மோட்டார், மின் துவக்கிகள் மற்றும் அவற்றின் வகைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

10.1 அறிமுகம்
10.2 மின்னியலின் அடிப்படைகள்
10.3 ஓம் விதி
10.4 மின் சுற்று
10.5 காந்தவியல்
10.6 ஃபாரடேயின் விதிகள்
10.7 மின் இயக்குவிசை
10.8 மின் மோட்டார்
10.9 துவக்கிகள்

10.1 அறிமுகம்

- மின்சாரம் என்பது எலக்ட்ரான்கள் எனப்படும் மின்னூட்ட துகள்களின் மூலம் பெறப்படும் ஒரு வகையான ஆற்றல் ஆகும். மின் விளக்கு, மின் அடுப்பு, குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டி மற்றும் இயந்திரங்கள் போன்றவைகளில் மின்சார சக்தி பயன்படுகிறது.
- பெஞ்சமின் பிராங்களின் என்னும் அறிவியல் அறிஞர் முதன்முதலில் மின்சாரத்தை கண்டுபிடித்தார். பிறகு 1879ஆம் ஆண்டு தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார விளக்கை கண்டுபிடித்தார்.

XI_TM_BME_Tamil_Chapter10_2022.indd 133 1/25/2023 5:00:41 PM

10.2 மின்னியலின் அடிப்படை

மின்சாரம் என்பது ஒரு வகை ஆற்றல் ஆகும். திட, திரவ அல்லது வாயு நிலையில் உள்ள எல்லா வகை பொருட்களும் அணுக்கள் எனப்படும் நுண்ணிய துகள்களால் ஆனவை. தற்கால ஆராய்ச்சியின் கொள்கைபடி மின்னோட்டம் என்பது எலக்ட்ரான்களின் ஓட்டம் ஆகும். மின்னியலின் அடிப்படை பற்றி படத்தில் விளக்கப்பட்டுள்ளது.



மின்னியலின் அடிப்படை

10.2.1. மின்னழுத்தம்(Voltage)

மின்கடத்தியில் எலக்ட்ரான்களை ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு நகர்த்த (அ) கடத்த தேவைப்படும் அழுத்தத்தையே மின்னழுத்தம் என்கிறோம். இது V என்னும் எழுத்தால் குறிக்கப்படுகிறது. இதன் அலகு வோல்ட் ஆகும். வோல்ட் மீட்டர் என்ற கருவியின் மூலம் இதனை அளவிடலாம்.



மின்னழுத்தம்(Voltage)

10.2.2. மின்னோட்டம் (Current)

மின்கடத்தியில் எலக்ட்ரான்களின் ஓட்டத்தையே மின்னோட்டம் என்கிறோம். மின்னோட்டத்தை 'I' என்ற எழுத்தால் குறிக்கிறோம். இதன் அலகு ஆம்பியர் (A) எனப்படுகிறது. மின்னோட்டத்தை அம்மீட்டர் என்ற உபகரணத்தின் மூலம் அளவிடலாம்.



மின்னோட்டம் (Current)

மின்சாரத்தை இரண்டு வகைகளாக வகைப்படுத்தலாம்.

1. நேர்திசை மின்சாரம் (Direct Current –DC)
2. மாறுதிசை மின்சாரம் (Alternative Current–AC)

1. நேர்திசை மின்சாரம் (Direct Current –DC)

நேர்திசை மின்சாரம் என்பது மின்னோட்டமானது எதிர் மின்சுமையில் இருந்து நேர் மின்சுமைக்கு எலக்ட்ரான்களைப் பாயச் செய்யும். பொதுவாக நேர்திசை மின்சாரமானது வேதியியல் முறையில் மின்கலத்தில் உள்ளது போல் உற்பத்தி செய்யப்படுகிறது. நேர்த்திசை ஜெனரேட்டர்கள் அதிக திறன் உள்ள மின்னோட்டத்தை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.



நேர்திசை மின்சாரம் (Direct Current –DC)

2. மாறுதிசை மின்சாரம் (Alternative Current –AC)

மாறுதிசை மின்சாரம் என்பது மின்சாரத்தின் மின் அழுத்தம் (v) மற்றும் மின்னோட்டம் (I) ஆகியவற்றின் அளவு, திசை, தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும். இதன் அலைவு வேகம் 50 சுற்றுகள்/வினாடி ஆகும்.



மாறுதிசை மின்சாரம் (Alternative Current –AC)

நேர்திசை மற்றும் மாறுதிசை மின்சாரத்திற்கு உள்ள வேறுபாடுகள்

எண்	நேர்திசை மின்சாரம்	மாறுதிசை மின்சாரம்
1	நேர்திசை மின்சாரத்தை நீண்ட தூரத்திற்கு கடத்த முடியாது	மாறுதிசை மின்சாரத்தை நீண்ட தூரத்திற்கு கடத்த முடியும்.
2	மின்னோட்ட திசை மாறாது	மின்னோட்ட திசை தொடர்ந்து மாறும்
3	நேர்திசை மின்னோட்டமானது மின்கலம் மூலம் பெறப்படுகிறது.	மாறுதிசை மின்னோட்டமானது, ஏ.சி. ஜெனரேட்டர் மூலம் பெறப்படுகிறது.
4	நேர்திசை மின்னோட்டத்திற்கு மின்னோட்ட அலைவு வேகம் கிடையாது	மாறுதிசை மின்னோட்டம் உற்பத்தி செய்யும் நாடுகளை பொறுத்து 50 ஹெர்ட்ஸ் மற்றும் 60 ஹெர்ட்ஸ் ஆக மின்னோட்ட அலைவு வேகம் இருக்கும்.
5	நேரத்தைப் பொறுத்து மின்னோட்டத்தின் அலைவு மாறாது	நேரத்தைப் பொறுத்து மின்னோட்டத்தின் அலைவு மாறும்

10.2.3. மின்தடை(Resistance)

ஒரு பொருள் தன் வழியே மின்சாரம் பாய்வதற்கு தரும் எதிர்ப்புக் குணத்தையே மின்தடை என்கிறோம். இது R என்னும் எழுத்தால் குறிக்கப்படுகிறது. இதன் அலகு ஓம்ஸ் (Ω) எனப்படும். இதனை ஓம் மீட்டர் மூலம் அளவிடலாம். மெகா ஓம்ஸ் அளவுகளை மெக்கர் (Meggar) என்ற கருவி கொண்டு அளவிடலாம்.

எடுத்துக்காட்டு: தங்கம் குறைவான மின்தடை கொண்டது. ஆனால் இரும்பு அதிக மின்தடை கொண்டது. உலோகங்களுக்கு தகுந்தவாறு மின்தடை மாறுபடும். மின்தடை என்பது கடத்தியின் வெப்பநிலை மற்றும் குணம் சார்ந்து இருக்கும்.

10.2.4. மின்சக்தி (POWER)

மின்சக்தி என்பது வேலை செய்யும் வீதம் ஆகும். அதாவது ஓரலகு நேரத்தில் மின்சாரத்தால் செய்யப்படும் மொத்த வேலையின் அளவு ஆகும். இது P என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது. இதன் அலகு வாட் ஆகும்.

மின்சக்தி = மின்னழுத்தம் × மின்னோட்டம்

$$P = V \times I$$

10.3 ஓம் விதி(OHM'S LAW)

வெப்பநிலை மாறாமல் இருக்கும் ஒரு மின்சுற்றில் பாயும் மின்னோட்டமானது, அம்மின்சுற்றின் மின்னழுத்தத்திற்கு நேர் விகிதத்திலும், மின்தடைக்கு எதிர் விகிதத்திலும் இருக்கும். இதுவே "ஓம்ஸ் விதி" எனப்படுகிறது.



ஓம் விதி(Ohm's law)

இதை கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.

$V = I \times R$



I = மின்னோட்டம்

V = மின்னழுத்தம்

R = மின்தடை

$I \propto V$, $I \propto 1/R$ எனில்

$I = V/R$

$R = V/I$ & $V = I.R$

10.4 மின் சுற்று (ELECTRIC CIRCUIT)

மின்னோட்டமானது மின்சாரம் விநியோகிக்கப்படும் புள்ளியிலிருந்து மின் கடத்திகளின் மூலம் மின்பளுக்களுக்கு பாய்ந்து சென்று முற்றுப் பெற்ற பாதையைக் குறிப்பதே மின்சுற்று எனப்படும்.

மின்சுற்றின் முக்கிய பிரிவுகள்

1. தொடர் மின்சுற்று (Series Circuit)
2. பக்க மின்சுற்று (Parallel Circuit)

10.4.1. தொடர் மின்சுற்று (Series Circuit)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்தடைகளை தொடர்ச்சியாக (படத்தில் காட்டியவாறு) இணைக்கப்பட்ட மின்சுற்றுக்கு தொடர் மின்சுற்று என்று பெயர்.





தொடர் மின்சுற்று (Series Circuit)

தொடர் மின்சுற்றில்

மொத்த மின்னழுத்தம் $V = V_1 + V_2 + V_3$

மொத்த மின்தடை $R = R_1 + R_2 + R_3$

மின்னோட்டம் I = அனைத்து மின்தடைகளுக்கும் ஒரே அளவு

10.4.2. பக்க மின்சுற்று (Parallel Circuit)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்தடைகளைப் படத்தில் காட்டியவாறு எல்லா மின்தடைகளின் ஆரம்பமுனைகள் ஒன்றாகவும், முடிவு முனைகள் ஒன்றாகவும் இணைக்கப்பட்ட மின்சுற்றுக்கு பக்க மின்சுற்று என்று பெயர்.

பக்க மின்சுற்றில்

$$V = V_1 = v_2 = v_3$$

$$I = I_1 + I_2 + I_3$$

$$I/R = I/R_1 + I/R_2 + I/R_3$$



பக்க மின்சுற்று (Parallel Circuit)

10.5 காந்தவியல் (MAGNETISM)

மின்னியல் துறையில் காந்தவியல் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இரும்பு உலோகங்களை ஈர்க்கும் சக்தியே காந்த சக்தி ஆகும். காந்தத்தன்மை உள்ள பொருட்கள் காந்தம் எனவும், காந்தத்தால் ஈர்க்கப்படும் பொருட்கள் காந்த பொருட்கள் எனவும் கூறப்படுகின்றது.

10.5.1. மின்காந்தவியல் (Electro Magnetism)

ஒரு மின்சுற்றின் வழியே மின்னோட்டம் பாயும்போது அதனைச் சுற்றி காந்த புலம் ஏற்படும். மின்சுற்றின் நடுவே மிருதுவான இரும்புத்துண்டு வைக்கப்படும் போது இரும்பு காந்த தன்மையை அடைகிறது. இந்த செயல்பாடு மின்காந்தவியல் எனப்படும்.

10.5.2. காந்தவிசைக்கோடு (Magnetic Flux)

மின்காந்த புலத்தில் செல்லுகின்ற விசைக்கோடுகளை காந்த விசைக்கோடுகள் என்கிறோம். இதனை Ø என்ற அடையாளக் குறியீடு மூலம் குறிப்பிட வேண்டும். இதன் அலகு CGS முறையில் மேக்ஸ்வெல் (Maxwell) என்றும், MKS முறையில் வெபர் (weber) என்ற அலகாலும் குறிப்பிடுகிறோம் .



காந்தவிசைக்கோடு (Magnetic Flux)

10.5.3. மின்காந்தத் தூண்டல் (Electro Magnetic Induction)

காந்தவிசைக் கோடுகளை ஒரு மின்கடத்தியைக் கொண்டு வெட்டினாலோ, அல்லது மின் கடத்தியை காந்தவிசைக் கோடுகளால் வெட்டினாலோ, மின்கடத்தியில் மின்சாரம் தூண்டப்படும். இதுவே மின்காந்தத் தூண்டல் ஆகும். இவ்வாறு தூண்டப்படும் மின்சாரம் "மின் இயக்கு விசை" (EMF – Electro Motive Force) என்று அழைக்கப்படுகிறது. தூண்டப்படும் மின்சாரமானது காந்தபுல வலிமையையும், காந்தக்கோடுகளை வெட்டும் வேகத்தையும் பொருத்தது ஆகும்.

10.6 ஃபாரடேயின் விதிகள்

காந்தமயமானது, மின் சுற்றில் எவ்வாறு மின்னியக்கு விசையை ஏற்படுத்துகிறது என்பதை ஃபாரடேயின் மின்காந்த தூண்டல் அடிப்படை விதியானது விளக்குகிறது.



ஃபாரடேயின் விதிகள்

10.6.1. முதல் விதி

காந்த விசைக்கோடுகளை மின் கடத்தியானது, வெட்டுவதாலோ அல்லது மின்கடத்தியை காந்த விசைக்கோடுகள் வெட்டுவதாலோ, மின் கடத்தியில் மின் இயக்குவிசை (E.M.F) தூண்டப்படும்.

10.6.2. இரண்டாம் விதி

ஒரு கடத்தியில் தூண்டப்படும் மின் இயக்கு விசை (மின்னோட்டம்) ஆனது, ஒரு விநாடியில் கடத்தியானது, காந்தவிசைக் கோடுகளை வெட்டும் அளவைப் பொருத்து அல்லது ஒரு விநாடியில் காந்த விசை கோடுகள் வேறுபடும் அளவைப் பொருத்து அமையும்.

10.7. மின் இயக்குவிசையின் திசை (DIRECTION OF EMF)

மின்காந்த தூண்டலுக்கும், மின்னோட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பையும், காந்தககோடுகளின் திசைக்கும், மின்கடத்தியின் இயக்க திசைக்கும் உள்ள தொடர்பையும் ஃபிளமிங்கின் வலக்கைவிதி மூலம் நிரூபிக்கலாம்.

10.7.1. ஃபிளமிங் வலக்கை விதி

படத்தில் காட்டியவாறு வலக்கை பெருவிரல் ஆள்காட்டிவிரல் ஆகியவற்றை ஒன்றுக்கொன்று செங்குத்தாக வைத்துக் கொண்டு நடுவிரலை உள்ளங்கைக்கு செங்குத்தாக இருக்கும்படி வைத்துக் கொண்டால், ஆள்காட்டிவிரல் காந்தக்கோடுகளின் திசையையும், பெருவிரல் மின்கடத்தி நகரும் திசையையும் குறிப்பதாகக் கொண்டால், நடுவிரலானது தூண்டப்பட்ட மின்னோட்டத்தின் திசையைக் குறிக்கும்.



ஃபிளமிங் வலக்கை விதி

10.7.2. ஃபிளமிங் இடக்கை விதி

படத்தில் காட்டியவாறு இடக்கை பெருவிரல், ஆள்காட்டிவிரல் ஆகியவற்றை ஒன்றுக்கொன்று செங்குத்தாக வைத்துக் கொண்டு நடு விரலை உள்ளங்கைக்கு செங்குத்தாக இருக்கும்படி வைத்துக் கொண்டால், ஆள்காட்டிவிரல் காந்தக்கோடுகளின் திசையையும் நடுவிரல் மின்னோட்டம் பாயும் திசையை குறிப்பதாகக் கொண்டால், பெருவிரல் கடத்தி நகரும் திசையைக் குறிக்கும்.



ஃபிளமிங் இடக்கை விதி

10.8. மின் மோட்டார்

மின்சக்தியை இயந்திரசக்தியாக மாற்றும் இயந்திரத்திற்கு மின்மோட்டார் என்று பெயர். மின்மோட்டார் பயன்படுத்தும் இடங்களைப் பொறுத்தும், அதன் பயன்பாட்டைப் பொறுத்தும் பலவகைகளாகப் பிரிக்கலாம்.

10.8.1. மின்மோட்டார் வகைகள்

1. நேர்திசை மின்னோட்ட மோட்டார் (Direct Current Motor)
   - i. ஷண்ட் மோட்டார் (shunt motor)
   - ii. சீரிஸ் மோட்டார் (Series motor)
   - iii. காம்பௌண்ட் மோட்டார் (Compound motor)
2. மாறுதிசை மின்னோட்ட மோட்டார் (Alternative Current Motor)
   - i. ஒருபக்க தூண்டு மின்மோட்டார்
     - a. ஸ்பிலிட் ஃபேஸ் இண்டக்சன் மோட்டார் (Split phase Induction)
     - b. கப்பாசிட்டர் இண்டக்சன் (Capacitor Induction) மோட்டார்
     - c. ரிப்பல்ஷன் (Repulsion) மோட்டார்
     - d. ஷேடட் போல் (Shaded pole) மோட்டார்
   - ii. மூன்றுபக்க தூண்டு மின்மோட்டார்
     - a. ஸ்குரில் கேஜ் வகை (Squirrel Cage)
     - b. சிலிப்ரிங் வகை (Slip ring)

10.8.2. மூன்றுபக்க தூண்டு மின் மோட்டார் செயல்படும் தத்துவம்

இண்டக்சன் மோட்டாரின் ஸ்டேட்டார் பாகத்தில் 120° டிகிரி ஃபேஸ் வேறுபாட்டில் உள்ள 3φ வைண்டிங்குகளில் 3φ சப்ளை தரும்போது மாறாத மதிப்புடைய சிங்கர்னஸ் வேகத்தில் சுழல்கின்ற காந்தபுலம் ஏற்படுகிறது. அத்துடன் ரோட்டார் எனப்படும் ஆர்மச்சூரின் மின்கடத்திகளில் மின்னோட்டம் தூண்டப்படுகிறது. அவ்வாறு தூண்டப்பட்ட மின்னோட்டமானது, மின்னோட்டம் தூண்டப்படுவதற்கான காரணத்தை எதிர்க்க முயலும் என்பதை லென்ஸ் விதிப்படி அறியலாம்.

10.8.3. இண்டக்சன் மோட்டாரின் அமைப்பு

இண்டக்சன் மோட்டாரின் இரு முக்கிய பாகங்கள்.

1. ஸ்டேட்டார் (Stator)
2. ரோட்டார்(Rotor)

1. ஸ்டேட்டார் (Stator): இது மெல்லிய தகடுகளால் அடுக்கப்பட்ட குழாய் வடிவமானது. அதன் உட்புறத்தில் அச்சிற்கு இணையாக நீளவாட்டத்தில் வைண்டிங் காயில்களை பதிப்பதற்காக பள்ளங்கள் வெட்டப்பட்டிருக்கும் தேவையான வேகத்திற்கு ஏற்ப 2, 4, 6, 8 போன்ற துருவங்களுக்காக வைண்டிங் செய்யப்பட்டிருக்கும்.



இண்டக்சன் மோட்டாரின் அமைப்பு



ஸ்டேட்டார்

2. ரோட்டார் (Rotor) மின்மோட்டாரில் உள்ள மின்காந்த அமைப்பில் சுழலும் பாகமாகும். வைண்டிங்கிற்கும் மின்காந்த புலத்திற்கும் இடையே ஏற்படும் தொடர்பினால் ரோட்டார்க்கு சுழல்விசை கிடைக்கிறது.



ரோட்டார்

10.9 இண்டக்சன் மோட்டார் துவக்கிகள் (INDUCTION MOTOR STARTERS)

துவக்கி இல்லாமல் நேரடியாக இண்டக்சன் மோட்டாருக்கு மின்சப்ளை கொடுத்தால் முழு அளவு மின்சாரம் உள்ள போது எடுத்துக் கொள்கின்ற மின்னோட்டத்தை விட துவக்கத்தில் 5 முதல் 6 மடங்கு மின்னோட்டம் எடுத்துக் கொள்ளும்.

இதனால் மோட்டார் மற்றும் அதற்கு மின்சார சப்ளை தருகின்ற மின்கம்பிகள்(ஒயர்கள்) எரிந்துவிடும் அல்லது பாதிக்கப்படும். எனவே மோட்டாரை துவக்கும் போது மின்னழுத்தத்தை குறைத்து மின்னோட்டத்தை கட்டுப்படுத்தி துவக்கவும், மோட்டார் ஓடத்துவங்கிய பின் முழு அளவு மின்னழுத்தத்தை செலுத்தி தொடர்ந்து ஓடச்செய்திடவும் துவக்கி பயன்படுகிறது.

மேலும் துவக்கியில் நோவோல்ட் (No Volt Coil) காயில் மற்றும் ஓவர்லோடுரிலே (Over Load Relay) போன்றவை மோட்டாரின் பாதுகாப்பிற்காக பொருத்தப்பட்டுள்ளது.

10.9.1. இண்டக்சன் மோட்டாரில் பயன்படுத்தப்படும் துவக்கிகளின் வகைகள்:

1. நேரடி ஆன்லைன் துவக்கி (D.O.L) (5 HPக்குள் உள்ள மின்மோட்டாருக்கு ஏற்றது)
2. ஸ்டார் – டெல்டா துவக்கி (Star Delta) (5 HP முதல் 15 HP வரை உள்ள மின்மோட்டாருக்கு ஏற்றது)
3. தானியக்க உருமாற்றி துவக்கி (Auto Transformer) (15 HP மேல் உள்ள மின்மோட்டாருக்கு ஏற்றது)
4. சிலிப்ரிங் இன்டக்ஷன் மோட்டார் துவக்கி.

சொற்களஞ்சியம்

Voltage	மின்னழுத்தம்
Resistance	மின்தடை
Current	மின்னோட்டம்
Electric Circuit	மின்சுற்று
Series Circuit	தொடர் மின்சுற்று
Parallel Circuit	பக்க மின்சுற்று
Electro Magnet	மின்காந்தம்
Electro Magnetism	மின்காந்தவியல்
Electro Motive Force(EMF)	மின் உந்து விசை

XI_TM_BME_Tamil_Chapter10_2022.indd 139 1/25/2023 5:00:44 PM

www.tnschoolbooks.in

செயல்பாடுகள்

- மின்கலத்தை பயன்படுத்தி, பக்க இணைப்பு மற்றும் தொடர் இணைப்பு ஆகியவற்றை அமைத்து மாணவர்களை சோதிக்க செய்ய வேண்டும்.
- 220Ω , 330Ω, 1k Ω, 1.1 kΩ, 2kΩ, 2.4Ω, 2.7Ω ஆகிய மதிப்புடைய மின்தடைகளை சேகரிக்கவும்.

வினாக்கள்

பகுதி அ
சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக (1 மதிப்பெண்)

1. மின்னோட்டத்தின் அலகு
   அ) வோல்ட் ஆ) வாட்
   இ) ஆம்பியர் ஈ) ஓம் மீட்டர்
2. மின்னழுத்தத்தின் அலகு
   அ) வோல்ட் ஆ) வெப்பர்
   இ) சதுரமீட்டர் ஈ) கில்பர்ட்
3. மின் தடையின் அலகு
   அ) மீட்டர்ஆ) ஓம்
   இ) வாட்மணி ஈ) கூலூம்
4. மின்சக்தியின் அலகு
   அ) வோல்ட் ஆ) ஆம்பியர்
   இ) வாட் ஈ) ஓம்
5. மாறுதிசை மின்சாரத்தின் அலைவு வேகம்
   அ) 50 சுற்றுகள் / வினாடி
   ஆ)வோல்ட்
   இ) கூலும்
   ஈ) மீட்டர்
6. மின்சக்தியை இயந்திர சக்தியாக மாற்றும் இயந்திரம்
   அ) ஜெனரேட்டர் ஆ) மின் மோட்டார் இ) துவக்கி ஈ) மின்மாற்றி
7. 5 Hp முதல் 15 Hp வரை உள்ள மின்மோட்டாருக்குப் பயன்படும் துவக்கி
   அ) ஸ்டார் டெல்டா துவக்கி
   ஆ) D.O.L. துவக்கி
   இ) ஆட்டோ டிரான்ஸ்பார்மர் துவக்கி
   ஈ) சிலிப்ரிங் இண்டக்சன் மோட்டார் துவக்கி

பகுதி ஆ
ஓரிரு வரிகளில் விடையளிக்க

(3 மதிப்பெண்கள்)

8. மின்னோட்டம் என்றால் என்ன ?
9. மின்தடை என்றால் என்ன ?
10. ஓம் விதியைக் கூறுக.
11 பாரடேயின் முதல் விதியைக் கூறுக.
12. பாரடேயின் இரண்டாம் விதியைக் கூறுக.
13. மின்சார மோட்டார்களில் சிலவற்றை பட்டியலிடுக.
14. தூண்டுமின்மோட்டாரில்பயன்படுத்தப்படும் துவக்கிகளின் வகைகள் யாவை ?
15. மின்மோட்டாரின் பாதுகாப்பிற்காக துவக்கியுடன் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு சாதனங்கள் யாவை ?
16. மின் மோட்டாருக்கு துவக்கியின் தேவை யாது ?

பகுதி இ
ஒரு பக்க அளவில் விடையளிக்க

(5 மதிப்பெண்கள்)

17. நேர்திசை மின்னோட்டம் மற்றும் மாறுதிசை மின்னோட்டம் ஒப்பிடுக.
18. ஃபிளமிங்கின் வலக்கை விதியை படம் வரைந்து விவரி.
19. ஃபிளமிங்கின் இடக்கை விதியை படம் வரைந்து விவரி.

பகுதி ஈ
விரிவான விடையளிக்க

(10 மதிப்பெண்கள்)

20. தொடர் மின்சுற்று மற்றும் பக்க மின்சுற்று படம் வரைந்து விளக்குக.
21. மின்மோட்டாரின் அமைப்பை படம் வரைந்து விளக்குக.

XI_TM_BME_Tamil_Chapter10_2022.indd 140 1/25/2023 5:00:44 PM

அடிப்படை இயந்திரவியல் – கருத்தியல்

மாதிரி வினாத்தாள்

நேரம்: 3.00 மணி

மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி – அ

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 15X1 = 15

1. தொழிற்சாலையில் பொருட்களை உற்பத்தி செய்பவர்
   அ) மேற்பார்வையாளர்
   ஆ) இயந்திர பணியாளர்
   இ) மேலாளர்
   ஈ) முதலாளி

2. முதல் உதவி என்பது
   அ) தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் முறை
   ஆ) பணியாளர் பாதுகாப்பு முறை
   இ) தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டால் கொடுக்கப்படும் உடனடி சிகிச்சை முறை
   ஈ) இயந்திர பாதுகாப்பு

3. கோண அளவுகளை அளக்கவும், வரையவும் பயன்படும் வரைபட கருவி
   அ) பங்கிடும் கருவி
   ஆ) பாகைமாணி
   இ) கவராயம்
   ஈ) T– வடிவ மட்ட பலகை

4. மேல்பக்க தோற்றம் கீழ்கண்ட எந்த தளத்தில் தெரியும்
   அ) செங்குத்து தளம்
   ஆ) கிடைமட்ட தளம்
   இ) புரொபைல்(Profile) தளம்
   ஈ) துணை (Auxiliary) தளம்

5. கோடுகளை ஒழுங்கமைக்க உதவும் செயல்பாடு
   அ) OSNAP ஆ) RIGTHALIGN
   இ) ORTHO ஈ) XALIGN

6. வெர்னியரின்மீச்சிற்றளவு (நுணுக்கம்)
   (அ) 0.01 மிமீ (ஆ) 0.02 மிமீ
   (இ) 0.001 மிமீ (ஈ) 0.1 மிமீ

7. ஆன்வில், மற்றும் திம்பிள் ஆகிய பாகங்கள் காணப்படும் அளக்கும் கருவி
   (அ) வெர்னியர் காலிப்பர்
   (ஆ) வெர்னியர் உயர அளவி
   (இ) மைக்ரோ மீட்டர்
   (ஈ) காம்பினேசன் செட்

8. சிதறும் தன்மை கொண்ட பொருள்
   அ) எஃகு ஆ) காப்பர்
   இ) வார்ப்பிரும்பு ஈ) அலுமினியம்

9. அலுமினியத்தின் அணு எண்
   அ) 10 ஆ) 12 இ) 13 ஈ) 15

10. பதப்படுத்துவதன் நோக்கம்
    அ) அதிமான எதிர்ப்புத் தன்மை அதிகரிக்க
    ஆ) உலோகத்தின் கடினத்தன்மையை அதிகரிக்க
    இ) சிதறும் தன்மையை குறைக்க
    ஈ) இயந்திரப்பணி செய்யும் தன்மையை மேம்படுத்த

11. வாஷரின் அளவு பொதுவாக இதைக் கொண்டு குறிப்பிடப்படுகிறது
    அ) வெளி விட்டம் ஆ) உள் விட்டம்
    இ) தடிமன் ஈ) சராசரி விட்டம்

12. சாவி செய்ய பயன்படும் உலோகம்
    அ) டங்ஸ்டன் ஆ) எஃகு
    இ) வார்ப்பிருப்பு ஈ) காரீயம்

13. அச்சின் அளவை விட, துளையின் அளவு குறைவாக உள்ள இணைப்பு
    அ) அழுத்த இணைப்பு
    ஆ) இடைவெளியுள்ள இணைப்பு
    இ) இடைவெளியற்ற இணைப்பு
    ஈ) நழுவு இணைப்பு

XI_TM_BME_Tamil_Chapter10_2022.indd 141 1/25/2023 5:00:44 PM

14. அதிக இடைவெளிஉள்ள சுழலும் சக்தியைக் கடத்த இது பயன்படும்

அ) பட்டை ஆ) பல்லிணை

இ) சங்கிலி ஈ) மின் மோட்டார்

15. மின்னோட்டத்தின் அலகு

அ) வோல்ட் ஆ) வாட்

இ)ஆம்பியர் ஈ) ஓம்

பகுதி – ஆ

ஏதேனும் பத்து வினாக்களுக்கு நான்கு வரிகளுக்கு மிகாமல் விடையளி 10x3=30

16. இயந்திர பணியாளர் என்பவர் யார்?
17. அரத்தின் தரத்தைப் பொறுத்து அதன் வகைகளை கூறுக.
18. அளவிகளின் தரங்களின்(Grade of Gauges) வகைகள் யாவை?
19. மைக்ரோ மீட்டரின் கூட்டுப் பிழை என்றால் என்ன?
20. கார்பன் எஃகின் மூன்று வகைகள் யாவை?
21. வெப்பப்டுத்தி குணமாற்றம் செய்தல் வரையறு
22. அச்சு பெட்டியின் வகைகள் யாவை?
23. சுழலும் சக்தியைக் கடத்தும் முறைகள் யாவை?
24. ஓம் விதியைக் கூறுக.
25. "மூன்றாவது கோண வகை படம்" என்றால் என்ன?
26. "வெட்டுத்தளம்" என்றால் என்ன?
27. ISO என்பதன் விரிவாக்கம் யாது?
28. ஆட்டோ கேடில் OSNAP மற்றும் ORTHOMODE இன் செயல் பாடுகளை ஒப்பிடுக.

பகுதி – இ

ஒரு பக்க அளவில் விடையளி 5X5 =25

29. பிடிப்பான்களின் வகைகள், பொருத்தப்படும் இடம் மற்றும் பயன்களை கூறுக.
30. ஒரு வெர்னியர் காலிப்பரின் முக்கிய அளவுக்கோலில் மிமீ கோடுகள் உள்ளது. முக்கிய அளவு கோலில் 49 பிரிவு தூரத்தை எடுத்து வெர்னியர் அளவு கோலில் 50 சம பாகங்களாக பிரிக்கப்பட்டுருப்பின் அதன் நுணுக்கம் என்ன.
31. வெட்டுளி எஃகின் வகைகளை கூறி விளக்குக?
32. எளிய பல்லிணைத் தொடர் படம் வரைந்து விளக்குக
33. நேர் திசை மின்னோட்டம் மற்றும் மாறு திசை மின்னோட்டம் ஒப்பிடுக.
34. சாவியின் முக்கிய அளவுகள் யாவை?
35. தலைப்புக் கட்டத்தில் குறிப்பிட வேண்டியவற்றை பட்டியலிடுக

பகுதி – ஈ

விரிவான விடையளி 2X10 =20

36. அ) இயந்திர பணியாளருக்கான பாதுகாப்பு குறிப்புகள் யாவை?

(அல்லது)

ஆ) வெர்னியர் காலிப்பெரின் படம் வரைந்து அதன் அமைப்பை விளக்குக.

37. அ) மின்சார உலையைப் பற்றி தெளிவான படத்துடன் விளக்குக.

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்ட படத்தைப் பார்த்து விடையளி.



அ) கொடுக்கப்பட்ட பாகத்தில் உள்ள PCD(Pitch Circle Diameter) யின் அளவு என்ன?

ஆ) கொடுக்கப்பட்ட பாகத்தில் எத்தனை சிறுதுளைகள் போடப்பட்டுள்ளது?

இ) கொடுக்கப்பட்ட பாகத்தின் 'வெளிவிட்டம்' என்ன?

ஈ) கொடுக்கப்பட்ட பாகத்தின் "தடிமன் அளவு" (Thickness) என்ன?

உ) கொடுக்கப்பட்டபாகத்தில்அடுத்தடுத்துள்ள இரண்டு துளைகளுக்கிடையே உள்ள கோணத்தின் அளவு என்ன?

மேற்கோள் நூல்கள்

1. "A Textbook of Machine Design" by R.S. Khurmi and J.K. Gupta S.CHAND Publishers Reprint 2016. (Twice)
2. "Elements of workshop Technology" by S.K.Hajra Choudhury and A.K. Hajra Choudhury and Nirjhar Roy Media Promoters & Publishers pvt. Ltd, Reprint – 2014. Heat Treatment
3. T. V. Rajan, C.P. Sharma, Ashok Sharma Machinist – 1st year (Key for Wallcharts)
4. Director General of Employment and Training, Minister of Labour Govt. of India CIMI – Central Instructional Media Institute, Chennai – Indo – German Project.
5. NIMI – National Instructional Media Institute Chennai
6. "Accident Prevention Manual for Industrial Operations" , N.S.C.Chicago, 1982.
7. Blake R.B.,"Industrial Safety" Prentice Hall, Inc., New Jersey, 1973.
8. Dan Petersen, " Technique of Safety Management" , McGraw – Hill Company, Tokyo, 1981.
9. Heinrich H.W. "Industrial Accident Prevention "McGraw – Hill Company, New York, 1980.
10. John Ridley, "Safety at Work", Butterworth and Co., London, 1983.
11. Jayal A.K, "Instrumentation and Mechanical Measurements", Galgotia Publications , 2000.
12. Beckwith, Marangoni, Lienhard, "Mechanical Measurements", Pearson Education, 2006.

www.tnschoolbooks.in

இணையதள முகவரி

1.1 Industrial Safety – https://www.youtube.com/watch?v=CJMirmZSGiw

1.2 Industrial First Aid – https://www.youtube.com/watch?v=idjGAW1cpzM

2.1 Hand Tools – https://www.google.co.in/search?q=hand+tools&hl=en-IN&gbv=2&prmd=ivnspb&source=lnms&tbm=isch&sa=X&ved=0ahUKEwiDjsfFk4nZAhUMPY8KHctaD-0Q_AUIBQ

3.1 Measuring Instruments – https://www.google.co.in/search?q=measuring+instruments+in+workshop&source=lnms&tbm=isch&sa=X&ved=0ahUKEwilvKyQlInZAhWF6Y8KHaQoAmcQ_AUICigB&biw=1366&bih=654

3.2 Measuring Gauges – https://www.marineinsight.com/tech/different-types-of-mechanical-measuring-tools-and-gauges-used-on-ships/

4.1 Engineering Material – https://www.google.co.in/search?q=engineering+materials&source=lnms&tbm=isch&sa=X&ved=0ahUKEwjW3ayOlYnZAhVFtI8KHftFB5gQ_AUICygC&biw=1366&bih=654

5.1 Heat Treatment – https://www.google.co.in/search?q=pack+carburizing&source=lnms&tbm=isch&

6.1 Foundry – https://en.wikipedia.org/wiki/Foundry

6.2 Moulding Process – https://en.wikipedia.org/wiki/Molding_(process)

7.1 Fasteners – https://en.wikipedia.org/wiki/Fastener

7.2 Jigs and Fixtures – https://www.youtube.com/watch?v=CA3GnfImGmw

8.1 Standardization – https://en.wikipedia.org/wiki/Standardization

8.2 Fits and Tolerance – http://www.cobanengineering.com/Tolerances/ISOHoleandShaftBAsisLimitsAndFits.asp

9.1 Belt Drive – https://www.youtube.com/watch?v=LVro9AMkPAU

9.2 Gear Drive – https://www.youtube.com/watch?v=N6kI1CBG24o

10.1 Electricity – https://www.youtube.com/watch?v=D2monVkCkX4

11.1 Industrial Management – https://en.wikipedia.org/wiki/Industrial_management

11.2 Electrical Motor – https://www.youtube.com/watch?v=LAtPHANEfQo

12.1 Cost Estimation – https://en.wikipedia.org/wiki/Cost_estimate

XI_TM_BME_Tamil_Chapter10_2022.indd 144 1/25/2023 5:00:45 PM

அடிப்படை இயந்திரவியல்

செய்முறை

www.tnschoolbooks.in

பொருளடக்கம்

செய்முறை – I பொறியியல் வரைபட பயிற்சி

பயிற்சி 1 எண்ணும், எழுத்தும் எழுதும் முறை

பயிற்சி 2 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராபிக் தோற்றங்கள் வரைதல் – வரைபடம் 1

பயிற்சி 3 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராபிக் தோற்றங்கள் வரைதல் – வரைபடம் 2

பயிற்சி 4 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராப்பிக் தோற்றங்கள் வரைதல் – வரைபடம் 3

பயிற்சி 5 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராபிக் தோற்றங்கள் வரைதல் – வரைபடம் 4

பயிற்சி 6 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராப்பிக் தோற்றங்கள் வரைதல் – வரைபடம் 5

பயிற்சி 7 கொடுக்கப்பட்ட ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை (Objective) கொண்டு, ஐசோமெட்ரிக் வரைபடம் வரைதல். – வரைபடம் 1

பயிற்சி 8 கொடுக்கப்பட்ட ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை (objective) கொண்டு, ஐசோமெட்ரிக் வரைபடம் வரைதல். – வரைபடம் 2

பயிற்சி 9 கொடுக்கப்பட்ட ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை (objective) கொண்டு, ஐசோமெட்ரிக் வரைபடம் வரைதல். – வரைபடம் 3

பயிற்சி 10 கொடுக்கப்பட்ட ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை (objective) கொண்டு, ஐசோமெட்ரிக் வரைபடம் வரைதல். – வரைபடம் 4

பயிற்சி 11 கொடுக்கப்பட்ட ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை (objective) கொண்டு, ஐசோமெட்ரிக் வரைபடம் வரைதல். – வரைபடம் 5

பயிற்சி 12 கொடுக்கப்பட்ட பொருளின் ஐசோமெட்ரிக் தோற்றத்தில் வெட்டுப் பகுதிக்கான வெட்டுத் தோற்றம் வரைதல். – வரைபடம் 1

பயிற்சி 13 கொடுக்கப்பட்ட பொருளின் ஐசோமெட்ரிக் தோற்றத்தில் வெட்டுப் பகுதிக்கான வெட்டுத் தோற்றம் வரைதல். – வரைபடம் 2

செய்முறை – II AUTOCAD மென்பொருளில் பொறியியல் வரைபட பயிற்சி

பயிற்சி 14 ஆட்டோகேட் மென்பொருளை (AUTOCAD Software) பயன்படுத்தி இரு பரிமாண முறையில் படம் வரைதல்.

பயிற்சி 15 கொடுக்கப்பட்ட முப்பரிமாண பொருளின் வெட்டுத் தோற்றத்தின் அமைப்பையும், அளவுகளையும் இருபரிமாண முறையில் ஆட்டோகேட் மென்பொருளை பயன்படுத்தி வரைதல்.

பயிற்சி 16 ஆட்டோகேட் மென்பொருளை பயன்படுத்தி இருபரிமாணத்தில் கொடுக்கப்பட்ட தோற்றத்தினை வரைதல்.

பயிற்சி 17 ஆட்டோகேட் மென்பொருளை பயன்படுத்தி இருபரிமாணத்தில் கொடுக்கப்பட்ட தோற்றத்தினை வரைதல்.

பயிற்சி 18 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை ஆட்டோகேட் மென்பொருளை பயன்படுத்தி இருபரிமாண முறையில் வரைக.

பயிற்சி 19 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை ஆட்டோகேட் மென்பொருளை பயன்படுத்தி இருபரிமாண முறையில் வரைக.

பயிற்சி 20 வெட்டப்பட்ட பாகத்தின் வெட்டுத் தோற்றத்தினை ஆட்டோகேட் மென்பொருளை பயன்படுத்தி வரைக.

XI_TM_BME_Tamil_Practicals_2022.indd 146 1/31/2023 11:53:17 AM

www.tnschoolbooks.in

செய்முறை–I
பொறியியல் வரைபட பயிற்சி

XI_TM_BME_Tamil_Practicals_2022.indd 147 1/31/2023 11:53:17 AM

www.tnschoolbooks.in

எண்ணும், எழுத்தும் எழுதும் முறை 1

நோக்கம் :

பொறியியல் வரைபடம் வரைதலின் முறைகளை பின்பற்றி எண்ணும், எழுத்தும், எழுதுதல்

செயல்முறை திட்டத்தின் செயல்பாடு : (செயல் வழி படம்)

வரைபடத்தாள் தேர்ந்தெடுத்தல்

↓

வரைபடக் கருவிகள் தேர்வு செய்தல்

↓

எண் மற்றும் எழுத்துகளின் அளவுகளை அறிந்து கொள்ளுதல்

↓

வரைபடத்தாளில் எண்ணும், எழுத்துகளையும்
கொடுக்கப்பட்ட அளவுகளில் எழுதுதல்

தேவையான கருவிகளும், சாதனங்களும் :

பிரிவு செயல்பாடு தலைப்பு	வரிசை எண்	கருவி / உபகரணத்தின் பெயர்	வரம்பு / மதிப்பு	எண்ணிக்கை
தேவையான பொருட்கள்	1	வரைபட பலகை	D_2 அளவு(700 x 500 x 15 மிமி)	1
	2	டிராப்டர்	சிறியது	1
	3	பென்சில் மற்றும் கரிமுனைகள் (Pencil Lead)	H, 2H, HB	1
	4	அளவுகோல்	1 அடி	1
	5	பாகைமானி	0° to 180°	1
	6	கருவிப் பெட்டி	–	1
	7	வரைபடத்தாள்	A_2 அளவு(594 x 420 x மிமி)	1
	8	பிரெஞ்ச் வளைவுகள்	–	2

XI_TM_BME_Tamil_Practicals_2022.indd 148 1/31/2023 11:53:17 AM



செயல்முறை: (Procedure)

படி 1: எண் மற்றும் எழுத்துகளை வரைவதற்கு சரியான அளவுள்ள வரைபடத்தாளினை தேர்வு செய்ய வேண்டும்.

படி 2: சரியான வரைபட கருவிகள் மற்றும் பொருட்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

படி 3: வரைப்படத்தாளினை, வரைபட பலகையின் மீது வரைதல் ஊசிகள் (Drawing Pins) (அ) பிடிப்புகளை (Clips) கொண்டு பொருத்தப்பட வேண்டும்.

படி 4: வரைவு கருவியை (Mini drafter) வரைபட பலகையின் மீது சரியான இடத்தில் பொருத்தப்பட வேண்டும்.

படி 5: வரை படத்தாளின் நான்கு பக்கங்களிலும் சரியான அளவிற்கு எல்லைக் கோடுகள் மற்றும் தலைப்பு கட்டம் வரைய வேண்டும்.

படி 6: வரைபடத்தாளில் சரியான அளவிற்கு கிடைமட்ட மற்றும் செங்குத்து கோடுகள் வரைய வேண்டும்.

படி 7: சரியான அளவு மற்றும் இடைவெளியில் எழுத்துகளை (செங்குத்து (அ) சாய்வு வடிவம்) மெல்லிய வடிவில் வேண்டும்.

படி 8: சரியான அளவில் எண்களை செங்குத்து அமைப்பில் குறிப்பிட்ட இடைவெளியில் எழுத வேண்டும்.

படி 9: மேற்குறிப்பிட்ட அமைப்பில் எழுதப்பட்ட எழுத்துகள் மற்றும் எண்களை HB பென்சிலை பயன்படுத்தி தடித்த நிலையில் எழுத வேண்டும்.

படி 10: இறுதியாக வரைபடத்தாளினை, சரியான நிலையில் மடிக்கப்பட்டு கோப்புகளில் வைக்கப்பட வேண்டும்.

முடிவுரை: (Conclusion)

மாணவர்கள் பொறியியல் வரைபட தரத்திற்கு ஏற்ப எழுத்துகளையும், எண்களையும் எழுதும் முறையை அறிந்து எழுதினர்.

காணொலிக்கான பரிந்துரைகள் : (Video Suggestions)

வ. எண்	தலைப்பு / நோக்கம்	இணைப்பு
1.	எண்கள் மற்றும் எழுத்துகள் வரைதல்	https://youtu.be/ST 75 fk4Qpy

எளிய மதிப்பீடு : (Simple Assessment)

1. எண் மற்றும் எழுத்துகளின் உயரத்திற்கும், அகலத்திற்கும் இடையே உள்ள விகிதம் ___________________.
2. வரைபடத்தின் தலைப்பு அளவு ___________________
3. ஒரே சீரான தடிமனில் எழுதும் எழுத்துகளுக்கு ___________________ என்று பெயர்.
4. சாய்வு எழுத்துகளின் கோண அளவு ___________________

விடை : 1. 7:4 (அ) 7:5

2. 6 (அ) 8 மி.மீ

3. கோத்திக் எழுத்துகள்

4. 75°

மாணவர் செயல் திட்டம்	பல்வேறு வகையான முறையில் எழுத்துகள் மற்றும் எண்களை பயன்படுத்தி வார்த்தைகள் மற்றும் எண் மதிப்புகளை எழுதச் செய்தல்
விரிவுரைக்கான் பரிந்துரைகள்	பொறியியல் கல்லூரி விரிவுரையாளர்கள், தொழிற்சாலையில் பணிபுரியும் வரைபட வரைவாளர்கள் கொண்டு எண் மற்றும் எழுத்துகளை எவ்வாறு வரைய வேண்டும் என்பதைப் பற்றி பயிற்சி அளித்தல்.
தொழிற்சாலை / களப்பணி பார்வைக்கான பரிந்துரைகள்	கல்வி நிறுவனங்கள் (பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி / தொழிற்சாலைகள் பார்வையிட செய்து அங்கு வரையப்பட்டுள்ள வாக்கிய அமைப்பு மற்றும் எண்கள் முறையை பார்வையிட செய்தல்.

XI_TM_BME_Tamil_Practicals_2022.indd 150 1/31/2023 11:53:17 AM

2 கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திற்கான ஆர்த்தோகிராபிக் தோற்றங்கள் வரைதல்

(முதல் கோண புரொஜெக்சன் படி) வரைபடம் – 1

நோக்கம்:

கொடுக்கப்பட்ட பொருளின் ஐசோமெட்ரிக் தோற்றத்தினை கொண்டு ஆர்த்தோகிராபிக் தோற்றங்கள் (முன்பக்க தோற்றம், மேல்பக்க தோற்றம் மற்றும் பக்க தோற்றம்) வரைதல்.

செயல்முறை திட்டத்தின் செயல்பாடுகள் : (OPERATIONS COVERED)

வரைபடத்தாள் தேர்ந்தெடுத்தல்

↓

வரைபடக் கருவிகள் மற்றும் பொருட்கள் தேர்ந்தெடுத்தல்

↓

கொடுக்கப்பட்ட பொருளின் ஐசோமெட்ரிக் தோற்றத்தின் அளவுகளை படித்தல்

↓

நான்கு கால் பகுதிகளை வரைதல்

↓

முதல் கால்பகுதியில் முன்பக்க தோற்றத்தைத்தினை (Elevation) வரைதல்

↓

நான்காம் கால்பகுதியில் மேல்பக்க தோற்றத்தினை வரைதல்

↓

இரண்டாம் கால்பகுதியில் பக்கத் தோற்றத்தினை வரைதல்

பிரிவு செயல்பாடு தலைப்பு	எண்	கருவி / உபகரணத்தின் பெயர்	வரம்பு / மதிப்பு	எண்ணிக்கை
தேவையான பொருட்கள்	1	வரைபட பலகை	D_2 அளவு	1
	2	வரை கருவி (Mini Drafter)	சிறிய வகை	1
	3	பென்சில் மற்றும் பென்சில் முனைகள்	H, 2H, HB	1
	4	அளவுகோல்	1 அடி	1
	5	பாகைமானி	$0°$ to $180°$	1
	6	கருவிப் பெட்டி	–	1
	7	வரைபடத்தாள்	A_2 அளவு	1
	8	பிரெஞ்ச் வளைவுகள்	–	2

XI_TM_BME_Tamil_Practicals_2022.indd 151 1/31/2023 11:53:17 AM



செய்முறை:

படி 1 : கொடுக்கப்பட்ட படத்திலிருந்து, ஐசோமெட்ரிக் தோற்றத்தின் அளவுகளை (பொருளின் நீளம் அகலம் மற்றும் உயரம்) படித்தல் வேண்டும்.

படி 2 : கொடுக்கப்பட்ட படத்தில், அம்புக்குறி குறியீடு எந்த தோற்றத்தை நோக்கி உள்ளதோ, அதனை முன்பக்க தோற்றமாக தேர்ந்தெடுக்கவேண்டும்.

படி 3 : 90°இருக்குமாறு நான்கு கால்பகுதிகளை வரைந்து, வலது மேல்பக்க கால்பகுதி முதல் கால் பகுதி எனவும், அதனையடுத்த கால்பகுதிக்கு இரண்டாம் கால்பகுதி எனவும், அதற்கு நேர் கீழ்பகுதி மூன்றாம் கால்பகுதி எனவும் அதனையடுத்த கால்பகுதிக்கு நான்காம் கால்பகுதி எனவும் பெயரிட வேண்டும்.

படி 4 : கொடுக்கப்பட்ட பொருளின் ஐசோமெட்ரிக் தோற்றத்தின் முன்பக்க தோற்றத்தில் தெரிகின்ற பகுதிகளை கொடுக்கப்பட்ட அளவுகளில் முதல் கால்பகுதியில் வரைய வேண்டும்.

படி 5 : முன்பக்க தோற்றத்திலிருந்து வலதுபக்க தோற்றம் வரைவதற்காக கிடைமட்ட நீட்சிக் கோடுகள் வரைய வேண்டும். அதே போல் மேல்பக்க தோற்றம் வரைவதற்காக முன்பக்க தோற்றங்களிலிருந்து கீழ்நோக்கி செங்குத்துக் நீட்சிக் கோடுகள் வரைய வேண்டும்.

படி 6 : மேல்பக்க தோற்றத்தை நான்காம் கால்பகுதியிலும், வலதுபக்க தோற்றத்தை இரண்டாம் கால்பகுதியிலும், கொடுக்கப்பட்ட ஐசோமெட்ரிக் தோற்றத்திலுள்ள அளவுக்கு ஏற்ப வரைய வேண்டும்.

படி 7 : முடிவில் வரைபடத்தாளினை சரியான முறையில் மடித்து வைக்க வேண்டும்.

XI_TM_BME_Tamil_Practicals_2022.indd 152 1/31/2023 11:53:18 AM

முடிவுரை:

கொடுக்கப்பட்ட பொருளின் ஐசோமெட்ரிக் தோற்றத்திலிருந்து ஆர்த்தோ கிராப்பிக் தோற்றங்கள் வரையப்பட்டுள்ளது.

காணொலி பரிந்துரைகள் (Video Suggestions)

வ. எண்	தலைப்பு / நோக்கம்	இணைப்பு
1.	ஐசோமெட்ரிக் தோற்றத்திலிருந்து ஆர்த்தோ கிராபிக் தோற்றம் வரைதல்	http://youtu.be/Co FiimqKLBo

எளிய மதிப்பீடு : (Simple Assessment)

1. ஒவ்வொரு கால்பகுதிக்கும் இடைப்பட்ட கோணம் ___________________________.
2. முதல் கோண புரொஜெக்சன் படி, முன்பக்க தோற்றமானது ___________________________ கால்பகுதியில் வரையப்படுகிறது.
3. கொடுக்கப்பட்ட படத்தின் முன்பக்க தோற்றத்தின் நீளம் மற்றும் உயரம் ___________________________.
4. மேல்பக்க தோற்றத்தின் நீளம் ___________________________.
5. பக்க தோற்றத்தின் நீளம் ___________________________.

விடை :

1. 90° 2. முதல் கால்பகுதி 3. 80 மிமீ மற்றும் 40மிமீ 4. 60 மிமீ 5. 60 மிமீ

மாணவர் செயல் திட்டம்	வெவ்வேறு வகையான பொருளின் ஐசோமெட்ரிக் தோற்றங்களுக்கான, ஆர்த்தோகிராபிக் தோற்றங்கள் வரையச் செய்தல்.
விரிவுரைக்கான பரிந்துரைகள்	பொறியியல் கல்லூரி விரிவுரையாளர்கள் / வரைபட வரையாளர்களை கொண்டு ஆர்த்தோகிராபிக் தோற்றங்களை வரையும் முறைகள் பற்றி பயிற்சி அளித்தல்.
தொழிற்சாலை / களப்பணி பார்வைக்கான பரிந்துரைகள்	பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில் நுட்ப பயிலகங்களை பார்வையிட செய்தல்.

XI_TM_BME_Tamil_Practicals_2022.indd 153 1/31/2023 11:53:18 AM

